In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

திருக்குடந்தைத் திருமுறைத் தலங்களும் சைவசமயக் கட்டுரைகளும்

மகாமகப் பெருவிழாச் சிறப்புமலர்

(1992)

வெளியீடு :

சைவ சித்தாந்தப் பெருமன்றம்

4 (முதல்மாடி), வேங்கடேச அக்கிரகாரம் சாலை,

மயிலாப்பூர், சென்னை-600 004

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

C.S.S.

உ

திருக்குடந்தைத் திருமுறைத் தலங்களும் சைவசமயக் கட்டுரைகளும்

(மகாமகப் பெருவிழாச் சிறப்புமலர்)

நூல் வரவு 1.11.2002
by CASH

பதிப்பாசிரியர்கள் :
வித்துவான் அம்பை இரா. சங்கரன்
ம. அண்ணாமலை

திருவாவடுதுறை ஆதீனம்
சீர் - வளர் - சீர்
குரு மகா சன்னிதானம்
அவர்கள் வாழ்த்தி வழங்கி
அருளியது ....

- 5 MAR 2003

வெளியீடு :
சைவ சித்தாந்தப் பெருமன்றம்,
4 (முதல்மாடி), வேங்கடேச அக்கிரகாரம் சாலை,
மயிலாப்பூர், சென்னை-600 004

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிப்ரவரி, 1992

விலை : ரூபா 7-00

சைவ சித்தாந்தப் பெருமன்றம், சென்னை-4
மகாமகச் சிறப்புவிழாக் குழுவினர் :

1. திரு. கி. இல. பழநிசுவாமி பி. ஏ., எல். டி.
2. திரு. வித்துவான் அம்பை சங்கரன்
3. திரு. ம. அண்ணாமலை
4. திரு. ந. ஒளியரசு பி. ஏ., பி. காம்.,
5. திரு. மா. கோடிலிங்கம் பி. ஏ.,
6. திரு. டி. எஸ். சுப்பிரமணிய முதலியார்
7. திரு. ஆர். திருநாவுக்கரசு முதலியார் பி. ஏ., (குடந்தை)
8. திரு. வி. வைத்தியலிங்கம் செட்டியார் (ஆடுதுறை)

அச்சிட்டோர் : கவின்கலை அச்சகம்,
கந்தசாமிநகர், பாலவாக்கம்,
சென்னை-600 041
தொலைபேசி : 41 71 41

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சைவ சித்தாந்தப் பெருமன்றம், சென்னை-4
1991-1992 செயற்குழு உறுப்பினர்கள்

திரு. கி. இல. பழநிசுவாமி பி. ஏ., எல். டி., தலைவர்
திரு. கொ. நீ. சிங்காரவேலு எம். ஏ., துணைத் தலைவர்
திரு. ம. அண்ணாமலை, துணைத் தலைவர்
திரு. ந. ஒளியரசு பி. ஏ., பி. காம்., செயலாளர்
திரு. நா. இலக்குமணகுமார் எம். ஏ., துணைச் செயலாளர்
திரு. ச. ஆறுமுகம் டி. எம். ஈ., துணைச் செயலாளர்
திரு. பி. கே. கௌரிசங்கர், பொருளாளர்
திரு. வித்துவான் அம்பை இரா. சங்கரன், 'சித்தாந்தம்' ஆசிரியர்
திரு. சு. பாலசுந்தரம், 'சிந்தாந்தம்' துணை ஆசிரியர்
திரு. கைவண்டூர் கே. இராசு முதலியார்
திரு. நே. த. கிருஷ்ணசாமி முதலியார் எம். ஏ., எல். டி.,
திரு. புலவர். சொ. முருகேசன்
திரு. அ. பழநியப்பன்
திரு. டி. எஸ். சுப்பிரமணிய முதலியார்
திரு. மு. இரகுபாய் பி. எஸ்ஸி., எம். ஏ.,
திரு. புலவர் ஆ. வீரவாகு
திரு. ச. சாந்தலிங்கம்
திரு. பொன். நடேசன் பி. ஏ., பி. எல்.,
திரு. எம். இராமலிங்கம் பி. காம்.,
திரு. புலவர் ஆர். வேங்கடேசன்
திரு. மா. கோடிலிங்கம் பி. ஏ.,
திரு. பூவை. அரங்கநாதன்
திரு. என். பாலகிருஷ்ணன்
திரு. எஸ். கே. சாந்தமூர்த்தி எம். ஏ.,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உள்ளுறை

		பக்கம்
i	பதிப்புரை	v
ii	அணிந்துரை	vii
iii	ஆசியுரையும், வாழ்த்துரையும்	xi
1.	பன்னிரு திருமுறைத் திரட்டு	1
2.	பொன்னிவளநாடு	5
3.	தஞ்சை மாவட்டத் தனிச்சிறப்பு	11
4.	கும்பகோணம் நகரச் சிறப்பு	15
5.	மகாமக மகிமை	20
6.	திருக்குடமூக்குத் தலவரலாறு	24
	,, தலப்பதிகம்	28
7.	திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம் தலவரலாறு	33
	,, ,, தலப்பதிகம்	38
8.	திருக்குடந்தைக் காரோணம் வரலாறு	42
	,, ,, தலப்பதிகம்	44
9.	திருக்குடந்தைத் திருப்பதிகங்கள் விளக்கவுரை —பேராசிரியர் டாக்டர். கு. சுந்தரமூர்த்தி	46
10.	பொது மக்களுக்குச் சித்தாந்த உண்மைகள் —சைவப் பாதிரியார். ச. சச்சிதானந்தம் பிள்ளை	52
11.	சித்தாந்த சைவத்தின் முதற்பொருளும் அணையும் நெறியும் —சித்தாந்த வித்தகர் க. வச்சிரவேல் முதலியார்	65
12.	சைவ சமயம் தமிழ்நெறியே —மகா வித்துவான் டாக்டர். சி. அருணைவடிவேல் முதலியார்	67
13.	தமிழ் ஆகமம் —பேராசிரியர் க. வெள்ளை வாரணனார்	75
14.	சைவசமயம் (கவிதை) —புலவரேறு ந. ரா. முருகவேள்	78
15.	சித்தாந்தம் —வித்துவான் அம்பை இரா. சங்கரன்	80
16.	சைவசித்தாந்தப் பெருமன்றத்தின் தனிச்சிறப்பு —கொ. நீ. சிங்காரவேலு முதலியார்	84
17.	சைவ சித்தாந்தப் பெருமன்ற வரலாறு, கொள்கைகள், தொண்டுகள் —ந. ஒளியரசு	88

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ
திருச்சிற்றம்பலம்

பதிப்புரை

தென்னிந்தியாவின் மிகப்பெரிய விழா "மாமாங்கம்" எனப் படும் மகாமகம். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மாசிமகத் திருநாளில் கும்பகோணம் என வழங்கும் திருக்குடந்தைத் திருத்தலத்தில் அவ்விழா நடைபெறுகிறது. வடநாட்டுக் கும்பமேளா (அலகாபாத்தில் நிகழ்வதைப்) போல் இதுவும் அனைத்திந்தியப்புகழ் வாய்ந்த தீர்த்தப் பெருவிழாவாகும். பாரத நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் பன்னூறாயிரக் கணக்கான மக்கள் திரண்டுவருவர் குடந்தையிலுள்ள மகாமகக் குளத்தில் கங்கை, யமுனை, சரசுவதி, நருமதை, கோதாவரி, காவேரி, சரயு சிந்து, மகாநதி ஆகிய ஒன்பது தீர்த்தங்களும் குறிப்பிட்ட நேரத்தில் ஒன்று சேர்ந்து எல்லாம்வல்ல பரம் பொருளை வழிபட்டு நற்பேறு பெறுவதுடன் அக்குளத்தில் முழுகி வழிபடும் அன்பர்களையும் நற்பேறடையச் செய்வதாக ஐதீகம்.

இவ்விழா பல நூற்றாண்டுகளாக நிகழ்ந்து வருகிறது என்பதற்குத் திருமுறையில் ஆதாரங்கள் உள்ளன. இப்படிப்பட்ட தீர்த்தச் சிறப்புடைய விழா 18-2-92 அன்று நடைபெறுவதை ஒட்டிப் பெருமன்றச் சார்பில் மலர் வெளியீடு, சமயச் சொற்பொழிவு, திருமுறை இசையரங்கு, பாடல் பெற்ற தலப்பயணம் ஆகியவற்றை நடத்துவது என்று பெருமன்றச் செயற்குழுவில் முடிவு செய்யப்பட்டது. அதன்படி 17-2-92, 18-2-92 நாட்களில் திரு நாகேசுவரம் அருள்மிகு நாகநாத சுவாமி திருக்கோயிலில் "திருக் குடந்தைத் திருமுறைத் தலங்களும், சைவ சமயக் கட்டுரைகளும்" என்னும் இச்சிறப்பு மலர் வெளியீடும், சமயச் சொற்பொழிவு, இசையரங்கு முதலியனவும் நடைபெறுகின்றன. நமது மன்றத்தைத் தொடங்கி வைத்த திருப்பாதிரிப்புலியூர் தவத்திரு. ஞானியாரடி களின் அவதாரத் தலமான திருநாகேச்சுவரத்தில், இந்நிகழ்ச்சி நடைபெறுவது மற்றுமோர் பெருஞ்சிறப்பாகும்.

திருமுறைக் காவலர் ருக்குமணிகுக்கர் திரு. அ. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் நிறுவியுள்ள சைவசித்தாந்தப் பெருமன்றக் கட்டிட வாரிய நிதியிலிருந்து இம்மலர் வெளியிடப்படுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இம்மலரைக் குறுகிய காலத்தில் சிறந்த முறையில் அச்சிட்ட சென்னை பாலவாக்கம் கவின்கலை அச்சகம் கவிஞர் நாரா. நாச்சியப்பன் அவர்களுக்கும், கட்டுரை வழங்கிய அறிஞர் பெருமக்களுக்கும், குடந்தைத் திருப்பதிகங்களுக்கு விளக்கவுரை வழங்கிய டாக்டர். கு. சுந்தரமூர்த்தி ஆகியோருக்கும், இம்மலருக்காக அணிந்துரை வழங்கியுள்ள பெருமன்ற முன்னாள் தலைவர் திரு. கோ. மு. முத்துசாமிபிள்ளை ஐ. ஏ. எஸ். ஓய்வு அவர்கட்கும் வாழ்த்துரை நல்கியருளிய திருவாவடுதுறை ஆதீனம், தருமபுரம் ஆதீனம், திருப்பனந்தாள் தம்பிரான் சுவாமிகள், தொண்டைமண்ட ஆதீனம், திருவண்ணாமலை ஆதீனம் ஆகிய குருமகாசந்நிதானங்களுக்கும், இரத்தினகிரி பாலமுருகனடிமை சுவாமிகள், முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம், அருட்செல்வர் டாக்டர் நா. மகாலிங்கம், மாண்பமை நீதிபதி திரு. அரு. இலக்குமணன் ஆகியோர்க்கும் எங்கள் நன்றி உரியவாகும்.

வீ. இல. பழநிசுவாமி
தலைவர்
ந. ஒளியரசு
செயலாளர்

பதிப்பாசிரியர்கள்
அம்பை இரா. சங்கரன்
(ஆசிரியர் 'சித்தாந்தம்')
ம. அண்ணாமலை
20-1-92

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அணிந்துரை

கோ. மு. முத்துசாமிபிள்ளை ஐ. ஏ. எஸ். (ஓய்வு)
(முன்னாள் தலைவர், சைவசித்தாந்தப் பெருமன்றம், சென்னை-4)

இந்திய நாட்டின் பல பகுதிகளிலிருந்து மட்டுமன்றி, அயல் நாடுகளிலிருந்தும் அன்பர்கள் திரள் திரளாக வந்து கலந்து கொள்ளும் கும்பகோணம் மகாமகப் பெருவிழாவின் போது 18-2-92-ஆம் நாள் சைவத் திருமுறைகளின் இசை அரங்குத் தொடக்கத்தோடு சைவ சமயக் கோட்பாடுகளைச் சைவ சித்தாந்தப் பெருமன்றம் விளக்கி இவற்றிற்காக, ஒரு மலரும் வெளியிடுவது மிகவும் பொருத்தமாகும்.

பெருமன்றத்தின் வரலாற்றையும் செயல்பாட்டையும் பற்றிச் சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின் முன்னாள் தலைவரும் இந்நாள் துணைத்தலைவருமாகிய கொ. நீ. சிங்காரவேலு முதலியார் அவர்கள் நன்கு எடுத்துக்காட்டியுள்ளார். பெருமன்றம் தொடர்ந்து ஆற்றி வரும் பணிகளைப் பெருமன்றத்தின் செயலாளர் திரு. ந. ஒளியரசு அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளார்.

சைவ சமயத்தின் முக்கியமான கோட்பாடுகளை இப்பெருமன்றத்தின் முன்னாள் செயலாளரும் இந்நாள் சித்தாந்த ஆசிரியருமாகிய வித்துவான் அம்பை சங்கரர் தமக்கே உரிய தமிழ் நன்னடையில் தந்துள்ளார். பொது மக்கள் சைவ சித்தாந்தத்தை எளிதில் உணர்ந்து கொள்ள இயலுமாறு விளக்கம் தந்துள்ளார். அமரர் சைவப் பெரியார் திரு. சச்சிதானந்தம்பிள்ளை அவர்கள். 'சைவ சித்தாந்தத்தின் முதற்பொருளும் அதனை அணையும் நெறி' பற்றிச் சித்தாந்த வித்தகர் அமரர் திரு. வச்சிரவேலு முதலியார் எடுத்துரைத்துள்ளார். ''சைவ சமயம் தமிழ் நெறியே'' எனும் தலைப்பில் கட்டுரை அளித்துள்ளவராகிய மகாவித்துவான் டாக்டர் சி. அருணைவடிவேலு முதலியார் அவர்களைச் சைவ உலகும் நன்கு அறியும். அவர்கள் கருத்துக்களை மக்கள் விரும்பித் தெரிந்து கொள்வார்கள் என நம்பலாம். ''சைவ சமயம்'' என்னும் தலைப்பில் புலவரேறு அமரர் திரு. ந. ரா. முருகவேள் அவர்கள் புனைந்துள்ள கவிதை மனமுருகப் படித்துப் படித்து இன்புறத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தக்கதாகும். ''தமிழ் ஆகமம்'' என்ற வித்துவான் க. வெள்ளை வாரணனார் கட்டுரை, திருமந்திர நூல் அமைப்பை நன்கு புலப்படுத்துகிறது.

மகாமக விழாவை ஒட்டி மகாமகப் பெருவிழாவைப் பற்றியும் அவ்விழா நடைபெறும் நகராகிய கும்பகோணத்தைப் பற்றியும் அக்கும்பகோணத்தைத் தன்னுள் கொண்டு திகழும் தஞ்சாவூர் மாவட்டத்தையும் மகாமகப் பெருவிழாவில் கலந்து கொள்ளும் அன்பர்கள் மனங்குளிர்ந்து ஏற்றுக் கொள்ளத் தக்க பேருண்மைகள் பற்றியும் இம்மலர் தொகுத்துக் கூறுகிறது.

சோழ வளநாட்டின் நெற்களஞ்சியமாக விளங்கி வரும் தஞ்சாவூர் மாவட்டம் கலைக்களஞ்சியங்களாக விளங்கும் பல கோயில்களைத் தன்னகத்தே கொண்டது. இம்மாவட்டத்தில் அழகுற அமைந்துள்ள கும்பகோணம் நகருக்கு வடபால் காவிரியும் தென்பால் அரிசொல் ஆறாகிய அரசலாறும் அந்நகருக்கு மாலை அணிவிப்பது போல் அமைந்துள்ளன.

கும்பகோணத்தில் குடமூக்கு கும்பேசுவரர் கோயிலாகவும் குடந்தைக் கீழ்க்கோட்டம் நாகேசுவரர் கோயிலாகவும் குடந்தைக் காரோணம் சோமேசுவரர் கோயிலாகவும் விளங்குகின்றன. இக்கோயில்களின் அருமைகளையும் பெருமைகளையும் இம்மலர் அணிவகுத்துக் காட்டுகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக மகாமகம் பற்றி பல அரிய உண்மைகளை இம்மலர் புலப்படுத்துகிறது. ''திருக்குடந்தைத் திருப்பதிகங்களின் விளக்கவுரை''யை டாக்டர் கு. சுந்தரமூர்த்தி, மிக அருமையாக விளக்கியுள்ளார்கள்.

மகாமகத் திருவிழா நாளில் கங்கை முதலிய ஒன்பது தீர்த்தங்களும் இங்கு நவகன்னியர்களாக நீராடுகிறார்கள் என்பதால், மகாமகத் தீர்த்தம் கன்னியர் தீர்த்தம் என்னும் பெயர் பெற்றுள்ளது. இந்நிகழ்ச்சி ஒருவாறு திருநாவுக்கரசு நாயனார் அருளிய திருக்குடமூக்குப் பதிகத்தில் கூறப்படுகிறது. கங்கை இங்கு வந்திருப்பதை,

> '' நங்கையா ளுமையா ளுறைநா தனார்
> அங்கையா ளொடறு பதந் தாழ்சடைக்
> கங்கை யாளவள் கன்னியெ னப்படும்
> கொங்கை யாள் உறை யுங் குட மூக்கிலே.''

(திருமுறை 5-22-3)

என்னும் பாடலும், இவ்வாறு கோதாவரி இங்கு விளங்குவதை,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

" ஓதாநா வன்திறத்தை யுரைத்திரேல்
ஏதானுமினி தாகும்மியமுனை
சேதாஏ றுடையான மர்ந்தவிடம்
கோதாவிரி யுறையுங் குடமூக்கிலே"

(திருமுறை 5,22-8)

என்னும் பாடலும், இவ்வாறு சரசுவதி இங்கு இருப்பதை,

" காமியஞ் செய்து காலங் கழியாதே
ஓமியஞ் செய்தங் குள்ளத் துணர்மினோ
சாமியோடு சரச் சுவதியவள்
சோமியும் உறையுங் குடமூக்கிலே"

(திருமுறை 25-2-8)

என்னும் பாடலும் தெரிவிக்கின்றன.

இங்குள்ள மகாமகக் குளத்துக் கரையைச் சுற்றியும் பிரதீர்த்தேசம், முகுந்தேசம், தனேசம், இடபேசம், பாணேசம், சோமேசம், பக்ஷேசம், வயிரவரேசம், அகத்தீசம், வியாகேசம், கங்காதரேசம், பிரமேசம், முத்தத்தீர்த்தேசம் முதலிய கோயில்கள் அமைந்துள்ளன. இக்கோயில்களின் திருப்பணியையும் இங்குள்ள பதினான்கு சிவன் கோயில்களின் விமானங்களின் அமைப்புப் பணியையும் புரிந்தவர் கோவிந்ததீட்சிதர். இவர் மன்னன் அச்சுத நாயக்கரின் அமைச்சர். இவருக்கு ஐயன் என்னும் பெயரும் இருந்து வந்தது. கும்பகோணத்திலுள்ள ஐயம் தெருவும் இவர் பெயரைக் கொண்டுள்ளது. தஞ்சாவூர் ஐயன்பேட்டையும் இவரது பெயரில் அமைந்துள்ளது. கும்பகோணத்தில் இராஜா பாடசாலைக்கு அடுத்துள்ள யாக சாலைத் தெருவில் இவரது வேள்விச்சாலை இருந்தது. திருவிடைமருதூர், மயிலாடுதுறை முதலிய ஊர்களில் இவர் புரிந்த நற்பணிகள் மிகவும் போற்றத்தக்கன. இவரது திருவுருவமும் இவர் மனைவி திருவுருவமும் கும்பேசுவரர் கோயிலின் வடகிழக்குமுனைப் பிராகாரத்திலுள்ள வயிரவர் கோயிலில் காணலாம்.

பாடகச்சேரி இராமலிங்க சுவாமிகள் நாகேசுவரசுவாமி கோயிலைச் சீர்திருத்தித் திருப்பணிகள் பலபுரிந்து 1923-ஆம் ஆண்டில் இதற்குக் குடமுழுக்கு செய்வித்தார். அவர் புரிந்தவற்றில் இராஜகோபுரம், மேற்குக் கோபுரம், நடராஜர் மன்றம், மதில்சுவர்கள் சிங்கமுகத் தீர்த்தக் கிணறு முதலிய திருப்பணிகள் அடங்கும். இப்பணிகள் புரிய இப்பெருமான் தம் கழுத்தில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பித்தளைச் சொம்பை உண்டியலாகக் கட்டிக் கொண்டு பிச்சை ஏற்று வருவது போல் நிதி திரட்டிச் செயற்கரிய செயலைச் செய்து முடித்தார். இங்குச் சைவப்பணி சிறக்கச் செயலாற்றி வரும் சிவனடியார் திருக்கூட்டத்தினர் சோமேசுவரர் கோயிலை, குடந்தைக் காரோணமாக ஏற்றுக் கொண்டு காரோணத் திருப்பதிகத்தை 1958-ஆம் ஆண்டில் கல்லில் பொறித்துச் சுவரில் பதித்துள்ளார்கள்.

இங்குள்ள திருக்கோயில்களுக்குச் சைவ ஆதீனக்கர்த்தர்கள், காமகோடி பீடம், அருளாளர் ஆகியோர் அரிய திருப்பணிகள் செய்துள்ளார்கள். இந்நன்னாளில் அவர்களை ஆழ நினைவுகூர்ந்து போற்றக் கடமைப்பட்டுள்ளோம்.

இம்மலர் மிகச் சிறந்த முறையில் வெளிவர முன்வந்து உழைத்தவர்கள் இம்மலருக்குக் கட்டுரை எழுதி உதவியுள்ள வித்துவான் அம்பை சங்கரனாரும் பெருமன்றத்தின் துணைத் தலைவராகிய திரு. ம. அண்ணாமலை அவர்களும் ஆவார்கள். திரு. ம. அண்ணாமலை அவர்கள் மகாமகப் பெருமையைக் கொண்ட கும்பகோணத்தைச் சார்ந்தவர். இளவயதிலிருந்து இங்குள்ள கோயில்களின் வழிபாட்டில் திளைத்தவர். இத்தகைய சிறப்பு மிக்க திருவிழாவின்போது பெருமன்றம் இங்கு இம்மலரை வெளியிட்டுத் தனது அரும்பணியை விளக்கிக் காட்டவேண்டும் என்பதற்கு இதில் இவர் பெருமித ஊக்கம் கொண்டு செயற் படுகிறார். இவ்வகையில் இவருடைய முயற்சிகள் மிகமிகப் பாராட்டத்தக்கன.

பெருமன்றம் நடத்தும் விழா சிறப்புற நடைபெறவும் மகாமக விழாவில் கலந்து கொள்ளும் அன்பர்கள் அனைவரும் நல்வாழ்வு பெறவும் அனைவரும் இங்கு எழுந்தருளியுள்ள இறைவனை வழிபடுவோமாக!

இங்ஙனம்,

கோ. மு. முத்துசாமி

20-1-92

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

சிவமயம்

திருக்கயிலாய பரம்பரை

ஸ்ரீ-ல-ஸ்ரீ சிவப்பிரகாசதேசிக பரமாசாரிய சுவாமிகள்

குருமகாசந்நிதானம் திருவாவடுதுறை ஆதீனம்

திருவாவடுதுறை - 609 803 (தஞ்சாவூர் மாவட்டம்)

நாள் 9-1-1992

"நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க"

"வாழ்த்துரை"

சைவ சித்தாந்தப் பெருமன்றத்தார் அண்மையில் நிகழவுள்ள, மகாமகப் பெருவிழாவையொட்டி, திருநாகேச்சுரம் அருள்தரு நாகநாதப்பெருமான் திருக்கோயிலில் சமயச்சொற்பொழிவு, திருமுறை இசையரங்கு, மலர்வெளியீடு முதலிய சிவம் பெருக்கும் நிகழ்ச்சிகளை அமைத்துள்ளமையறிந்து மகிழ்கிறோம்.

விழா இருநாள் நிகழ்ச்சிகளும் சிறப்பாக நடைபெறவும் திருக்குடந்தை திருமுறைத் தலங்களின் அருட்சிறப்பை இனிது உணர்த்தும் திருமுறைப் பதிகங்களின் விளக்கம், மேன்மைகொள் சைவத்தின் உயர்நலன்களை விரித்துரைக்கும் சைவச் சான்றோர்களின் ஆய்வுக் கட்டுரைகள் முதலியன தாங்கி மலரும் விழா மலர் நல்லவண்ண மலர்ந்து சிவ மணம் பரப்பவும், மன்றப் பணிகள் சிறந்துயர்ந்து உலகு இன்புறவும் அருள்தரு ஞானமா நடராசப் பெருமான் திருவடி மலர்களைச் சிந்திக்கின்றோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்
26 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்
தருமபுரம் (மயிலாடுதுறை அஞ்சல்) 609 001

நாள் 7-1-1992

"ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும்எம் ஆதியே."

"பூமருவு கங்கைமுதல் புனிதமாம் பெருந்தீர்த்தம்
மாமகம்தான் ஆடுதற்கு வந்துவழி படும்கோயில்
தூ மருவு மலர்க்கையால் தொழுதுவலம் கொண்டணைத்து
காமர்கெட நுதல்விழித்தான் கழல்பணிந்து கண்களித்தார்"

—சேக்கிழார்

ஆலய வழிபாட்டை நாள் வழிபாடு என்றும், சிறப்பு வழிபாடு என்றும் இருவகையாகப் பகுத்துக் கூறுவர். நாள் வழிபாடுகளில் ஏற்படும் குற்றம் குறைகள் சிறப்பு வழிபாடுகளால் நீங்கப் பெறும் என்பது ஆகம விதியாகும்.

சிறப்பு வழிபாடுகளில் தலையானது பிரும்மோற்சவம் என்ப் பெறும் பெருவிழாவாகும். இப்பெருவிழா ஒவ்வோர் ஆலயங் களிலும் பல்வேறு மாதங்களில் கொண்டாடப் பெறும். இவ் விழாக்கள் பெரும்பாலும் திங்கள்தோறும் வரும் முழுமதி நாட்களிலே முடியும் வகையில் கொண்டாடப் பெற்று வந்துள்ளன. திருஞானசம்பந்தர் பூம்பாவைத் திருப்பதிகத்தில் இவ்விழாக்களில் சிலவற்றைக் குறித்தருள்கிறார். ஐப்பதி ஓணவிழா, கார்த்திகை விளக்கீடு, மார்கழித் திருவாதிரை, தைப்பூசம், மாசி கடலாட்டு, பங்குனி உத்திரம் முதலியன அப்பதிகத்துள் முழுமதி நாளில் நிகழும் விழாக்களாகக் கூறப்பட்டுள்ளன.

சிவாலயங்களில் நிகழும் பெருவிழாக்கள் அனைத்தும் இறைவன் அன்பர்கட்குத் தீர்த்தம் கொடுத்தருளுவதோடு நிறைவுறுதலைக் காணலாம். தீர்த்த நீராட்டு சைவசமய ஆலயங்களில் மட்டுமே நிகழும் பெருவிழா என்பது குறிப்பிடத்தக்கது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காவிரியில் நீராடி வழிபடுவார்க்கு ஐயாற்றிறைவன் அனைத்துச் செல்வங்களையும் அருளுவதை அப்பரடிகள் குறித்தருளுவார். சென்றாடு தீர்த்தங்கள் ஆனார்தாமே என்பதும் அவர் திருவாக்காகும். மணிவாசகர் திருவெம்பாவையில் நீராடும் பெண்கள், நீர்நிலையை அம்மையப்பர் வடிவமாகக் கருதி நீராடுவதைக் குறிப்பிடுகின்றார். இறைவன் ஆலயங்களில் மூர்த்தியாக இருப்பதோடு தலமாகவும், தீர்த்தமாகவும் விளங்குவதை 'மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கோர் வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே எனத் தாயுமானவர் கூறியருளுகிறார். ஆலயங்கள் தோறும் தீர்த்தங்கள் விளங்குவதையும் அன்பர்கள் அவற்றைப் போற்றி நீராடி வணங்குவதையும் காண்கிறோம்.

தீர்த்தங்களில் புனிதமானதாக விளங்குவது கும்பகோணம் மகாமகத் திருக்குளம். 'பூமருவு கங்கை முதல் புனிதமாம் பெருந் தீர்த்தம் மாமகந்தான் ஆடுதற்கு வந்து வழிபடும் கோயில்' எனச் சேக்கிழார் போற்றும் கும்பகோணம் மகாமகம் இவ்யாண்டு வருகிறது. பன்னிரண்டாண்டுகளுக்கு ஒருமுறை வரும் இம்மகாமக விழா வட இந்தியாவில் நிகழும் கும்பமேளா ஆந்திரத்தில் நிகழும் புஷ்கரம் போலத் தமிழகத்தில் திகழ்கிறது.

மகாமகம் ஞானசம்பந்தர் கூறுவதை யொப்பக் கடற்கரை ஊர்களில் கடலாட்டு விழாவாகவும், உள்நாட்டு ஊர்களில் தீர்த்த விழாவாகவும் நிகழும் முறையில் குடந்தையில் தீர்த்த விழாவாக மாசிமக முழுமதி நாளில் நடைபெறுகிறது.

அன்பர்கள் மகாமகத் திருநாளில் தீர்த்த நீராடி அனைத்து நலன்களையும் பெற்றுச் சிறக்கவும், சென்னை சைவசித்தாந்தப் பெருமன்றத்தினர் நிகழ்த்தும் சமயப் பிரசாரப் பணிகள் மலர் வெளியீடு ஆகியன சிறக்கவும் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

சிவ சிவ

கயிலைமாமுனிவர்

ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித்
தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

அதிபர், ஸ்ரீ காசிமடம் 3245/1401

திருப்பனந்தாள்-612 504

(தஞ்சை மாவட்டம்) 8-1-1992

வாழ்த்துரை

தமிழகத்தில் பல்லாண்டுகளாகச் சைவ சித்தாந்தம் பரப்பும் பணியில் ஈடுற்றுத் தக்க வகையில் இடையறாத பணிகளைச் செய்து வருகின்ற சைவசித்தாந்தப் பெரு மன்றம் தனது நுண்மாண் நுழைபுலம் மிக்க, எழுத்து, பேச்சுத்திறன் வல்ல அறிஞர் பெருமக்களின் கூட்டு முயற்சியால், குடந்தையில் நிகழவுள்ள அகில இந்திய விழாவாகிய மகாமகப் பெருவிழாவை யொட்டித் திருநாகேச்சுரம் திருக்கோயிலில் சமயப்பிரச்சாரக் கூட்டம் முதலானவற்றை ஏற்பாடு செய்திருப்பதும், விழாத் தொடர்பாகச் சிறப்பு மலர் வெளியிடுவதும் அறிந்து மகிழ்ச்சி.

சைவசமயப் பணிகளில் ஒல்லுமாற்றான் எல்லாம் சிறப்புற ஈடுற்று வரும் சைவசித்தாந்தப் பெருமன்றத்தின் சிறப்பு விழா இனிதே நிறைவுறவும் விழாமலர், சித்தாந்தம் திருமுறைகள் ஆகியவற்றின் உள்ளுறைப் பொருள்களுடன் சிறப்பான பொன்மலராகப் பொலிவுற வெளி வரவும் செந்திற்கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்,

சுபம்.

சிவ சிவ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

தொலைபேசி : 3679

''கயிலைப் புனிதர்''

சீலத்திரு. ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்

தொண்டை மண்டல ஆதீனம்

பெரிய காஞ்சிபுரம்-631 502

நாள் 22-1-1992

ஆசியுரை

''மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினோர்க்கு ஓர் வார்த்தை சொலச்சற்குருவும் வாய்க்கும் பராபரமே;' எனும் தாயுமானவர் வாக்கிலிருந்து சிவனருளைப் பெறுவதற்கு ஆதார மாகவுள்ளவை திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள திருவுருவங்களும் திருத்தலங்களும், அங்கு உள்ள தீர்த்தங்களும் என்பது வெளிப்படை.

இந்திய நாட்டின் புண்ணிய நதிகளான கங்கை, யமுனை, சரசுவதி, புஷ்கரணி, கோதாவரி, துங்கபத்திரை, காவேரி ஆகிய ஏழு தீர்த்தங்களும் புனிதமானவைகளாகப் போற்றப் பெறு கின்றன.

பன்னீராண்டுக்கு ஒரு முறை மேற்கண்ட ஏழுநதிகளும் இம் மகாமகக் குளத்தில் கூடுகின்றன எனவும், அந்நன்னாளில் இத் திருக்குளத்தில் நீராடுவது பெரும் புண்ணியமாகும் எனவும் தொன்றுதொட்டு ஓர் நம்பிக்கை கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. அத்தகைய நன்னாள் 18-2-92 அன்று வருகின்றது.

திருக்குடந்தை மகாமகக் குளக்கரையில் குடந்தைக் கீழ்க் கோட்டம் என்னும் பாடல் பெற்ற தலம் உள்ளது. இதில் இப் புண்ணிய நதிகளின் அதிதேவதைகளின் திருவுருவங்கள் அமைக்கப் பெற்று அன்றாட வழிபாடு நடைபெற்று வருகின்றது.

இத்திருக்கோயிலுக்குரிய திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்துள்ள திருத்தாண்டகப் பதிகத்தில் பத்தாம் பாடலில்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"தாவிமுதற் காவிரி நல் யமுனை கங்கை
தலைச்சதி பொற்றாமரை புட்கரணி தெண்ணீர்க்
கோவியொடு குமரிவரு தீர்த்தஞ் சூழ்ந்த
குடந்தைக் கீழ்க்கோட்டத் தெங்கூத்தனாரே"

என்பதிலிருந்து இதன் சிறப்பைக் காணலாம்.

சென்னைச் சைவ சித்தாந்தப் பெருமன்றம் சிவம் பெருக்கும் தொண்டில் தலைசிறந்து நிற்கின்றது; பற்பல அரிய நூல்களையும் வெளியிட்டு வருகின்றது. இந்நியதியில் திருக்குடந்தை, திருக் குடந்தைக் கீழ்க்கோட்டம் ஆகியவற்றின் திருமுறைப்பாடல்கள் அவற்றின் விளக்கங்கள், பல பேரறிஞர்களின் சிவஞானக் கட்டுரைகள் கொண்ட ஓர் மலரை மகாமக விழாவில் வெளியிட இருப்பது அறிந்து மகிழ்ச்சியடைகின்றோம். மலர் நன்கு மலர்ந்து சிவமணம் கமழவும், பெருமன்றத்தின் தொண்டுகள் மேன்மேலும் வளரவும், இதிற் பங்கு பற்றும் அன்பர்கள் அனைத்து நலங்களுடன் நீடினிது வாழவும் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

சிவம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருவண்ணாமலை ஆதீனம்
தவத்திரு குன்றக்குடி அடிகளர்
குன்றக்குடி 27-1-92

அன்பிற் சிறந்த நமது திரு அண்ணாமலை அவர்களுக்கு எல்லா நன்மைகளும் பெருக அண்ணாமலை அண்ணலின் திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

தாங்கள் மகாமகச் சிறப்பிதழ் வெளியிடுவது அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம்.

விழாமலர் இனிதே வெளிவந்து நன்மணம் பரப்பிடத் திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

(குன்றக்குடி அடிகளார்)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாலமுருகனடிமை

அருள்மிகு பாலமுருகன் திருக்கோயில்,
இரத்தினகிரி, கீழ்மின்னல்-632 517
வடஆற்காடு மாவட்டம், தமிழ்நாடு.

அன்புடையீர்,

அருளாசி

உயிர் இறை உலகம் என்னும் இம்முப்பொருளுண்மையினைச் சித்தத்தால் சிந்தித்துத் தெளிவாகக் கண்ட சிறந்த முடிவே சித்தாந்தம். உயிர் பாசப்பற்று நீங்கி, சிவத்தைத் தன்னுள் உணர்ந்து சிவமாகி எல்லையில் இன்ப விடுதலை பெறும் நெறியைத் திட்ப நுட்பம் சிறக்க வகுத்துரைக்கும் அரிய மெய்ப்பொருள் நூல் சிவஞான போதம் என்பர். இஃது ஒப்பதோர் அரிய நூல் உலகில் வேறில்லை எனலாம்.

சரியை கிரியை யோகம் ஞானம் இவற்றைப் படி முறையே பயின்று சிவஞான சித்தி பெறவே மூர்த்தி தலம் தீர்த்தம் கண்டனர் முன்னோர்கள். "மூர்த்தி தலம் தீர்த்தம் முறையால் தொடங்கினார்க்கோர் வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே" என்றார் தாயுமானவரும்.

நுண்மாண் நுழைபுலம் மிக்க நம் சைவ சித்தாந்தப் பெருமன்றத்தினர் மகாமகப் பெருவிழாவையொட்டி, திருக்குடந்தையில் நடைபெறும் சமயப் பிரசாரக் கூட்டத்தின்போது திருக்குடந்தை திருமுறைத் தலங்கள் எனும் சிறப்பு மலர் வெளியிடுகின்றனர். யாம் இஃதறிந்து உளம் மகிழ்கின்றோம்.

மகாமகப் பெருவிழா இனிது நிறைவுறவும் சமயப் பிரசாரக் கூட்டம் சிவநெறி சித்தாந்தத்தை மக்களுக்கு நன்கு உணர்த்தி உய்யும் வழி காட்டவும் இது சார்பாக வெளியிடும் மலர் சிவமணங் கமழ்ந்து சீலர்களைச் சிவமாக்கவும் குருவாய் வரும் பாலமுருகப் பெருமான் இக்குன்றுறையோனை இறைஞ்சி வாழ்த்தும்

பாலமுருகனடிமை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

Justice **AR. LAKSHMANAN**
Judge, Madras High Court
No. 22, Greenways Road, Raja Annamalaipuram,
MADRAS-600 028. Phone : 83 70 11
31-1-1992

வாழ்த்துரை

சைவ சித்தாந்தப் பெருமன்றம், கடந்த 85 ஆண்டுகளுக்கு மேலாக நல்ல பல தொண்டும், குறிப்பாக சைவம் தழைக்கவும் தமிழ் மொழி வளர்ச்சிக்கும் பாடுபட்டு வருவதைத் தமிழ் கூறும் நல்லுலகம் நன்கு அறியும்.

குடந்தை மகாமகப் பெருவிழாவை ஒட்டி, இப்பெருமன்றம் சில சிறப்பு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்தும், மகாமகச் சிறப்பு மலர் ஒன்று வெளியிடவும் முன் வந்திருப்பது அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். இத்தகைய பணி போற்றுதற்குரியது. இந்த சிறப்பு மலரில் மகாமகப் பெருமை, தஞ்சை மாவட்டம், குடந்தை நகரச் சிறப்பியல்புகள், சோழ நாட்டின் தனித்தன்மை, அறிஞர் பலரின் நல்ல பல கட்டுரைகள் இடம் பெறுகின்றன. இம்மலர் எல்லா வகையானும் சிறப்புற்றுத் திகழவும், இதன் வாயிலாக, சைவ உலகம் பெரும் பயனை அடையவும், தமிழர் சமுதாயம் நற்பயன் எய்தவும், இளைஞர்களிடையே நற்பண்பாடு, இறை உணர்வு ஏற்படவும் வாழ்த்துகிறேன்.

முழுமுதற் பொருள் அருள்துணை புரிவதாகுக.

அரு இலக்குமணன்
(நீதியரசர்)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முத்தமிழ்க் காவலர்
திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள்
திருச்சி-8, 4-1-1992

வாழ்த்துச் செய்தி

சென்னை சைவ சித்தாந்தப் பெருமன்றம் கும்பகோணம் மகாமகம் திருநாளை முன்னிட்டு மலர் ஒன்றை வெளியிடவிருக்கிறது என்ற செய்தி என்னை மகிழ்விக்கிறது.

மகாமக விழா இனிது நடைபெற வேண்டும் எனவும், மலர் நாட்டுக்கும், மொழிக்கும், மக்களுக்கும், சமயத்திற்கும், நற்றொண்டு செய்யும் நல்லறிஞர்களின் கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்து, நாடு முழுதும் நன்மணம் வீச வேண்டுமெனவும், எல்லாம் வல்ல இறைவனை, வணங்கி வாழ்த்துகிறேன்.

தங்களன்பிற்குரிய
கி. ஆ. பெ. விசுவநாதம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வாழ்த்துரை

(திருஅருட்செல்வர் டாக்டர். நா. மகாலிங்கம்,
தலைவர், இராமலிங்கர் பணிமன்றம்)

'தருமமிகு சென்னை'யில் பெருமையுடன் செயலாற்றிக் கொண்டு இருக்கிறது சைவ சித்தாந்தப் பெருமன்றம்.

தமிழ் நாட்டின் சைவத் திருவிழாக்களில் மகுடம் போல் விளங்குவது கும்பகோணத்தில் நடைபெறும் மகாமகம்.

இந்த ஆண்டு மகாமகப் பெருவிழா சைவப் பெருமக்கள் எல்லாரும் கலந்து கொள்ள வேண்டிய புனிதத் திருவிழா. மகாமக விழா நினைவாக சைவ சித்தாந்தப் பெருமன்றம் 'மகாமகச் சிறப்பு மலர்' வெளியிடுவது அறிந்து மிகவும் பெருமிதம் கொள்கிறேன்.

இந்தப் புனிதமான சைவ சித்தாந்தச் சிறப்பு மலரை திருக் குடந்தைக்கு அருகில் இருக்கும் திருநாகேச்சுரம் அருள்நிறை நாகநாத சுவாமி திருக்கோயிலில் வெளியிடுவது மிகப் பொருத்த மானது; புனிதமானது என்பதில் ஐயமில்லை.

சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின் எண்பத்து ஐந்தாம் ஆண்டில் மகாமகம் வருவதும் அந்த மகாமகப் பெருவிழாவில் சைவ சித்தாந்த மன்றம் சிறப்பு மலர் வெளியிடுவதும் மிகப் பொருத்த மானது.

சைவ சித்தாந்தப் பெருமன்றம் சைவ சமயத்திற்குச் சென்ற எண்பத்துஐந்து ஆண்டுகளாகத் தொடர்ந்து சமயத் தொண்டும், சமூகத் தொண்டும் செய்து வருவதை மனமாரப் பாராட்டி மகிழ் கிறேன்.

சமயக்குரவர்கள் அருளிய தேவாரத் திருமுறைத் தோத்திரங் களையும், சமயாச்சாரியார்கள், சந்தனாச்சாரியார்கள் அருளிய சித்தாந்த சாத்திரங்களையும் பக்தி பூர்வமாக சைவ சித்தாந்தப் பெருமன்றம் மக்களிடையே பரப்பி வருகிறது.

குறிப்பாக 'மூவர் முதலிகள்' எனப் போற்றப் பெறும் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் தேவாரங்களைத் தமிழ்நாட்டின் தலைநகர் சென்னையிலும்—

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தலைநகரைச் சுற்றி இருக்கும் சிற்றூர்கள் பலவற்றிலும் தக்க ஓதுவார்களைக் கொண்டு பண்ணோடு பாடச் செய்து வருகிறது சைவ சித்தாந்தப் பெருமன்றம்.

சைவ சமயச் சொற்பொழிவாளர்களைக் கொண்டு சிறந்த முறையில் விரிவுரை ஆற்றச் செய்தும் வருகிறது.

இப்படி மகத்தான பணியைச் சைவ சித்தாந்தப் பெருமன்றம் தொடர்ந்து செய்து வருகிறது.

சமயச் சான்றோர்கள் திருப்பெயர்களில் அறக்கட்டளைகளை நிறுவியிருக்கிறது.

நாயன்மார் விழாவையும், சேக்கிழார், அருணகிரிநாதர், குமரகுருபரர், தாயுமானவர், பட்டினத்தார், திருஅருட்பிரகாச வள்ளலார், பாம்பன் சுவாமிகள் முதலிய அருளாளர்களின் விழாக் களையும் ஒவ்வொரு ஆண்டும் பக்திப் பரவசத்துடன் நடத்தி வருகிறது.

ஆண்டுதோறும் சைவ சமய மாநாட்டைக் கூட்டி சைவ சமயச் சிந்தனைகளை அறிஞர் பெருமக்களின் சொற்பொழிவுகள் மூலம் ஆய்வு செய்து வருகிறது.

இதன் மூலமாக சைவப் பெருமக்கள் தங்கள் சமயத்தின் தத்துவங்களைப் புரிந்து கொள்வதோடு வாழ்க்கையிலும் அதை அனுசரித்து வருகிறார்கள்.

''மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினோர்க்கு
வார்த்தை சொல சற்குருவும் வாய்க்கும் பராபரமே''

என்பது தாயுமானவ சுவாமிகளின் திருவாக்கு. அந்தப் பெருந் தகையின் வாக்குக்கு ஏற்ப, சைவ சித்தாந்தப் பெருமன்றம் தம் உறுப்பினர்களுடனும், சைவப் பெருமக்களுடனும் தேவாரத் திருப்பதிகம் பெற்ற திருத்தலங்களுக்குச் சென்று தேவாரத்தைப் பண்ணோடு பாடியும் பரவியும் வழிபாட்டு உணர்வை மக்கள் மத்தியில் சிறந்த முறையில் வளர்த்து வருகிறது.

'சித்தாந்தம்' என்ற மாத இதழைத் தமிழிலும்—

'சைவ சித்தாந்தா' என்ற காலாண்டு இதழை ஆங்கிலத்திலும்—சைவ சித்தாந்தப் பெருமன்றம் நடத்தி வருகிறது.

இதன் மூலமாக சமுதாயத்தில் சமய மறுமலர்ச்சி மலர்ந்து வருகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உலகியலில் ஈடுபட்ட பெரும்பாலோர் அருளியலுக்குத் திரும்பவும், பதி, பசு, பாசம் என்ற சைவ தத்துவ முப்பொருள் உண்மைகளை ஓரளவாவது சைவப் பெருமக்கள் அறிந்து கொள்ளவும், சைவ சித்தாந்தப் பெருமன்றம் நடத்தி வரும் சித்தாந்தம் இதழ்கள் வெகுவாகப் பயன்படுகின்றன.

சமயப்பணிகளுடன் மன்றம் சமுதாயப்பணிகளையும் இயன்ற அளவு ஆற்றி வருவது தனிச்சிறப்புடையதாகும்.

மயிலை அறுபத்து மூவர் திருவிழாவில் ஏழை, எளியவர்களுக்கு உணவுப் பொட்டலங்கள் வழங்கியும்...

சிவராத்திரித் திருநாளில் இரவு முழுதும் கண்விழித்து அவ்வப் போது பூசனை நேரங்களில் பொது மக்களுக்கு அன்னதானம் செய்தும் வருகிறது சைவப்பெருமன்றம்.

இது பக்தி இயக்கத்தை மக்கள் மத்தியில் மங்காமல் காத்து வரும் மகத்தான பணியாகும்.

இவ்வாறு சைவ சமயத்திற்கே உயரிய, சிறப்பான தொண்டு களைப் புரிந்து நாளும் நாளும் வளர்ந்து வரும் சைவ சித்தாந்தப் பெருமன்றம்—

இந்த ஆண்டு திருநாகேச்சுரத்தில் நடத்துகின்ற திருமுறை இசை விழா சிறப்பாக நடைபெறுவதற்கும்—

அந்த விழாவில் வெளியிடும் மகாமகச் சிறப்பு மலர் பக்தி மணம் பரிமளித்துத் திகழ்வதற்கும்—

சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின் பணி சிறந்து ஓங்க எல்லாம் வல்ல சிவபெருமானை வணங்கிப் பிரார்த்திக்கிறேன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



கும்பகோணம் மகாமகத் திருக்குளம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

விநாயகர் துதி

வானுலகும் மண்ணுலகும் வாழ மறை வாழப்
பான்மைதரு செய்ய தமிழ் பார்மிசை விளங்க
ஞானமதம் ஐந்துகரம் மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுகனைப் பரவி அஞ்சலி செய்கிற்பாம்

—உமாபதிசிவம்

பன்னிரு திருமுறைத்திரட்டு

முதல் திருமுறை—திருஆலூர் பசுபதீச்சரம்

(திருஞானசம்பந்தர் —பண் :—நட்டபாடை)

திருச்சிற்றம்பலம்

குற்றம் அறுத்தார் குணத்திலுள்ளார்
கும்பிடுவார் தமக்கு அன்பு செய்வார்
ஒற்றை விடையினர் நெற்றிக் கண்ணார்
உறைபதியாகும் செறிகொள் மாடம்
சுற்றிய வாசலின் மாதர்விழாச்
சொற்கவி பாட நிதான நல்கப்
பற்றிய கையினர் வாழும் ஆலூர்ப்
பசுபதி ஈச்சரம் பாடுநாவே.

2ஆம் திருமுறை—திருவலஞ்சுழி

(திருஞானசம்பந்தர்—பண் :—நட்ட ராகம்)

என்னபுண்ணியஞ் செய்தனை நெஞ்சமே
இருங்கடல் வையத்து
முன்ன நீபுரி நல்வினைப் பயனிடை
முழுமணித் தரளங்கள்
மன்னுகாவிரி சூழ் திருவலஞ்சுழி
வாணனை வாயாரப்
பன்னி ஆதரித்து ஏத்தியும் பாடியும்
வழிபடும் அதனாலே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

3ஆம் திருமுறை—திருப்பட்டீச்சரம்

(திருஞானசம்பந்தர்—பண்—சாதாரி)

பாடன்மறை சூடன்மதி பல்வளையொர்
பாகமதின் மூன்றொர் கணையால்
கூடவெரி யூட்டி யெழில் காட்டி நிழல்
கூட்டு பொழில் சூழ் பழையாறையுள்
மாடமழ பாடியுறை பட்டிசர
மேயகடி கட்டரவினார்
வேடநிலை கொண்டவரை வீடுநெறி
காட்டிவினை வீடுமவரே.

4ஆம் திருமுறை—திருநாகேச்சரம்

(திருநாவுக்கரசர்—பண்—நேரிசை)

கச்சைசேர் அரவர் போலும்
கறைஅணி மிடற்றர் போலும்,
பிச்சை கொண்டு உண்பர் போலும்
பேரருளாளர் போலும்
இச்சையால் மலர்கள் தூவி
இரவொடு பகலுந் தம்மை
நச்சுவார்க்கு கினியர்போலு
நாகவீச் சரவனாரே.

5ஆம் திருமுறை—திருஇன்னம்பர்

(அப்பர்—திருக்குறுந்தொகை)

தொழுது தூமலர் தூவித் துதித்து நின்று
அழுது காமுற்று அரற்றுகின் றாரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப்பாரையும்
எழுதும் கீழ்க்கணக்கு இன்னம்பர் ஈசனே.

6ஆம் திருமுறை—திருநல்லூர் (அப்பர்—திருத்தாண்டகம்)

நினைந்துருகும் அடியாரை நைய வைத்தார்
நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தார்
சினந்திருகு களிற்றுரிவைப் போர்வை வைத்தார்
செழுமதியின் தளிர் வைத்தார், சிறந்து வானோர்
இனந்துருவி மணிமகுடத் தேறத் துற்ற
வினமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப் பில்கி
நனைந்தனைய திருவடி என் தலைமேல் வைத்தார்
நல்லூர் எம் பெருமானார் நல்லவாறே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

7 ஆம் திருமுறை—திருஇடைமருதூர்

(சுந்தரர்—பண்—தக்கேசி)

கொடுக்க கிற்றிலேன் ஒண் பொருள் தன்னைக்
குற்றஞ் செற்றம் இவை முதலாக
விடுக்க கிற்றிலேன் வேட்கையுஞ் சினமும்
வேண்டில் ஐம்புலன் என்வசமல்ல
நடுக்க முற்றதோர் மூப்பு வந்தெய்த
நமன்றமர் நரகத்திடல் அஞ்சி
இடுக்கண் உற்றனன் உய்வகை யருளாய்
இடைமருதுறை யெந்தை பிரானே.

8 ஆம் திருமுறை—திருஐயாறு

(மணிவாசகர்—திருவம்மானை)

கையார் வளைசிலம்பக் காதார் குழையாட
மையார் குழல்புரளத் தேன்பாய வண்டொலிப்பச்
செய்யானை வெண்நீறு அணிந்தானைச் சேர்ந்தறியாக்
கையானை எங்குஞ் செறிந்தானை அன்பர்க்கு
மெய்யானை அல்லாதார்க்கு அல்லாத வேதியனை
ஐயாறு அமர்ந்தானைப் பாடுதுங்காண் அம்மானாய்.

9 ஆம் திருமுறை—திருவாவடுதுறை

(சேந்தனார்—திருவிசைப்பா—பண்—பஞ்சமம்)

(1) ஒழிவொன்றிலா உண்மை வண்ணமும்
உலப்பிலன் ஊறின்ப வெள்ளமும்
மொழிவொன்றிலாப் பொன்னித் தீர்த்தமும்
முனிகோடி கோடியா மூர்த்தியும்
அழிவொன்றிலாச் செல்வச் சாந்தையூர்
அணி ஆவடுதுறை ஆடினாள்
இழிவொன்றிலாவகை யெய்தி நின்று
இறுமாக்கும் என்னிள மானனே.

திருப்பல்லாண்டு

(சேந்தனார்—கோயில்—பண்—பஞ்சமம்)

(2) மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டும் கொடுத்தும் குடிகுடி ஈசற்கு
ஆட் செய்மின் குழாம் புகுந்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"அண்டம் கடந்த பொருள், அளவு
இல்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும், இன்றும், என்றும், உள்ள
பொருள்" என்றே பல்லாண்டு கூறுதுமே.

10ஆம் திருமுறை

(திருமூலர்—திருக்கூத்துத் தரிசனம்)

எங்கும் திருமேனி யெங்கும் சிவசக்தி
எங்கும் சிதம்பரம் எங்குந் திருநட்டம்
எங்குஞ் சிவமா யிருத்தலால் எங்கெங்குந்
தங்குஞ் சிவனருட் டன்விளையாட்டதே

11ஆம் திருமுறை

(நக்கீரதேவ நாயனார்—திருவலஞ்சுழி மும்மணிக்கோவை)

வணங்குதும் வாழி நெஞ்சே புணர்ந்துடன்
பொருகடல் முகந்து கருமுகிற் கணம்நற்
படவர வொடுங்க மின்னிக் குடவரைப்
பொழிந்து கொழித்திழி அருவி குணகடல்
மடுக்குங் காவிரி மடந்தை வார்புனல்
உடுத்த மணிநீர் வலஞ்சுழி
அணிநீர்க் கொன்றை அண்ணல தடியே.

12ஆம் திருமுறை

(தெய்வச் சேக்கிழார்—திருநாட்டுச் சிறப்பு)

பாட்டியல் தமிழுரை பயின்ற எல்லையுட்
கோட்டுயர் பனிவரைக் குன்றின் உச்சியில்
சூட்டிய வளர்புலிச் சோழர் காவிரி
நாட்டியல் பதனை யான் நவிலல் உற்றனன்.

திருச்சிற்றம்பலம்

முன்னவனார் கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றும்
கன்னங் களவு மிகுத்திடும் காசினி
என்னரு நந்தி எடுத்துரைத் தானே.

—திருமூலர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொன்னிவள நாடு

ம. அண்ணாமலை

பாட்டியல் தமிழுரை பயின்ற எல்லையுட்
கோட்டுயர் பனிவரைக் குன்றின் உச்சியில்
சூட்டிய வளர்புலிச் சோழர் காவிரி
நாட்டியல் பதனை யான் நவிலல் உற்றனன்

—தெய்வச் சேக்கிழார்

எந்நாட்டவர்க்கும் இறைவனாக விளங்கும் சிவபெருமான், தென்னாட்டில் மகிழ்ந்து விளங்குவதனாலே, "தென்னாடுடைய சிவனே போற்றி" என்றார் மாணிக்கவாசக சுவாமிகள். தென்னாட்டில், சோழநாடு தனிச்சிறப்புற்று விளங்குகின்றது. இந்நாட்டில், தமிழும் சைவமும், இரண்டறக் கலந்து விளங்குகின்றன. உயர்ந்த கோபுரங்களும், பரந்த மதில்களும் கொண்ட திருக்கோயில்கள் எண்ணற்றனவாகத் திகழ்கின்றன. "சோழநாடு சோறு உடைத்து" என்றார்கள் நமது முன்னோர். சோறு என்ற சொல் உண்ணும் உணவை மட்டும் குறிப்பிடவில்லை. முத்திப் பேற்றையும் குறிக்கும் என்பார்கள்.

இந்த சோழநாட்டிற்கு, புனல்நாடு, பொன்னிநாடு, பொன்னி நன்னாடு, பொன்னி வளநாடு என்ற பல பெயர்கள் உண்டு.

தேவாரம் பதிகம் பெற்ற 274 சிவாலயங்களில் 190 திருக்கோயில்கள், சோழ நாட்டில் திகழ்வன குறிப்பிடத்தக்க சிறப்பாகும். மற்றொரு சிறப்பியல்பு யாதெனில், சோழ நாட்டில், திருவிடைமருதூர் சிவத்தலத்தை நடுநாயக சிவலிங்கத் திருமேனித் தலமாகக் கொண்டு அதன் பரிவார மூர்த்தி தலங்காக ஒன்பது திருக்கோயில்கள் அமைந்திருப்பன, சோழ நாட்டையே ஒரு சிவத்தல நாடாகக் கருதப்படுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருவிடை மருதூர் தலங்கள்

	திருக்கோயில்	மூர்த்தி சிறப்பு
1	திருஇடை மருதூர்	மகாலிங்கம்
2	திருவாவடுதுறை	நந்தியம் பெருமான் தலம்
3	திருவலஞ்சுழி	விநாயகர் தலம்
4	திருவேரகம் (சுவாமிமலை)	முருகன் தலம்
5	திருவாப்பாடி	சண்டேசுவரர் தலம்
6	சூரியனார் கோயில்	நவக்கிரகத் தலம்
7	சிதம்பரம் (தில்லை)	நடராசர் தலம்
8	சீர்காழி	வைரவர் தலம்
9	திருவாரூர்	தியாகராசர் தலம்
10	திருஇரும்பூளை	தட்சணாமூர்த்தி தலம்.

இத்திருக்கோயில்களை ஒருவர் வரிசையாக வழிபட்டால் சிவமண்டலத்தையே சுற்றி விட்டதாகக் கொள்ளப்படும்.

மேலும், அறுபான்மும்மை நாயன்மார்களில் முப்பதுக்கும் மேற்பட்ட நாயன்மார்கள் இப்பொன்னி வள நாட்டில் தோன்றி யிருக்கும் வரலாற்று உண்மை சோழநாட்டின் பெருமைக்கு மற்றொரு எடுத்துக் காட்டாகும். அதிலும், முதல் மூன்று திருமுறைகளை அருளிச் செய்த சிவம்பெருக்கும் பிள்ளையாராகிய திருஞான சம்பந்த சுவாமிகள் தோன்றிய நாடு, சோழ வளநாடு எனில் இந்நாட்டின் புனித மண் பெற்ற தவப்பயனை என்னென்று கூறுவது?

திருத்தொண்டர் புராணம் எனும் பெரியபுராணக் காப்பியத் தில் தெய்வச் சேக்கிழார் பாட்டுடைத் தலைவராக சுந்தரமூர்த்தி சுவாமிகளைக் கொண்டார்கள். சுந்தரர் தோன்றியது திருமுனைப் பாடி நாடு. அதன் தலைநகரம் திருநாவலூர். எனினும் தம் காப்பியத்திற்கு, சிறப்புடைய நாடாகச் சோழ நாட்டையும், சிறந்த பேரூராக திருவாரூரையும் கொண்ட காரணத்தை நாம் உணர வேண்டும். திருத்தொண்டர் புராணத்தின் தொகை நூலாகிய திருத்தொண்டத் தொகையில் போற்றப்படும் சிவனடியார்களின் திருக்கூட்டம் நிறைந்து விளங்கியது திருவாரூரில் உள்ள தேவாசிரிய மண்டபம். சிவபெருமான் தன் அடியார்களுக்கு எளிவந்து அருளும் பெருமையுடைய பழம்பதி திருவாரூர். இத்தலம் புனல் நாடாகிய சோழ வள நாட்டில் திகழ்கின்றது. ஆதலின் புனல் நாட்டை, சிறப்பு நாடாகவும், திருவாரூரை—

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிறப்பு நகரமாகவும் அமைத்துள்ளார் தொண்டர் சீர் பரவுவார். இக்கருத்தைச் சேக்கிழார் பெரியபுராணப் பாடலில் இனிது புலப் படுத்தியுள்ளார்.

உலகமுய்யவும், சைவம் நின்றோங்கவும்
அலகில் சீர்நம்பி ஆரூர் பாடிய
நிலவு தொண்டர்தம் கூட்டம் நிறைந்துறை
குலவு தண்புனல் நாட்டணி கூறுவாம்.

—(திருமலைச் சிறப்பு—40)

இச்சோழ நாட்டில் தமிழ் மொழியும், சிவநெறியும் பேணிக் காக்கப்பட்டமையால், தமிழகத்தில், வேறு பல ஊர்களிலிருந்தும் வந்த சிவநெறிச் செல்வர் பலர் இந்நாட்டில் விரும்பி, தங்கியிருந் தார்கள் என்ற செய்தியையும் பெரியபுராணம் காட்டுகின்றது.

காவிரி

சோழ நாட்டின் வளமைக்கும் பெருமைக்கும் தலையாய காரணம், பொன்னி எனப் புகழப்படும் காவிரி நதியாகும். காவிரி யாற்றின் தோற்றத்தைக் கந்தபுராணம் கூறுகின்றது. காந்தன் என்ற சோழ மன்னனின் வேண்டுகோளுக்கிணங்க, அகத்திய முனிவர், தமது கமண்டலத்திலுள்ள நன்னீரைக், காவிரியாறாக நிலத்தில் பெருகச் செய்தார் என்பது வரலாறு. இவ்வரலாற்றை ''அமர முனிவன் அகத்தியன் தனது, கரகங் கவிழ்த்த காவிரிப் பாவை'' என்று மணிமேகலை குறிப்பிடுகிறது. (9-12) இக்கருத்தை சேக்கிழாரும் அழகுறப் பாடியுள்ளார்.

''ஆதிமாதவ முனி அகத்தியன் தரு
பூதநீர்க் கமண்டலம் பொழிந்த காவிரி
மாதர் மண் மடந்தை பொன் மார்பிற் சூழ்ந்ததோர்
ஓதநீர் நித்திலத் தாமம் ஓங்கு மால் (திருநாட்டு—2)

மேலும் காவிரியின் சிறப்பைப் பட்டினப்பாலையும் பறைசாற்று கின்றது.

''வசையில் புகழ் வயங்கு வெண்மீன்
திசை திரிந்து தெற்கேகினும்
தற்பாடிய தளியுணவின்
புட்டேம்பப் புயன்மாறி
வான் பொய்யினும் தான்பொய்யா
மலைத்தலைய கடற்காவிரி, (பட்டினப்பாலை 1—6)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"குடமலைப் பிறந்த கொழும் பஃறாரமொடு
கடல் வளனெதிரக் கயவாய் நெரிக்குங்
காவிரிப் புதுநீர். (சிலப்—நாடுகாண்—103-108)

மேலும் சிலப்பதிகாரத்தில் கானல் வரியில் "வாழி காவிரி! வாழி காவிரி!" என்று பல இடங்களில் போற்றப்படுவதைக் காணலாம். சேக்கிழார், காவிரி நன்னீரால் நற்பயன் பெறும் சோழ நாட்டின் வளமையையும் மக்கள் பண்பாட்டினையும் பல பாடல்களில் தெரிவித்துள்ளார். உதாரணமாக;

"மாதர் நாறு பறிப்பவர் மாட்சியும்
சீதநீர் முடி சேர்ப்பவர் செய்கையும்,
ஓதையார் செய் யுழுநர் ஒழுக்கமும்
காதல் செய்வதோர் காட்சி மலிந்தவே!"
என்றும்,

"இந்திர தெய்வதம், தொழுதுநாறு நடுவார் தொகுதியே
பழுதில் காவிரி நாட்டின் பரப்பெலாம்."
என்றும்,

"மடையெங்கும் மணிக்குப்பை,
வயல் எங்கும் கயல் வெள்ளம்"

என்ற இனிய பாடல்களால், பொன்னியால், வளம் கொழிக்கும் புனித நாட்டின் பெருமைதான் என்னே? காவிரி ஆறு ஓட்டத்தையும், காவிரிக் கரையின் செழுமையையும், திருமுறை ஆசிரியர்கள் பல பாடல்களில் பாடியுள்ளனர். உதாரணமாக;

(1) கழைவளர் கவ்வை முத்தங் கமழ்
காவிரி யாற்றயருலே
தழைவளர் மாவினல்ல பலவின்
கனிகள் தங்கும்
குழைவளர் சோலை சூழ்ந்த குழகன்
குடமூக்கிடமாம் 3—59—6

(2) குழகா வாழைக் குலைத்தெங்கு
கொணர்ந்து கரைமேல் எறியவே
அழகார் திரைக் **காவிரிக்** கோட்டத்து
ஐயாறுடைய அடிகளே. 7—77—4

(3) வணங்குதும் வாழி நெஞ்சே புணர்ந்துடன்
பொருகடல் முகந்து கருமுகிற் கணம் நற்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

படவர வொடுங்க மின்னிக் குடவரைப்
பொழிந்து கொழித்திழி அருவி குணகடல்
மடுக்குங் **காவிரி** மடந்தை வார்புனல்
உடுத்த மணிநீர் வலஞ்சுழி
அணிநீர்க் கொன்றை அண்ணலதடியே. 11—11—1

இவ்வாறு புகழ்பெற்ற காவிரி, சோழ நாட்டை வளமாக்கி, சுருங்கி, மெலிந்து, வேறு நாட்டிற்குப் போக இயலாத நிலையில் சோழ நாட்டில் காவிரிப் பூம்பட்டணத்தில் வங்கக் கடலில், வலிவிழைந்து சங்கமாகின்றது.

மனுநீதி மன்னன்

திருவாரூரில் அறத்தின் மெய்மைத் தன்மையினை நன்குணர்ந்த மனுச் சோழன் வாழ்ந்தது திருவாரூர்த் திருநகரம் அன்றோ?

சிலப்பதிகாரத்தில் ஒரு காட்சியை ஈண்டு நினைவு கொளல் வேண்டும். கோவலனை, கள்வனென்று கொண்டு ஆராயாது கொலை புரிந்த பாண்டியன் அவையில் கண்ணகி வருகிறாள். ''யாரையோ நீ?'' என வினவுகிறான் தேரா மன்னன் நெடுஞ்செழியன். அறநெறி பிறழா அரசியல் கொண்ட சோழ நாட்டிலிருந்து வருவதாகக் கண்ணகித் தேவி தெரிவிக்கிறாள். இந்நிலையைக் காட்சியுரையில் காட்டுகிறார் இளங்கோவடிகள்.

''தேரா மன்னா செப்புவது டையேன்
... ...
... ...
வாயிற்கடைமணி நடு நா நடுங்க
ஆவின் கடைமணி யுகுநீர் நெஞ்சு சுடத்தான் தன்
அரும் பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்
பெரும் பெயர்ப் புகார் என்பதியே!
(சிலப்—வழக்—50-56)

சைவ சமயத்தின் பன்னிரு திருமுறைகளையும், நம்பியாண்டார் நம்பியின் பெருந்துணையுடன், உலகிற்களித்த திருமுறை கண்ட சோழன்—இராஜராஜன் சோழ நாட்டு மன்னனன்றோ?

தொண்டர்சீர் பரவுவார் அருளிய திருத்தொண்டர் புராணம் தோன்றுவதற்கும் அது தில்லையில் அரங்கேற்றம் பெற்றதற்கும் சோழ நாட்டு மன்னன் அநபாய சோழன் என்பதாலும் இந்நாடு பெருமை பெறுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அருளாளர்கள்

பொன்னி வள நாட்டில் தோன்றிய அருளாளர்கள் பலர். அவர்களுள்,

1. மூன்று வயதில் சிவஞானம் பெற்ற சம்பந்தப் பெருமான் ஞானத்தின் திருவுருவாய் தோன்றியது சோழ நாடு.
2. மூத்த சைவப் பெரியாரும், பல அற்புதப் பாடல்களை அருளிச் செய்தவருமான, காரைக்கால் அம்மையார் அவதரித்த புண்ணிய பூமி. சோழ நாடு.
3. மூலன் உடல் புகுந்து மூவாயிரம் தமிழ் அருளிச் செய்த திருமூலர், அமர்ந்து இருந்தது. (திருவாடுதுறை) சோழ நாடுதான்.
4. தத்துவ மேதை தாயுமானவர் தோன்றிய புண்ணிய பூமி— சோழவள நாடு.
5. பாண்டிய நாட்டில் தோன்றிய மாணிக்கவாசக சுவாமிகள் ஞானம் பெற்றது இந்நாட்டு—திருப்பெருந்துறை.

பல்வேறு புகழ்களும், சிறப்புகளும் இந்நாட்டிற்கு உண்டெனினும் விரிவஞ்சி நிறைவு செய்கிறோம்.

"பூவினுள் பதுமம் போலும், புருடருள் திருமால் போலும்
காவினுள் கற்பம் போலும், கலைகளுள் ஞானம் போலும்
ஆவினுள் சுரான் போலும், அறத்துள் இல்லறமே போலும்
நாவினுள் மெய்ந் நாமம் போலும், நாட்டினுள் சோழநாடு"

—திரிசிரபுரம்—மகாவித்துவான்
மீனாட்சி சுந்தரம் பிள்ளை

தண்ணீரும் காவிரியே, தார்வேந்தன் சோழனே
மண்ணாவதும் சோழ மண்டலமே. —ஔவையார்

பூதமும் கடந்து பொறிகளும் கடந்து
புலன்களும் கடந்து மேற்கரண
பேதமும் கடந்து கலைமுதலாகப்
பிறங்கு மோர் ஏழொடு வித்து
நாதமுங் கடந்து விளங்கும் ஓங்கொளியிந்
நானிலம் உயர்ந்திட மதமும்
கோதமும் கடந்ததோர் உளங்கொள விழைந்தோர்
கும்பத்துத் தோன்றிய தன்றே

—திருக்குடந்தைப்புராணம்
(மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தஞ்சை மாவட்டத் தனிச்சிறப்பு

ம. அண்ணாமலை

பொன்னி வளநாட்டில், இஞ்சிசூழ் தஞ்சையைத் தலைநகர மாகக் கொண்டு திகழ்வது தஞ்சை மாவட்டம்.

இம்மாவட்டம் அண்மையில் இரண்டு மாவட்டமாகப் பிரிக்கப் பட்டிருப்பினும், வரலாறு நோக்கில் ஒரே மாவட்டமாகக் கொண்டு இக்கட்டுரை எழுதப்படுகிறது.

தஞ்சை மாவட்டத்தின் வடக்கு எல்லை ''கொள்ளிடம்'' ஆறு. கிழக்கு எல்லை வங்கக் கடல். மற்ற எல்லைகள், திருச்சி, புதுக் கோட்டை, தென்னாற்காடு மாவட்டங்களாகும்.

மற்ற மாவட்டங்களில் இல்லாத தனி இயல்பு இம்மாவட்டத் திற்கு உண்டு. அதாவது இம்மாவட்டத்தில் எவ்விடத்தும், மலைப் பகுதியே காணவியலாது. நஞ்சையும் புஞ்சையும் சூழ்ந்த வளமான மாவட்டமாகும். இதற்குக் காரணம் காவிரி இம்மாவட்டத்தில் பாய்ந்து அதன் கிளை நதிகள் மூலம் மாவட்டம் முழுவதும் நன்னீர் அளிக்கிறது. இதனால் பயிர்த்தொழில் அதிகம் நடைபெறுகிறது. ஆகவே இம்மாவட்டத்தை தமிழகத்தின் ''நெற்களஞ்சியம்'' என்று கூறப்படுகிறது.

சோழவளநாட்டின் சிறப்புகளைப் பொன்னி வளநாடு கட்டுரை' யில் கூறப்பட்டுள்ளது. அந்த வளநாட்டின் ஒருபகுதியே தஞ்சை மாவட்டம் யெனினும் இதன் தனிச்சிறப்பை எல்லோரும் தெரிந்து கொள்ளவேண்டும்.

சோழமன்னன்—தஞ்சையில் பெரிய கோயில் என்ற உலகப் புகழ்பெற்ற பெருவுடையார் கோயிலைக் கட்டினான். இத்திருக் கோயிலில் இருக்கும் மூலஸ்தான மூர்த்தியாகிய சிவலிங்கத் திருமேனி வடிவில் மிகப் பெரியது. ஆகவே பெரிய கோயில் என்பதற்கேற்ப, பெரிய சிவலிங்கம், பெரிய நந்தி இங்கு உள்ளன. யாண்டும் இத்தகைய திருவுருவங்களை பார்க்க இயலாது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அத்துடன் இம்மாவட்டத்தில் திருநல்லம் என்ற ஊரில் (கோனேரி ராஜபுரம்) உள்ள சிவத்தலத்தில் உள்ள ஆடல் பெருமானாகிய நடராசர் திருவுருவம் எங்கும் இல்லாத அளவு மிகப்பெரியதாகத் திகழ்கின்றது.

குடந்தைக்கு 12 கி.மி. மேற்கே உள்ள பாபநாசம் என்ற தலத்தில் ஒரு அற்புதத் திருக்கோயில் அமைந்துள்ளது. அதன் திருப்பெயர் 108 சிவாலயம். இங்கு ஒரே இடத்தில், ஒரே நேரத்தில் 108 சிவலிங்கத் திருமேனிகளைத் தரிசிக்கும் அரியதோர் வாய்ப்பு வேறு எந்தக் கோயிலிலும் காணவியலாது. இத்திருக்கோயில் பழைமையானது. வரலாற்றுச் சிறப்புப் பெற்றது.

இறுதி காலத்தில் அப்பர் பெருமான் கயிலை யாத்திரை மேற்கொள்ள இயலவில்லை. சிவபெருமான் அருளால், யாதும் சுவடு படாமல், ஐயாற்றில் கயிலைக் காட்சி கண்டார். திருவையாறு பூலோகக் கயிலாயம் என வழங்கப்படுகிறது.

இம்மாவட்டத்தில் நவக்கிரகங்களுக்கு தனிக்கோயில்—சூரியனார் கோயில் உள்ளது ஒரு சிறப்பு அம்சம்.

மக்களின் வரவு செலவுக் கணக்கை சிவபெருமான் எழுதிக் கொண்டிருக்கிறார். அதற்கு நல்ல ஒரு தலமாக திருஇன்னம்பர் என்பதைத் தேர்ந்தெடுத்தார். திரு இன்னம்பர் ஈசன், நமது கீழ்க் கணக்கை எழுதிக் கொண்டிருக்கிறார். இத்தலம் குடந்தைக்கு அருகாமையில் உள்ளது.

மேலும், பெரிய புராணத்திற்குத் தொகை நூலாகிய திருத்தொண்டர் தொகை நூல் அருளப்பெற்ற இடம் திருவாரூர் தேவாசிரிய மண்டபம். இதுவும் தஞ்சை மாவட்டத்தின் தனிச் சிறப்பாகும்.

திருஞான சம்பந்தர் அவதரித்த சீர்காழி தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தது. ஈராண்டில் சிவஞானம் பெற்ற மெய் கண்டார் இவ்வுலகில் தோன்றுவதற்கு, தோன்றாத் துணை செய்தவன் திருவெண்காட்டு ஈசன் என்பது வரலாறு. திருவெண் காடு தலம் தஞ்சைமாவட்டப் புண்ணிய பூமியில்தான் உள்ளது.

மற்றும், திருமந்திரத்தை திருமூலர் அருளிச்செய்த இடம் திருவாவடுதுறை, தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தது.

திருவெண்காட்டு அடிகள் எனும் பட்டினத்தடிகள், தோன்றியது தஞ்சை மாவட்டத்தில் பூம்புகார் பட்டணமாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மங்கையர் திலகமான வளவர்கோன் பாவை, மங்கையற்கரசியார் அவதரித்த புண்ணியபூமி. பழையாறு வடதளி—இத் தலம் தஞ்சை மாவட்டத்தில் பட்டீசுரத்திற்குச் சமீபத்தில் உள்ளது.

சிலப்பதிகாரம் தோன்றுவதற்கான வரலாற்று நிகழ்ச்சிகள் நடைபெற்றன பூம்புகார் நகரமன்றோ?

கவியரசர் கம்பநாட்டார் தோன்றிய புண்ணிய திருஊர் தேரெழுந்தூர் எனும் திருஊர். இவ்வூர் தஞ்சை மாவட்டத்தில் உள்ளது சிறப்பியல்களில் ஒன்று.

ஆதிதிருக்கடவூரில், அபிராமி அந்தாதியை அருளிச் செய்த அபிராமிப்பட்டர் அவதரித்துச் சிறப்புப் பெற்றது தஞ்சை மாவட்டம்.

கர்நாடக இசையில் மும்மூர்த்திகளில் ஒருவராகத் திகழும் சற்குரு தியாகராஜ சுவாமிகள் வாழ்ந்து, சமாதி யெய்தியது தஞ்சை மாவட்டம் திருவையாறு. இங்கு ஆண்டுதோறும், தைத் திங்களில் பகுளப் பஞ்சமியை ஒட்டி தியாகராஜர் ஆராதனை விழா 5 நாட்களுக்குச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இது ஒரு தேசிய விழாவாகக் கருதப்படுகிறது. தியாகராஜரின் திருக்கோயில் திருவையாற்றில் காவிரி வடகரையில் இயற்கை எழிலுடன் விளங்குகின்றது.

இம்மாவட்டத்தில் பல புகழ் வாய்ந்த அறிஞர் பெருமக்கள் தோன்றியுள்ளார்கள். அவர்களில் சிலர் வருமாறு:

சைவசமயத்தில் சிறப்பு வாய்ந்த ஞானியார் சுவாமிகள் தஞ்சை மாவட்டம் திருநாகேச்சுரத்தில் தோன்றியவர். உ.வே. சுவாமிநாத ஐயர் என்ற தமிழ்த் தாத்தா பிறந்தது தஞ்சை மாவட்டம் பாபநாசத்திற்கு அருகில் உள்ள உத்தமநாதபுரம் என்ற சிற்றூர். அவர் பெயரில் ''உ'' எழுத்து உத்தமநாத புரத்தைக் குறிக்கும்.

நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் இம் மாவட்டம் நடுக்காவிரியில் பிறந்தார்கள். ''ந'' என்ற எழுத்து நடுக் காவிரியைக் குறிக்கும்.

''வெள்ளி நாக்கு'' என்று புகழ்பெற்றவரும், ஆங்கிலத்தில், பேரறிவு பெற்றவரும், காந்தியடிகளுக்கு உற்ற நண்பருமான வி. எஸ். சீனிவாச சாஸ்திரியார், தஞ்சை மாவட்டம் குடந்தைக்கு அருகில் உள்ள வலங்கிமான் என்ற ஊரில் பிறந்தவர்கள்—ஆங்கில எழுத்தாகிய ''வி''—வலங்கிமானைக் குறிக்கும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தஞ்சை மாவட்டத்தில், சைவ வைணவத் திருமடங்கள் பல உள்ளன. அவைகளில், தருமை ஆதீனம், திருவாவடுதுறை ஆதீனம், திருப்பனந்தாள் காசிமடம், சூரியனார் கோயில் ஆதீனம் முதலியன திருமடங்களாகும்.

இதுகாறும் விளக்கப்பட்ட செய்திகளைக் கொண்டு சோழ நாட்டின் நெற்களஞ்சியமான தஞ்சை மாவட்டத் தனிச் சிறப்பை ஒருவாறு கண்டு கொள்ளலாம். இம்மாவட்டத்தின் மையப் பகுதியில் அமைந்துள்ள கும்பகோணத்தில்தான் தென்னாட்டுக் கும்பமேளாவாகிய மகாமகப் பெருவிழா, பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறுகிறது. தமிழகத்திலும், தென்னாட்டிலும் எந்த மாவட்டத்திலும், நடைபெறாத இத்தகைய பெருவிழா தஞ்சை மாவட்டத்தில் நடைபெற்று வருவது, சிறப்பனைத்திற்கும் மகுடம் போன்றது.

எவன்மறை முழுதும் ஏத்திடப்படுவான்
எவன்மறை முடிவில் வீற்றிருப்பான்
எவன்மறை முடிவும் உணர்தரப் படாதான்
எவன் உயிர்க்குயிரெனப் படுவான்
எவன்வெளி முதலாம் பூதமுமாகி
இயம்பிய வல்லவும் ஆவான்
அவன் ஒரு குடமுக்கமர்பர சிவன்மற்று
அவனடித் துணைமலர் தொழுவேன்

—திருக்குடந்தைப்புராணம்
(மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை)

எங்கும் சிவன் இருப்பன் ஆனாலும் ஏசற்ற
சங்கமத்தும் சற்குருவின் தன்னிடத்தும்—லிங்கத்தும்
ஆவின் உடம்பெல்லாமும் ஆவரித்து நிற்கினும் பால்
பாவு முலைக்கண் மிகுதிப்பார்

—சிவஞானப் பிரகாச வெண்பா

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கும்பகோணம் நகரச் சிறப்பு

ம. அண்ணாமலை

சோழநாட்டில், தஞ்சை மாவட்டத்தில் மத்தியப் பகுதியில், இம்பரும், உம்பரும் புகழ்ந்து பாராட்டிய குடமூக்கென்னும் கும்பகோணத்தலம் பழைமையிலும், புதுமையிலும் சிறப்புற்று விளங்கும் திருவூராகும். தெற்குப் பிராந்திய புகைவண்டித் தொடரில் அமைந்துள்ள நிலையத்தைக் கொண்டது. பொன் கொழிக்கும் காவிரியும், அரிசொல் ஆறும் வடக்கிலும், தெற்கிலும், மாலைபோல் இருபுறங்களில் ஓடுவது, தன்னிகரற்ற இயற்கை எழிலாகும்.

கும்பகோணம் என்றவுடன் எழில்மிகுந்த கோயில் மாநகரம் நம் கண்முன் நிற்கும். இந்நகரத்தில், எத்திக்கிலும், எங்கே திரும்பி னாலும் விண்ணளாவும் கோபுரங்கள் கொண்ட ஆலயங்கள் திகழ் கின்றன. இத்தலத்தில் உள்ள சைவ, வைணவ திருக்கோயில்கள், இத்தலத்தின், சமய, கலாசார, ஆன்மீகத் தொன்மையைப் பறை சாற்றி நிற்கின்றன. இத்திருக்கோயில்களின் அமைப்பு, அவற்றில் உள்ள சிற்பங்கள், மூர்த்திகளின் பெருமை, கல்வெட்டுச் செய்திகள் பல புண்ணியப் புனல்கள், இங்கு நடைபெறும் பெருவிழாக்கள், இந்நகருக்குரிய, அருளாளர்களின் பாமாலைகள், இத்தலத்தின் மாண்பினை, மக்களின் பண்பாட்டியல்பினை மேலும் உயர்த்து கின்றன.

கோயில் மாநகரம் :

தமிழகத்தில், காஞ்சிமா நகரமும், கும்பகோணம் நகரமும் ஒப்பிட்டுப் பார்க்கத்தக்க இருபெரு தலங்களாகும். இவ்விரண்டு நகரங்களையும் கோயில் மாநகரங்கள் என்று கூறப்படுகின்றது. ஒன்று பல்லவர் தலைநகரம், மற்றொன்று சோழரின் கருவூல நகரம்.

கும்பகோணத்திலுள்ள முக்கிய சிவாலயங்களையும் வைணவத் தலங்களையும் புண்ணியப் புனல்களையும் குறிப்பிடுவது ஆன்மீக அடியார்களின் வழிபாட்டிற்கு நலம் பயக்கும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவாலயங்கள்

1. கும்பேசுவரர் எனும் குடமூக்கு
2. நாகேசுவரர் எனும் கீழ்க்கோட்டம்
3. சோமேசுவரர் எனும், குடந்தைக் காரோகனம்
4. பாணபுரீசுவரர் திருக்கோயில்
5 காசிவிசுவநாதர் திருக்கோயில்
6. ஏகாம்பரேசர் திருக்கோயில்
7. அபிமுகேசர் திருக்கோயில்
8. கௌதமேசர் திருக்கோயில்
9. காளத்திஈசர் திருக்கோயில்
10. கம்பட்ட விசுவநாதர் திருக்கோயில்

வைணவக் கோயில்கள்

1. சாரங்கபாணி திருக்கோயில்
2. சக்கரபாணி திருக்கோயில்
3. இராமசாமி திருக்கோயில்
4. இராசகோபால சுவாமி திருக்கோயில்
5. வராகப்பெருமாள் திருக்கோயில்
6. வேத நாராயணப் பெருமாள் திருக்கோயில்
7. தசாவதாரக் கோயில்

இவற்றையன்றித் தெருக்கள்தோறும் சைவ வைணவ ஆலயங்கள் உள்ளன. விரிவஞ்சி விடுக்கின்றோம்.

திருமடங்கள்

இந்நகரின் மற்றொரு சிறப்பு யாதெனில் இங்கு இருக்கும் திருமடங்கள் ஆகும். அனேகமாக எல்லா சமயத்தார்க்கும் திருமடங்கள் இங்கே உள்ளன வென்றே கூறலாம். திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள், குன்றக்குடி, வீரசைவம், காஞ்சிகாமகோடி ஆதீனங்களின் கிளை மடங்களும் அகோபில மடம், ஆண்டவன் ஆசிரமம், மத்வாச்சாரியார் முதலிய வைணவ ஆதீனங்களின் கிளை மடங்களும் குடந்தையில் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், சன்மார்க்க நிலையங்களும் பஜனை மடங்களும் இந் நகரின் ஆன்மீகப் பொலிவினை மேலும் உயர்த்துகின்றன.

வரலாறு

ஒரு காலத்தில் பிரம சிருஷ்டிக் காரணமாகிய சிருட்டி பீஜம் தங்கப்பட்ட இடம் திருக்குடந்தை என்பது வரலாறு. பிரளய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காலத்தில் மிதந்துவந்த அமுதம் நிரம்பிய குடத்தைச் சிவ பெருமான், வேட வடிவங் கொண்டு அம்பிட்டுக் குடத்தின் மூக்கு வழியே அமுதத்தை நாலா பக்கங்களிலும், பரவச்செய்த இடம் இதுவேயாகும். அமுத குடத்தை அலங்கரித்திருந்த மாவிலை, தர்ப்பை, உறி, வில்வம், தேங்காய், பூணூல் முதலியன விழுந்த இடங்கள் தனித்தனிக் கோயில்களாக விளங்கும். அமுத கும்பத்தி லிருந்து அமுதம் நாலா பக்கங்களிலும் பரவி ஐந்து குரோசம் வரையில் சென்று செழுமையாக்கிய பஞ்சகுரோசத் தலங்கள் தன்னைச் சூழ்ந்ததாக உடைய மாநகரம் கும்பகோணமாகும்.

பிரளய காலத்தில் கிருட்டிபீசம் தங்கிய இடமே **குடமூக்கு** என்றும், அக்குடத்திலிருந்த வில்வம் விழுந்த இடம் **கீழ்க் கோட்டம்** என்றும், அக்குடத்தின் உறிதங்கிய இடம், **குடந்தைக் காரோணம்**, என்றும், தேங்காய் தங்கிய இடம், **அபிமுகேசர்** கோயில் எனவும், பூணூல் தங்கிய இடம் **கௌதமேசுவரர்** கோயில் என்றும், சிவபெருமான் அம்பு இடம் **பாணபுரீசர்** கோயில் என்றும் குடந்தைத்தல மான்மியம் பேசுகின்றது.

பஞ்சக்குரோசத் தலங்கள்

குடந்தையைச் சுற்றியுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க பஞ்ச குரோசத் தலங்களாவன: (1) திருவிடைமருதூர் (2) திருநாகேச் சுரம் (3) தாரகேஸ்வரம் (தாராசுரம்) (4) திருவேரகம் (சுவாமி மலை) (5) திருப்பாடல்வளம் (கருப்பூர்).

பக்தர்கள் மாசிமகத்திற்கு முன்பாக இத்தலங்களுக்கு யாத்திரை சென்று, புனித நீராடி வழிபட்டு வருவது ஒரு மரபு. இதை பஞ்சகுரோச யாத்திரை என்று நம் முன்னோர்கள் சொல்வ துண்டு.

மூர்க்க நாயனார்

தொண்டை நாட்டில், திருவேற்காடு எனும் பதியில் தோன்றிய மூர்த்தி நாயனார், சிவனடியார்களை சிவன் என்றே வணங்கி அவர்களுக்கு உணவு அளித்தும், வேண்டிய பொருள் களைக் கொடுத்தும் வழிபட்டு வந்தார். இவ்விதம் செய்துவரும் நாளில், தன்பொருளை இழந்தார். அதனால் சூதாட்டம் ஆடிப் பொர்ருள் ஈட்டினார். தொண்டை நாட்டில் சூதாட யாரும் இல்லாமையால் திருக்குடந்தைக்கு வந்து, சூது ஆடி, அதில் கிடைக்கும் பொருளை எல்லாம், சிவனடியார்களுக்குச் செலவிட்டு,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மூர்க்கர், நற்சூதர் என்று பெயர்பெற்று, செய்த சிவபுண்ணியத்தால் சிவனடி சேர்ந்தார். இவர் 63 நாயன்மார்களில் ஒருவராகத் திகழ்கிறார். இவரைப்பற்றிய சிறப்பைப் பெரிய புராணத்தில் காணலாம்.

> "தொண்டைவள நாட்டுவளர் வேற்காட்டுவாழ்
> தொல்லுழவர் நற்சூதர் சூதுவென்று
> கொண்டபொருள் கொண்டன்பர்க் கமுதளிக்கும்
> கொள்கையினார், **திருக்குடந்தை** குறுகியுள்ளார்
> விண்டிசைவு குழறுமொழி வீணர்மாள
> வெகுண்டிடலான், மூர்க்கரென விளம்பும்நாமம்
> எண்டிசையும், மிகவுடையார் அண்டர்போற்றும்
> ஏழுலகம் உடனாறாம் இயல்பினரே" —**புராணசாரம்**

திருமுறையும், புராணங்களும்

கும்பகோணத்தில் உள்ள மூன்று பாடல்பெற்ற சிவாலயங்களுக்கு (குடமூக்கு, கீழ்க்கோட்டம், காரோணம்) நான்கு தேவாரப் பதிகங்கள் உள்ளன. விளக்கத்தை மற்றப்பகுதியில் காணலாம்.

மேலும், வடமொழி பவுடிகம், பிரமாண்டம், காந்தம் முதலிய புராணங்களில் இத்தலத்தைப் பற்றிச் சொல்லப்பட்டுள்ளது. திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் இயற்றிய "**திருக்குடந்தைப் புராணம்**" ஒரு சிறந்த நூலாகும். 70 படலங்கள் 2384 செய்யுட்களையும் கொண்ட இந்நூல், சொற்சுவை, பொருட்சுவை, கொண்ட இன்தமிழ் நூலென்றே கூற வேண்டும். சைவஅன்பர்கள் இந்நூலைப் படித்துப் பயன்பெற வேண்டுகின்றோம்.

புனிதப் புனல்கள்

இத்தலத்தில், மகாமகத்தீர்த்தம், பொற்றாமரைத் தீர்த்தம், காசிபதீர்த்தம், பகவத் தீர்த்தம், சங்கர தீர்த்தம் முதலிய புண்ணியப் புனல்கள் உள்ளன.

மூர்த்தி, தலம், தீர்த்தம்

மேற்குறிப்பிட்ட வரலாற்றுச் சிறப்பினால் இத்தலம், மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்று வகையானும் சிறந்து விளங்கும் திருத்தலமாகும்.

வேறுபல சிறப்புகள்

கும்பகோணம் ஒரு காலத்தில் சோழர்களுக்குத் தலைநகராய் விளங்கியது என்றும் சொல்லப்படுகிறது. காவிரிக்கரையில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காட்சிகளுக்கிடையில் மிகவும் கீர்த்தி வாய்ந்த கும்பகோணம் சர்க்கார் கல்லூரி பழம் பெருமை வாய்ந்தது. இது தென்னிந்திய "கேம் பிரிட்ஜ்" என்று புகழப்படும். கும்பகோணம் கல்லூரியில் சாதுசேஷய்யர், பூண்டி அரங்கநாத முதலியார், டாக்டர் உ. வே. சாமிநாத அய்யர், தியாகராஜ செட்டியார் முதலிய புகழ்பெற்ற பேரறிஞர்கள் பணியாற்றி வந்திருக்கிறார்கள். உலகப் புகழ்பெற்ற கனிதமேதை இராமானுஜம் இக்கல்லூரியில்தான் பயின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. ஆகவே இக்கல்லூரி வரலாற்று சிறப் புடையதாகும்.

மகான்கள்

பாடகச்சேரி சுவாமிகள், மௌனசாமி போன்ற பல மகான்கள் இந்நகரில் தோன்றி பல அற்புத செயற்கரிய செயல்களைப் புரிந் திருக்கிறார்கள்.

வணிக நகரம்

கும்பகோணத்தில் வெள்ளி, பித்தளை, வெண்கலம், ஈயம், எவர் சில்வர் முதலிய பாத்திர உற்பத்தியும், பட்டு, நூல், முதலிய ஆடை உற்பத்தியும் நறுமணப் பொருள்கள் வியாபாரமும் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

ஆகவே காசியிலும், வீசம் அதிகம் என்று போற்றப்படும் கும்பகோணம், தமிழகத்தில் தலை சிறந்த ஒரு நன்நகரம் என்றே கூறவேண்டும்.

ஆவேறு இறைவனரு ளுருவுடைய
திருக் கோயிற் களவே இன்று
பாவேறு மெய்ப் புலவர் பாட்டேற
அருள் சுரந்து பரவ வொண்ணாக்
கோவேறு முந்நாட்டின் முன்னாடாய்ச்
சோழர் குலக் கொடியே யென்னக்
காவேரி வளங்காட்டும் திருநாட்டின்
பெருமையது கரையப் போமோ!

—திருநாகேச்சுரப்புராணம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மகாமக மகிமை

இந்தியப் பெருநாட்டில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை குறிப்பிட்ட புண்ணிய நாளில் மிக முக்கியமாகவரும் பெருவிழா, வடக்கே உத்திரப்பிரதேசத்தில் பிரயாகையில் கும்பமேளாவும். தென்னிந்தியாவில், கும்பகோணத்தில் மகாமகமும் ஆகும். மகாமகப் பெருவிழாவை தேசியத் திருவிழா என்றே கூறப்படுகிறது.

கும்பகோணம் நகரின் நடுவில், கண்கவர் காட்சியுடன், சுற்றிலும் பலமண்டபக் கோயில்களைக் கொண்டு விளங்குவது மகாமகத் திருக்குளமாகும்.

திருக்குடந்தைப் புராணத்தில் கூறப்படுகின்ற அமுத கும்பத்திலிருந்து வழிந்தோடிய அமுதத்தின் ஒருபகுதி தென்கீழ்திசையில் வந்து தங்கிய இவ்விடமே மகாமகத் தீர்த்தமாக விளங்கியது. கங்கை, யமுனை, கோதாவரி, நருமதை, சரஸ்வதி, காவேரி, குமரி, பயோடினி, சரயு முதலிய நதிகளின் தேவதைகளான நவகன்னியர்களும் தங்கள் நதிகளில் எண்ணிறந்த மக்கள் வந்து நீராடுவதால் தங்களுக்கு உண்டாகும் பாவத்தைப் போக்கிக் கொள்ளப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வரும் ஒரு நன்னாளில் நீராடுவதாகச் சொல்லப்படுகிறது. குரு சிம்மராசியிலும். சூரியன் கும்பராசியிலும் வரும் மாசிமகத்தன்று, பௌர்ணமியும் சேருகின்ற நிலையில், கும்பராசியில் சூரியன் இவர்களையும், இவர்கள் சூரியனையும் முழுப்பார்வையுடன் பார்க்கும் நாளே—இந்த நன்னாளான மகாமகப் புண்ணிய நாளாகும். இந்த நாளில் கங்கை முதலிய நதிகள் மகாமகக் குளத்தில் வந்து சேர்வதாகப் புராணம் கூறுகிறது.

"தாவிமுதல் காவிரி நல்யமுனை கங்கை,
சரஸ்வதி, பொற்றாமரை புட்கரணி தெண்ணீர்க்
கோவியொடு குமரிவரு தீர்த்தஞ் சூழ்ந்த
குடந்தைக் கீழ்க் கோட்டத்தெங் கூத்தனாரே"

என்று சொல்லின் வேந்தராகிய நம் அப்பர் பெருமான், திருக்குடந்தைக் கீழ்க்கோட்டத்துப் பதிகத்தில் குறிப்பிடுவது இந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வரலாற்றை மெய்ப்பிக்கின்றது. மேலும் மேலும், ஆளுடைய பிள்ளையாராகிய திருஞானசம்பந்தப் பெருமான், திருக்குடமூக்கை வழிபட்டபின்னர், திருத்தொண்டருடன் திருக்கீழ்க் கோட்டத் திற்கு வருகை தந்து, சிந்தை மகிழ்வுற வணங்கினார். பிறகு கந்த மலர்ப் பொருள் சூழ்ந்த காரோணம் சென்றடைந்தார். அப்போது கங்கை முதல் பெரும்புனல் மகாமகத்தில் நீராடுதற்கு வந்த வரலாற்றை எண்ணி, காரோணத்தானைக் கண்குளிர கழல் பணிந்து இன்புற்றார். இக்காட்சியை, தெய்வச் சேக்கிழார் திருஞானசம்பந்தப் பெருமானின் புராணத்தில் பக்திச் சுவை நனி சொட்டச் சொட்ட பாடிய பாடலின் இனிமைதான் என்னே?

''பூமருவுங் கங்கை முதல் புனிதமாம் பெருந்தீர்த்தம்
மாமகந்தான் ஆடுதற்கு வந்துவழி படுங்கோயில்
தூமருவு மலர்க்கையால் தொழுது வலங்கொண்டணைந்து
காமர்கெட நுதல் விழித்தார் கழல் பணிந்து கண்களித்தார்''
(பெ. பு-409)

நாவின் மன்னரும், நானிலம் போற்றும் தொண்டர்சீர் பரவு வாரும் புகழ்ந்து போற்றப்பட்ட புனிதப்புனலான மகாமகத் திருக் குளத்தின், மேன்மையையும், வரலாற்றுச் சிறப்பையும், வார்த்தை யால் வர்ணிக்க இயலுமோ?

மேலும், சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த திரிசிரபுரம், மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் இயற்றிய அற்புத நூலான திருக்குடந்தைப் புராணத்தில் மகாமகப் புனித நீரின் பெருமையைப் பற்றி இயற்றிய பாடல்களாவன :

''பரிசித்தோர் பவப்பற்றறுங் கங்கைநீர்
உரிசித் தோருக்கு உயர் பதமொன்றுமே
வரிசிப்பார் புகழ் **மகாமகக் கங்கையைத்**
தெரிசித் தோர்க்குச் செனனமதில்லையே''

உமையொரு பாகங்கொண்ட உத்தமன் சொரூப மேய
அமைதர நெடுந்தூரத்தே அமர்ந்துளத் தெண்ணினாலும்
இமைநொடியளவிற்பாவம் அனைத்தையும் இரிப்பதாய
கமைதரு மகதீர்த்தம் போல் புவனத்துள் காண்பதின்றே
—மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை

மகாமகத் திருக்குளத்திற்கு, **அமுதவாவி, அமுத தீர்த்தம், கன்னியர் தீர்த்தம், பாபநாசத் தீர்த்தம்** முதலிய பெயர்களும் உண்டு. இக்குளத்தைச் சுற்றிலும் 16 மண்டபங்கள் அழகுறக் காட்சியளிக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கின்றன. இவை சோடலிங்க மண்டபங்கள் எனப்படும். இந்த மண்டபங்களை, தஞ்சையில் மந்திரியாயிருந்த கோவிந்த தீட்சதர் என்பவரால் (கி. பி. 1542இல்) அரசனுடைய ஆதரவில் கட்டப் பட்டதாகச் சொல்லப்படுகிறது.

இந்த பதினாறு மண்டபங்களில் உள்ள மூர்த்திகளின் பெயர்களாவன :

1. பிரமதீர்த்தேசுவரர்
2. முகுந்தேசுவரர்
3. தளேசுவரர்
4. விருடபேசுவரர்
5. பரணேசுவரர்
6. கோணேசுவரர்
7. பக்திகேசுவரர்
8. பயிரவேசுவரர்
9. அகத்தீசுவரர்
10. வியாசேசுவரர்
11. உமைபாகேசுவரர்
12. நைருதீசுவரர்
13. பிரம்மேசுவரர்
14. கங்காதரேசுவரர்
15. முக்ததீர்த்தேசுவரர்
16. சேத்திரபாலேசுவரர்

இந்த பதினாறு மண்டபங்களில் வடகரையில் முதலாவதா யுள்ள பிரம்ம தீர்த்தேசுவர மண்டபத்தில் துலாபாரச் சித்திரம் உள்ளது. இதற்குத் துலாபார மண்டலம் என்றும் பெயர் உண்டு. அச்சுதப்ப நாயக்கர் துலையின்—தராசின் ஓர் தட்டில் நின்று கொண்டு மற்றொரு தட்டில் பொன்னை நிறுத்துக் கொடுத்ததாகச் சொல்லப்படுகிறது.

நவகன்னியர்கள் மகாமகக் குளத்தில் புனித நீராடி தங்களது பாவங்களைப் போக்கிக்கொண்டு, எப்பொழுதும் நவதீர்த்தங்களாக அக்குளத்திலே தங்கியதால் இத்தீர்த்தத்திற்குக் கன்னியாதீர்த்தம் என்ற பெயரும் வழங்கப்படுகின்றது. இந்த நவ தீர்த்தங்களோடு எட்டுத் திக்குகளிலும் உள்ள தீர்த்தங்களாவன :

1. கிழக்கு—இந்திரதீர்த்தம்
2. தென்கிழக்கு—அக்னி தீர்த்தம்
3. தெற்கு—யமதீர்த்தம்
4. தென்மேற்கு—கிருதி தீர்த்தம்
5. மேற்கு—வருண தீர்த்தம்
6. வடமேற்கு—வாயுதீர்த்தம்
7. வடக்கு—குபேர தீர்த்தம்
8. வடகிழக்கு—ஈசான்ய தீர்த்தம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நவகன்னியர்கள் தீர்த்தம்

1. கங்கை	6. காவேரி
2. யமுனை	7. குமரி
3. கோதாவரி	8. பயோடினி
4. நருமதை	9. சரயு
5. சரஸ்வதி	

குளத்தின் மத்தியில் உள்ளது **பிர்மதீர்த்தம்**. ஆகவே மகாமகக் குளத்தில் 18 தீர்த்தங்கள் உள்ளன.

மகாமகக்குளத்தின் வடகரையில் உள்ள அருள்மிகு காசிவிசுவ நாதர் கோயிலில், நவகன்னியர்களின் திருஉருவங்கள் தெற்கு முகமாக மகாமகத் தீர்த்தத்தை நோக்கியவாறு காட்சி அளிக்கின்றன.

மகாமகத்தன்று குடந்தை நகருக்கு பிரதான மூர்த்தியாகிய அருள்மிகு கும்பேசுவரர், மங்களநாயகியுடனும், மற்றைய பரிவாரங்களோடு மகாமகக்குளம் வடகரையில் பிர்மதீர்த்த கட்டத்தில் எழுந்தருளியிருப்பார். அருள்மிகு நாகேசுவரர், அகுள்மிகு சோமேசுவரர்,அருள்மிகு கௌதமேசுவரர், அருள்மிகு காளேசுவரர், அருள்மிகு கோடீசுவரர், அருள்மிகு பாணபுரீசுவரர், அருள்மிகு கம்பட்ட விசுவநாதர் எல்லா மூர்த்திகளும் தம் தம் நீராடும் கட்டங்களில் அமர்ந்து தீர்த்தம் கொடுப்பார்க்ள்.

இக்காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

சிவபக்தர்கள், மகாமகக் குளத்தில் புனிதநீராடி, பொற்றாமரைக் குளத்திலும், காவேரியிலும் நீராடுவதை மரபாகக் கொண்டுள்ளனர்.

மகாமகநாளில் இந்திய நாட்டின் பல இடங்களிலிருந்து மக்கள் திரளாக வந்து மகாமகத்திருக்குளத்தில் நீராடியும், குளக்கரையில் காட்சியளிக்கும், பலமூர்த்திகளையும் தரிசித்து வழிபட்டு இம்மை மறுமைக்குரிய பல பேறுகளைப் பெறுவார்கள். இவ்வளவு சிறப்புடைய மகாமகத்தீர்த்தத்தில் நீராடும் நல்வாய்ப்புப் பெற்றவர்கள் நிறைந்த புண்ணியம் செய்திருக்க வேண்டும். இல்லையேல் இத்தகைய கிடைத்தற்கரிய நல்வாய்ப்பு கிடைக்காது என்றே நம் முன்னோர்கள் சொல்வார்கள்.

இவ்வாண்டு இத்தகைய புனித மகாமகப் பெருவிழா— பிரஜோற்பத்தி மாசித்திங்கள் 6ஆம் நாள் (18-2-1992) அன்று நடைபெறுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருக்குடந்தைக் குடமூக்குத் தலவரலாறு

(ஆதிகும்பேசுவரர் திருக்கோயில்)

இத்தலம் கும்பகோணம் புகைவண்டி நிலையத்திலிருந்து மேற்கே சுமார் 1½ கி.மீ. தூரத்தில் உள்ளது. குடந்தை நகரத்தின் நடுவில் உள்ளது. கும்பகோணத்திலுள்ள ஏனைய சிவன் கோயில் களுக்கெல்லாம் இத்தலம் தலைமைக் கோயிலாக விளங்குகின்றது.

பிரளய காலத்தில் சிருட்டி பீசம் தாங்கிய குடம், தங்கிய இடமே குடமூக்கு என்று போற்றப்படும். அமுதகுடத்தை சிவ பெருமான் வேடவடிவங்கொண்டு அம்பிட்டுக் குடத்தின் மூக்கு வழியே அமுதத்தைப் பரவச்செய்த இடம். உலகிற்கு ஆதி காரண மாகிய பராபரம் கும்பத்தில் தோன்றியதால் **ஆதிகும்பேசுவரர்** என்றும், அமுத கும்பத்தில் தோன்றியதால் **அமுதகும்பேசர்** எனவும், சுவையுடைய அமுதத்தை உதித்ததால் **அமுதேசர்** என்றும் வழங்கப்படுகின்றன. திருஞான சம்பந்தர் தமது பதிகத்தில் **"குழகன்"** என்று அழைக்கிறார். தேவியாருக்கு **மங்களநாயகி** என்ற திருப்பெயர் உண்டு.

நகரத்தின் நடுநாயகமாகிய கும்பேசுவரர் கோயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இதன் ராஜகோபுரம் ஒன்பது மாடங் களைக் கொண்டு ஓங்கி உயர்ந்து காட்சி அளிக்கிறது. மூன்று பிரகாரங்களைக் கொண்ட இத்திருக்கோயில் மிகப்பெரியது. தெற்கு வாயிலுக்குக் கோபுரம் இல்லை. ஏனைய மூன்றுக்கும் கோபுரங்கள் உண்டு. தலத்திற்குரிய மரம் **வன்னி.**

இறைவன் இத்தலத்திற்கு வருவதை அறிந்து விநாயகரும். இத்தலத்தை ஆதியில் அடைந்தமையால், இவருக்கு **ஆதிவிநாயகர்** எனப் பெயர் பெற்றார்.

இத்தலம் தோன்றிய வரலாறு முன்னர் கூறப்பட்டுள்ளது. இத்தலம் பஞ்ச குரோசத் தலங்கள் சூழ்ந்தது.

மங்கள தீர்த்தம் என்று கூறப்படும் திருக்குளம் ஒன்று இக் கோயிலில் அமைந்துள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



அருள்மிகு ஆதி கும்பேசுவரர் கோயில் எனும்
திருக்குடமூக்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கருவறையில் வீற்றிருக்கும் கும்பேசுவரர் சிவலிங்கத் திருமேனி அமுதமும், மணலும் சேர்ந்து தோன்றியிருப்பதால் இது சுயம்பு திருமேனியாக விளங்குகின்றது. பௌர்ணமிதோறும் சிவலிங்கத் திற்குப் புனுகு சாற்றப்படுகிறது.

சிவகாமி உடனுறை ஆடல்பெருமானின் ஆனந்தக்காட்சி சிறப் பானது. அம்பாளுடன் சோமாஸ்கந்தர் பொலிவுடன் விளங்கு கிறார். அறுபத்து மூவர் உற்சவமூர்த்திகள் அழகுற விளங்கு கின்றனர். எங்கும் காண இயலாத ஆறுமுகப்பெருமான், ஆறு திருக்கரங்களுடன் திகழ்கின்றார்.

கும்பேசுவரருக்கு, இடப்பாகத்தில் அம்பிகை சந்நிதி கிழக்கு நோக்கி இருக்கிறது. வணங்குவார்க்கு மங்களத்தை அருளும் காட்சி கொண்டிருப்பதால், தேவியார், மங்களநாயகி என அழைக்கப்படுகிறாள். அம்பிகையின் அழகு ஒழுகும் திருமேனியைத் தரிசிக்கத் தனிப்பெரும் இன்பம் ஏற்படும்.

இத்தலத்தில் மற்றொரு சிறப்பு உண்டு. இத்தலம் உண்டாவ தற்குக் காரணமாகிய ஒரு சிலை உள்ளது. அதாவது அமுத குடத்தை அம்பால் சிதைத்த, சிவபெருமான், வேடஉருவத்தில் கிராத வேடத்தில் காட்சி அளிப்பது, இத்தலத்தின் வரலாற்றை பக்தர்கள் உணர்வதற்கு உறுதுணையாக இருக்கின்றது எனில் மிகையன்று.

இத்தலத்திற்குக் கிழக்கில் உள்ள மகாமகத்திருக்குளமும், வடக்கில் உள்ள காவிரியாறும் இத்தலத்தின் தீர்த்தவாரியாகும். மாசிமகத்தன்று ஆதிகும்பேசுவரர், பஞ்ச மூர்த்திகளுடன் மகாமகக் குளத்திற்குச் சென்று தீர்த்தம் கொடுக்கும். பன்னிரண்டு ஆண்டு களுக்கு ஒருமுறை, குரு சிம்ம ராசியிலும், சந்திரன் கும்பராசியிலும் வரும் மாசிமகப் பூசனை நாளில் வரும் மகாமகப் பெருவிழாவும், இக்கோயிலின் சார்பில் நடைபெறும் திருவிழாவாகும். மேலும் பங்குனி மாதத்தில் மகாமகக் குளத்தில் தெப்பத்திரு விழாவும் நடைபெற்றுவருகின்றது.

சித்திரை மாதத்தில் சப்தஸ்தான விழா நடைபெறும். அன்று ஆதிகும்பேசுவரர் மங்கள நாயகியுடன், அலங்கரிக்கப்பட்ட பல்லக்கில், சாக்கோட்டை, திருக்கலையநல்லூர், தாராசுரம், திருவலஞ்சுழி, சுவாமிமலை, கொட்டையூர், மேலக்காவிரி முதலிய ஏழு தலங்களுக்கு எழுந்தருளி மக்களுக்குக் காட்சி கொடுத்துத் திரும்புவார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இக்கோயிலில் தினந்தோறும் காலையில் முதலில் சூரியனுக்கும் மாலையில் முதலில் சந்திரனுக்கும் தீபாராதனை செய்வது வழக்கம்.

இத்திருக்கோயிலை, பிரமன், அகத்தியர், கிருதவீரியன், வீரவர்மன், இந்திரன், ஏமரிஷி முதலியோர் வழிபட்டுப் பேறு பெற்றதாகக் கூறப்படுகிறது.

இத்தலத்தில் ஆண்டுதோறும் நவராத்திரி உற்சவ நாட்களில், சிறப்பும், அழகும், பொருந்திய கண்கவர் சிற்பங்களை அமைத்து வைக்கப்படும். இதைக்காண ஆயிரக்கணக்கான பக்தர்கள் இந் நாட்களில் வழிபட வருவதுண்டு.

இக்கோயிலின் வெளிசந்நிதியில், ஏராளமான கடைகள் இருப்ப தாலும், இக்கோயில் குடந்தைக்கு நடுவில், பெரிய கடை வீதிக்கு மத்தியில் இருப்பதாலும் தினந்தோறும் பொதுமக்களும், பக்தர் களும் ஆயிரக்கணக்கில் வருகிறார்கள். இதனால் இக்கோயிலில் நித்திய திருவிழா நடைபெறுவதுபோல் காட்சி அளிக்கின்றது.

பிரதோஷ காலத்தில் இத்திருக்கோயிலில், நந்தியம் பெருமா னுக்கு, அபிஷேக ஆராதனை சிறப்பாகச் செய்து, கும்பேசுவரருக்கு சிறப்பு வழிபாடு செய்வதால் அதிக எண்ணிக்கையில் பக்தர்கள் வந்து பிரதோஷ வழிபாட்டில் கலந்து கொள்கிறார்கள்.

இத்தலத்திற்கு. ஞானசம்பந்தர் தேவாரப்பதிகமும் (3ஆம் திருமுறை) அப்பர் பெருமானின் தேவாரத் திருப்பதிகமும் (5ஆம் திருமுறை) உண்டு. மேலும் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை இயற்றிய சிறந்தப் நூலாகிய "திருக்குடந்தைப் புராணத்தில்" இத்தலத்தைப் பற்றி பலபாடல்கள் பாடியுள்ளார் கள். இந்நூலில் உள்ள மங்களாம்பிகைப் பிள்ளைத் தமிழைப் படிக்கப் படிக்க இன்பம் பயப்பனவாக இருப்பது குறிப்பிடத்தக்கது. தமிழ்ச் சுவையும், பக்திச் சுவையும் கலந்த பனுவல்களைக் கொண்ட இப்புராணத்தை சைவர்கள் ஓதற்குரியது.

இத்தலத்தைத் தரிசித்தால் எல்லா நன்மைகளும் கிட்டும். நேரில் தரிசிக்க இயலாதவர்கள், இத்தலத்தின் பெயரை வாயாரப் பலமுறை சொல்லி, மனமார வழி பட்டாலும், தங்கள் கொடிய வினை தீரும் என்பதனை அப்பர் பெருமான் அறிவுறுத்தியுள்ளார்.

"குடமூக்கே குடமூக்கே என்பீ ராகில்
கொடுவினைகள் தீர்ந்து அரனைக் குறுகலாமே"

—நாவுக்கரசர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருக்குடமூக்கு

(முக்கியக் குறிப்பு)

1. இருப்பிடம் : கும்பகோணம்

2. தலப்பெயர் : திருக்குடமூக்கு

3. கோயில் : அருள்மிகு ஆதிகும்பேசுவரர் ஆலயம்

4. தலவிருட்சம் : வன்னி

5. தலவிநாயகர் : ஆதிவிநாயகர்

6. இறைவன் : ஆதிகும்பேசுவரர்; அமுதகும்பேசர், அமுதேசர்

7. இறைவி : மங்களநாயகி, மங்களாம்பிகை

8. புண்ணியப்புனல் : மகாமகத்தீர்த்தம், காசிபதீர்த்தம் (காவிரித்துறை)

9. மூர்த்திச்சிறப்பு : கும்பேசர் சிவலிங்கம் அமுதமும் மணலும் சேர்ந்த சுயம்பு திருமேனி. கிராத மூர்த்தி சிலை : ஆறுமுகத்திற்கு ஆறு திருக்கரங்கள்.

10 சிற்பச் சிறப்பு : உள்மண்டபம், அம்மன் மண்டபத்தின் தூண்களில் சிற்பக்கலை பொருந்திய உருவங்கள் : நவராத்திரி மண்டபத்தில் 27 நட்சத்திரங்கள், 12 ராசிகள் ஒரே கல்லில் செதுக்கப்பட்டுள்ளன.

11. வழிபட்டோர் : பிரமன், அகத்தியர், கிருதவீரியன், வீரவர்மன், இந்திரன், ஏமரிஷி முதலியோர்.

12. நூல்கள் : திருஞானசம்பந்தர் அருளிய தேவாரப் பதிகம் (மூன்றாம் திருமுறை) திருநாவுக்கரசர் அருளிய தேவாரப் பதிகம், (6ஆம் திருமுறை) தனித்திருத்தாண்டகம் (6ஆம் திருமுறை), திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம்பிள்ளை இயற்றிய திருக்குடந்தைப் புராணம், அருணகிரிநாதர் திருப்புகழ்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருக்குடமூக்கு

திருஞானசம்பந்த சுவாமிகள் அருளியது

(மூன்றாம் திருமுறை)

பண்—பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

அரவிரி கோடனீடலணி காவிரி யாற்றயலே
மரவிரி போதுமௌவல் மணமல்லிகை கள்ளவிழும்
குரவிரி சோலைசூழ்ந்த குழகன்குட மூக்கிடமா
இரவிரி திங்கள்சூடி யிருந்தானவ னெம்மிறையே. 1

ஓத்தர வங்களோடு மொலிகாவிரி யாற்றயலே
பூத்தர வங்களோடும் புகைகொண்டடி போற்றிநல்ல
கூத்தர் வங்களோவரக் குழகன்குட மூக்கிடமா
ஏத்தர வங்கள்செய்ய இருந்தானவ னெம்மிறையே. 2

மயில்பெடை புல்கியால மணல்மேல்மட அன்னமல்கும்
பயில்பெடை வண்டுபண் செய்பழங் காவிரிப்பைம் பொழில்வாய்க்
குயில்பெடை யோடுபாட லுடையான்குட மூக்கிடமா
இயலொடு வானமேத்த இருந்தானவ னெம்மிறையே. 3

மிக்கரை தாழவேங்கை யுரியார்த்துமை யாள்வெருவ
அக்கர வாமயேன மருப்போடவை பூண்டழகார்
கொக்கரை யோடுபாட லுடையான்குட மூக்கிடமா
எக்கரை யாருமேந்த இருந்தானவ னெம்மிறையே. 4

வடிவுடை வாட்டடங்கண் ணுமையஞ்சவோர் வாரணத்தைப்
பொடியணி மேனிமூடவுரி கொண்டவன் புன்சடையான்
கொடிநெடு மாடமோங்குங் குழகன்குட மூக்கிடமா
இடி படுவானமேத்த இருந்தானவ னெம்மிறையே. 5

கழைவளர் கவ்வைமுத்தங் கமழ்காவிரி யாற்றயலே
தழைவளர் மாவின்நல்ல பலவின்கனி கள்தயங்கும்
குழைவளர் சோலைசூழ்ந்த குழகன்குட மூக்கிடமா
இழைவளர் மங்கையோடு மிருந்தானவ னெம்மிறையே, 6

மலைமலி மங்கைபாகம் மகிழ்ந்தானெழில் வையமுய்யச்
சிலைமலி வெங்கணையாய் சிதைத்தாள்புர மூன்றினையும்
குலைமலி தண்பலவின் பழம்வீழ்குட மூக்கிடமா
இலைமலி சூலமேந்தி யிருந்தானவ னெம்மிறையே. 7

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நெடுமுடி பத்துடைய நிகழ்வாளரக் கன்னுடலைப்
படுமிடர் கண்டயரப் பருமால்வரைக் கீழடர்த்தான்
கொடுமடல் தங்குதெங்கு பழம்வீழ்குட மூக்கிடமா
இடுமண லெக்கர்சூழ் இருந்தானவ னெம்மிறையே. 8

ஆரெரி யாழியானு மலரானு மளப்பரிய
நீரிரி புன்சடைமேல் நிரம்பாமதி சூடிநல்ல
கூரெரி யாகிநீண்ட குழகன்குட மூக்கிடமா
ஈரிரு கோவணத்தோ டிருந்தானவ னெம்மிறையே. 9

மூடிய சீவரத்தார் முதுமட்டையர் மோட்டமணர்
நாடிய தேவரெல்லா நயந்தேத்திய நன்னலத்தான்
கூடிய குன்றமெல்லா முடையான்குட மூக்கிடமா
ஏடலர் கொன்றைசூடி யிருந்தானவ னெம்மிறையே. 10

வெண்கொடி மாடமோங்கு விறல்வெங்குரு நன்னகரான்
நண்பொடு நின்றசீரான் தமிழ்ஞான சம்பந்தனல்ல
தண்குட மூக்கமர்ந்தா னடிசேர்தமிழ் பத்தும்வல்லார்
விண்புடை மேலுலகம் வியப்பெய்துவர் வீடெளிதே. 11

திருச்சிற்றம்பலம்

திருக்குடமூக்கு

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளியது
(ஐந்தாம் திருமுறை)
திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

பூவ ணத்தவன் புண்ணிய னண்ணியங்
காவ ணத்துடை யானடி யார்களைத்
தீவ ணத்திரு நீறுமெய் பூசியோர்
கோவ ணத்துடை யான்குட மூக்கிலே. 1

பூத்தா டிக்கழி யாதேநீர் பூமியீர்
தீத்தா டித்திறஞ் சிந்தையுள் வைம்மினோ
வேர்த்தா டுங்காளி தன்விசை தீர்கென்று
கூத்தா டியுறை யுங்குட மூக்கிலே. 2

நங்கை யாளுமை யாளுறை நாதனார்
அங்கை யாளோ டறுபதந் தாழ்சடைக்
கங்கை யானவள் கன்னி யெனப்படும்
கொங்கை யான்உறை யுங்குட மூக்கிலே. 3

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஓதா நாவன் திறத்தை யுரைத்திரேல்
ஏதா னும்மினி தாகும் மியமுனை
சேதா ஏறுடை யரனமர்ந் தவ்விடம்
கோதா விரியுறை யுங்குட மூக்கிலே. 4

நக்க ரையனை நாடோறும் நன்னெஞ்செ
வக்க ரையுற வானை வணங்குநீ
அக்க ரையோ டரவரை யார்த்தவன்
கொக்க ரையுடை யான்குட மூக்கிலே 5

துறவி நெஞ்சின ராகிய தொண்டர்காள்
பிறவி நீங்கப் பிதற்றுமின் பித்தராய்
மறவனாய்ப் பார்த்தன் மேற்கணை தொட்டஎங்
குறவ னார்உறை யுங்குட மூக்கிலே. 6

தொண்ட ராகித் தொழுது பணிமினோ
பண்டை வல்வினை பற்றற வேண்டுவீர்
விண்ட வர்புரம் மூன்றொரு மாத்திரைக்
கொண்ட வன்உறை யுங்குட மூக்கிலே. 7

காமி யஞ்செய்து காலங் கழியாதே
ஓமியஞ் செய்தங் குள்ளத் துணர்மினோ
சாமி யோடு சரச்சு வதியவள்
கோமி யும்உறை யுங்குட மூக்கிலே. 8

சிரமஞ் செய்து சிவனுக்குப் பத்தராய்ப்
பரம னைப்பல நாளும் பயிற்றுமின்
பிரமன் மாலொடு மற்றொழிந் தார்க்கெல்லாம்
குரவ னார்உறை யுங்குட மூக்கிலே. 9

அன்று தானரக் கன்க யிலாயத்தைச்
சென்று தானெடுக் கஉமை அஞ்சலும்
நன்று தான்நக்கு நல்விர லூன்றிப்பின்
கொன்று கீதங்கேட் டான்குட மூக்கிலே. 10

திருச்சிற்றம்பலம்

நாளாய போகமே நஞ்சணியுங் கண்டனுக்கே
ஆளாய அன்பு செய்வோம் மடநெஞ்சமே,

—திருஞானசம்பந்தர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருத்தாண்டகம்

(6 ஆம் திருமுறை)

திருநாவுக்கரசர் அருளியது

விடமூக்கப் பாம்பே போல் சிந்தி நெஞ்சே
வெள்ளேற்றான் தன்தமரைக் கண்டபோது
வடமூக்க மாமுனிவர் போலச்சென்று
மாதவத்தார் மனத்துளார் மழுவாட் செல்வர்
படமூக்கப் பாம்பணையிற் பள்ளியானும்
பங்கயத்து மேலயனும் பரவிக்காணாக்
குடமூக்கே குடமூக்கே என்பீராகில்
கொடுவினைகள் தீர்ந்தரனைக் குறுகலாமே.

திருக்குடந்தைப் புராணம்

(மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை இயற்றியது)

1. பூமேய வாரணனும் நாரணனும்
வாரணனும் பொற் பூமாலைத்
தேமேய விண்ணவரும் நண்ணவரும்
பசு முலதாஞ் சிறப்பு நல்கி
மாமேய குடமூக்கி னிட மூக்கின்
பார்கருணை வடிவின் மேய
பாமேய புகாதி கும்பேசர்
தாமரைத்தாள் பணிந்து வாழ்வாம்.

2. ஐயனே போற்றி முக்கண் அமலனே போற்றி சூலக்
கையனே போற்றி நெற்றிக் கண்ணனே போற்றிமேனிச்
செய்யனே போற்றி நீங்காச் செல்வனே போற்றி வெய்யோர்
வெய்யனே போற்றிலங்கும் விளங்கு கும்பேச போற்றி.

மங்கள நாயகி

3. பரவுமலர்க் கருங்குழலும் செவ்வாயும்
வெண்ணகையும் பசிய தோளும்
விரிவுசுவை மொறியு மெழில் வழியுமருள்
பொழியுமிரு விழியும் ஞானத்
துரவுமலி தன்தடமும் கொடியிடையும்
பட்டுடையும் ஒளிர் பூங் கையும்
கரவுதவிர் மங்கள நாயகி இருதாள்
மலரும் உளங்கருதி வாழ்வாம்.

4. எண்ணிய அனைத்தும் எண்ணியாங் கெய்த
எண்ணிய அடியவர்க் கருளும்
புண்ணிய் முதலே பூரணப் பொருளே
போக்கருஞ் சுடர்ப்பெரு விளக்கே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தண்ணிய சாந்தரூபியே நாளும்
தவாதமந் திராசன வாழ்வே
மண்ணிய மணியே வளமலி குடந்தை
மங்களையே நின் தான் போற்றி.

மங்களாம்பிகை பிள்ளைத்தமிழ்

5. இழியுந் தொழிற் புகுந்துமல
இருட்டும் விளக்குங் கருங்குழலும்
எழில் கொப்புளிக்கும் திருமுகமும்
இருகை யுதித்த பெருவெள்ளங்
கழியுந் திவலையா யொடுங்கக்
சச்சமில்லா அருள் வெள்ளம்
கதிக்கப் பொழியுங் கடைக்கண்ணும்
கருது ஞானம் பொழிதனமும்
பழியு மறமுங் கடந்தன்பர்
பற்றத் தகுமோர் பற்றாய்
பாதாம் புயமும் மிகப் பொலிந்து
பரவப் பரவு வெள்ளருவி
வழியும் இமயவரைப் பிறந்த
வனிதாய்! வருக! வருகவே!
மறைவாழ்த் தொலிசால் திருக்குடந்தை
மடந்தாய் வருக! வருகவே!

அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ்

மாலைதனில் வந்து வீதிதனில் நின்று
வாசமலர் சிந்து குழல்கோதி
வாரிரு தனங்கள் பூணொடு குலுங்க
மால்பெருகி நின்ற மடவாரைச்
சாலை வழிவந்து போமவர் கணின்று
தாழ்குழல்கள் கண்டு தடுமாறித்
தாகமயல்கொண்டு மாலிருள முந்தி
சாலமிகு நொந்து தவியாமல்
காலையிலெழுந்து னாமமெ மொழிந்து
காதலுமை மைந்த எனவோதிக்
காலமுமுணர்ந்து ஞானவெளிக் கண்கள்
காண அருளென்று பெறுவேனோ
கோலமுடனன்று சூர்படையின்முன்பு
கோபமுடனின்ற குமரேசா
கோதையிரு பங்கின் மேவவளர் கும்ப
கோணநகர் வந்த பெருமாளே!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம் வரலாறு

(நாகேசுவரர் திருக்கோயில்)

இத்தலம் கும்பகோணம் புகைவண்டி நிலையத்திலிருந்து மேற்கே 1 கி.மீ. தூரத்தில் நகரின் நடுவில் உள்ளது. இத்திருக் கோயிலை நாகராசன் பூசித்ததால் இறைவன் **நாகேசப் பெருமா னாக** விளங்குகிறார். அதனால் இக்கோயில் நாகேசுவரர் கோயில் என்று அழைக்கப்படுகிறது. திருக்குடந்தையில் விளங்கும் ஆதி கும்பேசுவரர் என்னும் குடமூக்குக்குக் கிழக்கே இத்திருக்கோயில் அமைந்திருப்பதால் இதனைக் கீழ்க்கோட்டம் என்று முன்னோர் அழைத்தனர். மேலும், கும்பகோணத்திற்குக் கிழக்கே 6 கி.மீ. தொலைவில் உள்ள திருநாகேசுவரமும் நாகராஜன் வழிபட்ட தலமாகும். ஆகவே, வேறுபாடு தெரிவதற்காக குடந்தைக் கீழ்க் கோட்டப் பெருமானை, **நாகேசுவரசுவாமி** என்றும், திருநாகேசு வரப் பெருமானை **நாகநாதசுவாமி** எனவும் நம் முன்னோர்கள் பெயரிட்டிருப்பது நம் முன்னோர்களின் தெளிந்த அறிவாற்றலுக்கு ஒரு எடுத்துக்காட்டு.

பிரளய காலத்தில் சிருட்டி பீசம் தாங்கிய குடம் தங்கிய இடமே, குடமூக்கு என்று போற்றப்படும் ஆதிகும்பேசுவரர் திருக் கோயிலாகும். அக்குடத்திலிருந்த வில்வம் விழுந்த இடமே, இக் கீழ்கோட்டம் ஆதலின், இத்தலம் **வில்வவனம்** என்று போற்றப் பெறுகின்றது.

கோயில் அமைப்பு

இக்கோயில் கிழக்கு நோக்கியுள்ள சந்நிதியைப் பெற்று விளங்கு கின்றது. நாற்புறமும், பெரிய மதில்கள் சூழ்ந்தன. இராசகோபுரம் ஐந்து மாடங்கள் கொண்டது. கிழக்குக் கோபுரம் தவத்திரு பாடகச் சேரி சுவாமி என்ற அருளாளரால் கட்டப்பட்டது. இக்கோபுரத்தில் பாடகச்சேரி சுவாமிகளின் திருவுருவமும், அவரைப்பற்றிய வரலாற்றுச் சிற்பங்களும் உள்ளன.

இரண்டாவது பிரகாரத்தில் ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியும் காளியும் தாண்டவப் போட்டியில் திகழ்கின்றனர். இது காண வேண்டிய ஒரு காட்சியாக விளங்குகின்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வடபுரம் ஆடலரசு விளங்கும் பேரம்பலம் பெருமை வாய்ந்த தாய்த் திகழ்கின்றது. இந்த ஆடல் வல்லான் அம்பலம் தேர் அமைப்பில் அமைந்திருப்பது ஒரு தனிச்சிறப்பு. இத்தேர் மண்டபத்தில் இருக்கும் பெரிய கல்சக்கரங்களும், அவைகளில் காணப்பெறும் சிற்பங்களும் கண்டுகளிக்கவேண்டுவன. கல்சக்கரம் ஒவ்வொன்றிலும் 12 இராசிகள் சிற்பங்களாக அமைக்கப்பட்டுள்ளது, முன்னோர் சிற்பக் கலைத்திறனைக் காட்டுகின்றது. முன்பக்கம் இருகுதிரைகளும், நான்கு பெரிய யானைகளும் பாகர் சூழ விளங்குவது கண்ணிற்கினிய கலைப்பெட்டகமாகத் திகழ்கின்றது.

உள்பிரகாரத்தில் பிரளய கால ருத்திரர் சந்நிதி இக்கோயிலுக்குரிய தனிச்சிறப்பாகும். வெளிப்பிரகாரத்தில் வடபால் உள்ள துர்க்கை சந்நிதி மிகவும் சிறப்பு வாய்ந்தது. நாகேசுவரர் கருவறையில் நாகேசப் பெருமான் இலிங்கத் திருமேனியில், நாகாபரணம் பூண்டு, ஞானச்செல்வராய் விளங்குகிறார். கருவறை விமானச் சுவர்களில் பல ஒப்பற்ற சிற்பங்கள் காட்சி தருகின்றன. பார்வதி பரமேசுவரர் திருவுருவம் பார்ப்போர் மனத்தைக் கொள்ளை கொள்கிறது. இங்கு பல முனிவர்களின் திருவுருவங்களையும் காணலாம்.

அம்பிகை, பெரியநாயகியின் சந்நதி தெற்குநோக்கித் திகழ்கின்றது. பெயருக்கேற்ப, பெரியதிருவுடன், எழில்மிகு காட்சி கொண்டு விளங்குகிறாள் அம்பிகை. வேண்டுவார்க்கு வேண்டுவன அளிப்பாள் போல் அருள்சுரந்த திருமேனியின் திருமுகத்தைப் பார்க்கப் பார்க்கப் பரவசம் ஏற்படும்.

தீர்த்தம்

இத்தலத்திலுள்ள சிங்க தீர்த்தத்தை, நாகராசன் வழிபட்டதால் நாகதீர்த்தம், என்று அழைக்கப்படுகிறது. இப்புனிதப் புனலில் திருவாதிரை நன்னாளில் நீராடி நாகேசுவரப் பெருமானை வழிபடுவோர், எண்ணியவை கைகூடும் என்று கூறப்படுகின்றது. அத்துடன், கூபம், சூரியபுட்கரணி முதலிய தீர்த்தங்களும் உள்ளன. மேலும், குடந்தைக்குத் தனிச்சிறப்பைத் தருவதாகிய ''மகாமந்திரக்குளம்'' இக்கோயிலுக்குரிய புண்ணியப் புனலாகும். மாசிமகத்தன்று நாகேசப் பெருமான் இக்குளத்தில் தீர்த்தவாரி கண்டருளுவார், நாகேசப் பெருமான் மாசிமகத்தன்று எழுந்தருள மகாமகக்குளக் கரையில், தனிமண்டபம் அமைந்துள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாகராஜன் வழிபட்டது

முன்னொரு காலத்தில் நாகங்களுக்குத் தலைவனான ஆதிசேடன், உடல் சோர்வு நீங்கி, வலிமை பெற, திருக்கயிலையில் சிவபெருமானை வழிபட்டு முறையிட்டான். சிவபெருமானின் அருள்வாக்குப்படி, நாகஅரசன், தென்னாட்டில், சோழநாட்டில், காவிரித்தென்கரையில் குடந்தையம்பதியில் உள்ள நாகேசுவரம் திருத்தலத்தை எய்தி, மகாசிவராத்திரி நன்னாளில் **அசுவத்த** தீர்த்தத்தில் நீராடி வில்வவனேசரையும், பெரியநாயகியையும் பல காலம் வழிபட்டு வந்தபோது சிவபெருமான் பாம்புகளை ஆபரணங் களாகப் பூண்டு, பிறைசூடி, உமாதேவியுடன் காட்சி அளித்தார். ஆதிசேடனுக்கு வலிமை தந்து எல்லா நலங்களையும் அருளினார். இதனால் இத்தலம் நாகேசுவரம் என்றும், புண்ணியப்புனல் நாக தீர்த்தம் எனவும் அழைக்கப் பெறலாயின.

சூரியன் வழிபட்டது

ஒருசமயம் ஒருசந்தர்ப்பத்தில் சூரியன் தன் ஒளியை இழந்து வருந்தினான். அப்போது ஒரு வானொலி கேட்டது. அதன்படி சூரியன் இத்தலத்தை அடைந்து, ஒருபுண்ணியப் புனலை அமைத்து அதில் நீராடி நாகேசுவரப் பெருமானையும், தேவியையும் வழிபட்டு வந்தான். சிவபெருமான் அருளால் இழந்த கிரணங்களை மீண்டும் பெற்றான். இதனால் இத்தலம் **பாஸ்கர சேத்திரம்** எனவும், புனல், சூரியதீர்த்தம் எனவும் அழைக்கப்படலாயின. இக்கோயிலுள், சூரியன் மேற்கு முகமாகத் தனிக் கோயில் கொண்டிருப்பது இவ் வரலாற்றை உறுதிப்படுத்துகின்றது. மேலும் சூரியனுடைய கிரணங்கள், ஆண்டுதோறும் சித்திரைத் திங்களில், 11, 12, 13 நாட் களில் சிவபெருமானின் திருமேனியில் படிவதை சூரிய பூசையாகக் கொண்டு, பக்தர்கள் ஆண்டுதோறும் சிறப்புவழிபாடு செய் கின்றனர். சூரிய தீர்த்தத்தில் ஞாயிற்றுக் கிழமைகளில் நீராடு வோர் அனைத்துப் பேறுகளையும் பெற்று இன்புறுவர்.

பகவர் வழிபட்டது

திருமறைக்காடு என்று போற்றப்படும் வேதாரண்யத்தில் வாழ்ந்து வந்த **பகவர்** என்ற ஒரு அந்தணர் வாழ்ந்து வந்தார். அவர் தனது தாயார் இறந்த பிறகு. அவரது எலும்புகளைக் கங்கை யில் விடுவதற்குக் காசிக்குப் புறப்பட்டதாகவும், அங்கே சென்ற போது சில நிகழ்ச்சிகளின் காரணமாக காவிரி தீரத்தின் மாண்பினை வியந்து, காசியிலிருந்து புறப்பட்டு, கும்பகோணத்தை அடைந்து, காவிரிக்கரையில் குடத்தை அவிழ்த்த போது, எலும்பு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கள் மணமிக்க தாமரை மலர்களாக விளங்கினதாகவும், பின்னர் அவைகளைக்காவிரியில் கரைத்து, கிரியைகளை இனிதே முடித்ததாகவும் ஒரு வரலாறு உண்டு. பின்னர், இத்தலத்தில் பகவர் சில காலம் தங்கி வழிபட்டு, முத்தியின்பம் எய்தினார் என்னும், காவிரித்துறை, **பகவத்தீர்த்தம்** என்னும், **பகவத் படித்துறை** என்றும் வழங்கலாயிற்று. இக்கோயிலில் பகவர் திருவுருவம் அமைந்துள்ளது.

விழாக்கள்

ஒவ்வொரு மாதமும் சில முக்கிய விழாக்கள் நடைபெற்று வந்தாலும், பங்குனி மாதத்தில் 10 நாட்களுக்கு நாகேசப் பெருமானுக்கு சிறப்பு உற்சவம் நடைபெற்றுவருகின்றது.

கல்வெட்டுகள்

இத்திருக்கோயிலில் அனேக கல்வெட்டுகள் இருக்கின்றன. குடந்தையிலுள்ள கோயில்களுக்குள்ளும். அதிகமாகக் கல்வெட்டுகள் அமைந்த கோயில், இக்கோயிலே ஆகும். இக்கல்வெட்டுகள் தொல்பொருள் ஆய்வுத்துறையினரால் படியெடுக்கப்பட்டு, தக்க ஆவணங்களில் பதிப்பிக்கப் பெற்றுள்ளன.

இத்திருக்கோயிலுக்கு அப்பர் பெருமான் அருளிச்செய்த பதிகம் 6 ஆம் திருமுறையில் இடம் பெற்றுள்ளது.

மேலும் நாவுக்கரசர் அருளிச்செய்த தனித்திருத்தாண்டகம் ஒன்றிலும் இத்தலத்தைப் பற்றிய குறிப்பு உள்ளது.

11 ஆம் திருமுறையில் உள்ள ஐயடிகள் காடவர்கோன் நாயனார் அருளிச் செய்த க்ஷேத்திரத் திருவெண்பாவிலும் இத்தலத்தைப்பற்றிய ஒரு வெண்பா உண்டு.

மேலும் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் இயற்றிய திருக்குடந்தைப்புராணத்தில் நாகேசப் படலத்தில், இக்கோயிலின் பெருமை குறிக்கப்பட்டுள்ளது.

நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்
நினையா தொரு போதும்-இருந்தறியேன்.

—திருநாவுக்கரசர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம்

(முக்கியக் குறிப்பு)

இருப்பிடம்	:	கும்பகோணம்
தலப்பெயர்	:	குடந்தைக் கீழ்க்கோட்டம்
கோயில்	:	அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில்
தலவிநாயகர்	:	சித்திவிநாயகர்
இறைவன்	:	மடந்தை பாகர்: அருள்மிகு நாகேசுவரர்
இறைவி	:	பெரியநாயகி
புண்ணியப்புனல்	:	சிங்கதீர்த்தம், நாகதீர்த்தம், மகாமகத் தீர்த்தம்
தலவிருட்சம்	:	வில்வம்
மூர்த்தி சிறப்பு	:	பிரளய காலருத்திரர், சூரியன், துர்க்கை, சுப்பிரமணியர், அர்த்த நாரீசர், காளி
சிற்பச்சிறப்பு	:	ஆடல்வல்லான் அம்பலம், அர்த்தநாரீசர், துர்க்கை
வழிபாட்டுச் சிறப்பு	:	சித்திரை. 11, 12, 13 நாட்களில் காலையில் சூரிய பூசை நிகழ்கிறது.
வழிபட்டோர்	:	நாகராசன் (ஆதிசேடன்), சூரியன், பகவர் முதலியோர்.
நூல்கள்	:	திருநாவுக்கரசர் தேவாரம் (6ஆம்திருமுறை) தனித்திருத்தாண்டகம் ஐயடிகள் காடவர் கோன் க்ஷேத்திரத் திருவெண்பா (11 ஆம் திருமுறை) மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை திருக்குடந்தைப் புராணம்

காலைதொழ அற்றவினைக் கட்டகலும் கட்டுச்சி
வேளைதொழ இப்பிறப்பில் வெந்துயர்போம்—மாலையினில்
வந்துசிவன் தாளை வந்திக்கில் ஏழ்பிறப்பின்
வெந்துயர மெல்லாம் விடும்.

—சிவதரிசன மகத்துவம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருக்குடந்தைக் கீழ்கோட்டம்

திருநாவுக்கரசு நாயனார் அருளியது
திருத்தாண்டகம் : ஆறாம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

சொன்மலிந்த மறைநான்கா றங்கமாகிச்
சொற்பொருளுங் கடந்தசுடர் சோதிபோலும்
கன்மலிந்த கயிலைமலை வாணர்போலும்
கடல்நஞ்ச முண்டிருண்ட கண்டர்போலும்
மன்மலிந்த மணிவரைத்திண் தோளர்போலும்
மலையரையன் மடப்பாவை மணாளர்போலும்
கொன்மலிந்த மூவிலைவேற் குழகர்போலும்
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்தனாரே. 1

கானல் இளங் கலிமறவ னாகிப்பார்த்தன்
கருத்தளவு செருத்தொகுதி கண்டார்போலும்
ஆன்நல் இளங் கடுவிடை யொன்றேறி அண்டத்து
அம்பாலும் பலிதிரியும் அழகர்போலும்
தேனலிளந் துவலைமலி தென்றல் முன்றிற்
செழும்பொழிற் பூம்பாளைவிரி தேறல்நாறும்
கூனல்இளம் பிறைதடவு கொடிகொள்மாடக்
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்தனாரே. 2

நீறலைத்த திருவுருவும் நெற்றிக்கண்ணும்
நிலா அலைத்த பாம்பினொடு நிறைநீர்க்கங்கை
ஆறலைத்த சடைமுடியும் அம்பொன்தோளும்
அடியவர்க்குக் காட்டியருள் புரிவார்போலும்
ஏறலைத்த நிமிர்கொடியொன் றுடையார்போலும்
ஏழுலகுந் தொழுகழலெம் ஈசர்போலும்
கூறலைத்த மலைமடந்தைக் கொழுநர்போலும்
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்தனாரே. 3

தக்கனது பெருவேள்வி தகர்த்தார்போலும்
சந்திரனைக் கலைகவர்ந்து தரித்தார் போலும்
செக்கரொளி பவளவொளி மின்னின்சோதி
செழுஞ் சுடர்த்தீ ஞாயிறெனச் செய்யர்போலும்
மிக்கதிறல் மறையவரால் விளங்கு வேள்வி
மிகுபுகைபோய் விண்பொழியக் கழனியெல்லாம்
கொக்கினிய கனிசிதறித் தேறல்பாயுங்
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்தனாரே. 4

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காலன்வலி தொலைத்தகழற் காலர் போலும்
காமனெழில் அழல்விழுங்கக் கண்டார்போலும்
ஆலதனிற் அறநால்வர்க் களித்தார் போலும்
ஆணொடுபெண் ணலியல்ல ரானார் போலும்
நீலவுரு வயிரநிரை பச்சைச்செம் பொன்
நெடும்பளிங் கென்றறிவரிய நிறத்தார்போலும்
கோலமணி கொழித்திழியும் பொன்னி நன்னீர்க்
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்தனாரே. 5

முடிகொண்ட வளர்மதியும் மூன்றாய்த் தோன்றும்
முளைஞாயி றன்னமலர்க் கண்கள் மூன்றும்
அடிகொண்ட சிலம்பொலியும் அருளார் சோதி
அணிமுறுவற் செவ்வாயும் அழகாய்த்தோன்றத்
துடிகொண்ட இடைமடவாள் பாகங்கொண்டு
சுடர்ச்சோதிக் கடிச்செம்பொன் மலைபோலிந்நாள்
குடிகொண்டென் மனத்தகத்தே புகுந்தார் போலும்
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்தனாரே. 6

காரிலங்கு திருவுருவத் தவற்கும் மற்றைக்
கமலத்திற் காரணற்குங் காட்சியொண்ணாச்
சீரிலங்கு தழற்பிழம்பிற் சிவந்தார் போலும்
சிலைவளைவித் தவுணர்புறஞ் சிதைத்தார் போலும்
பாரிலங்கு புனல் அனல் கால் பரமாகாசம்
பரிதிமதி சுருதியுமாய்ப் பரந்தார் போலும்
கூரிலங்கு வேற்குமரன் தாதை போலும்
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்தனாரே. 7

பூச்சூழ்ந்த பொழில்தழுவு புகலூருள்ளார்
புறம்பயத்தார் அறம்புரி பூந் துருத்திபுக்கு
மாச் சூழ்ந்த பழனத்தார் நெய்த்தானத்தார்
மாதவத்து வளர் சோற்றுத் துறையார் நல்ல
தீச்சூழ்ந்த திகிரிதிரு மாலுக்கீந்து
திருவானைக் காவிலோர் சிலந்திக் கந்நாள்
கோச்சோழர் குலத்தரசு கொடுத்தார் போலும்
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்தனாரே. 8

பொங்கரவர் புலித்தோலர் புராணர் மார்பிற்
பொறி கிளர்வெண் பூணநூல் புனிதர் போலும்
சங்கரவக் கடன்முகடு தட்டவிட்டு
சதுரநடம் ஆட்டுகந்த சைவர் போலும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அங்கரவத் திருவடிக்காட் பிழைப்பத் தந்தை
அந்தணனை அறஎறிந்தார்க் கருளப்போதே
கொங்கரவச் சடைக்கொன்றை கொடுத்தார் போலும்
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்தனாரே. 9

ஏவியிடர்க் கடலிடைப்பட் டிளைக்கின்றேனை
இப்பிறவி யறுத்தேற வாங்கியாங்கே
கூவியம ருலகனைத்து முருவிப் போக
குறியில்அறு குணத்தாண்டு கொண்டார்போலும்
தாவிமுதல் காவிரிநல் யமுனைகங்கை
சரசுவதிபொற் றாமரைபுட் கரணிதெண்ணீர்க்
கோவியொடு குமரிவரு தீர்த்தஞ் சூழ்ந்த
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்தனாரே. 10

செறிகொண்ட சிந்தையினுள் தெளிந்து தேறித்
தித்திக்குஞ் சிவபவனத் தமுதம் போலும்
நெறிகொண்ட குழலியுமை பாகமாக
நிறைந்தமரர் கணம் வணங்க நின்றார்போலும்
மறிகொண்ட கரதலத்தெம் மைந்தர்போலும்
மதிலிலங்கைக் கோன்மலங்க வரைக்கீழிட்டுக்
குறிகொண்ட இன்னிசைகேட் டுகந்தார் போலும்
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்தனாரே. 11

திருச்சிற்றம்பலம்

தனித் திருத்தாண்டகம்

(ஆறாம் திருமுறை)

படமூக்கப் பாம்பணையா னோடு வானோன்
பங்கயனென் றங்கரைப் படைத்துக் கொண்டார்
குடமூக்கிற் கீழ்க்கோட்டம் கோயில் கொண்டார்
கூற்றுதைத் தோர்வேதியனை உய்யக் கொண்டார்
நெடுமூக்கிற் கரியினுரி மூடிக் கொண்டார்
நினையாத பாவிகளை நீங்கக் கொண்டார்
இடமாக்கி இடைமருதும் கொண்டார் பண்டே
என்னை இந்நாள் ஆட்கொண்ட இறைவர் தாமே.

—ஆளுடைய அரசு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

க்ஷேத்திர வெண்பா

கடுவடுத்த நீர்கொடுவா காடிதா என்று
நடுநடுத்து நாவடங்கா முன்னம்—பொடியடுத்த
பாழ்க்கோட்டஞ் சேராமுன் பன்மாடத் தென்குடந்தைக்
கீழ்க்கோட்டஞ் செப்பிக் கிட. —ஐயடிகள் காடவர்கோன்

சிவநாமப் பஃறொடை வெண்பா

கோலக் குடந்தைக்கீழ்க்கோட்டத்தில் வாழ்பெரியாள்
பாலுகந்து வாழ்மடந்தை பாகனே. —உமாபதி சிவம்

திருக்குடந்தைப் புராணம்

1. சோதியே கருணைவாழ்வே தூயமெய்ஞ் ஞானானந்த
ஆதியே அமலமூர்த்தி அற்புதக் கூத்தா அம்மை
பாதியே பரவுபொன்னிக் குடந்தைக் கீழ்க்கோட்டம்பற்று
நீதியே தேவ தேவ நின்னடித் துணைகள் போற்றி.

2. தாரணி சடிலம் போற்றி தழையருள் வதனம் போற்றி
காரணி கண்டம் போற்றி கையமர் மழுமான் போற்றி
கூரணி கருணை போற்றி குடந்தைக் கீழ்க் கோட்டம்மேய
ஏரணி கோலம் போற்றி இன்பவா ரிதியே போற்றி

3. அறிதரு மலர்கே நானாம் அகத்தொழியானாய் போற்றி
செறிதரு பிரமனாத் தேவர்தாழ தேவே போற்றி
குறிதரு கருணையோடு குடந்தைக்கீழ்க் கோட்டம்மேய
நெறிதரு வில்வநீழல் நின்மல மூர்த்தி போற்றி.

—மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை

பெரியநாயகியம்மை

ஆறாத் துயர் கொண் டடியேன் சலுப்ப அதுசெவியில்
ஏராமலே யிருந்தால் என்செய் வேன்எங்களீசற்கொரு
கூறாகி அண்டமுதலா இளமை குலவுதவப்
பேறாகி வாழ்பவளே குன்றைவாழும் பெரியம்மையே.

—சிவப்பிரகாசர்

படைத்திடல் படைத்த அனைத்தையும் காத்தல்
பரிவுறக் காத்தவை அனைத்தும்
துடைத்திடல் கருமம் துய்த்திட மறைத்தல்
துவந்தமாம் பாசங்கள் அனைத்தும்
உடைத்திடல் இவையோ ரைந்துநாயகனுக்
குடனிருந் தியற்றிடும் பாவாய்
அடைத்திட லறியாய் பொறியினேற் குவகை
அளித்தநின் பேரருள் போற்றி

—மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருக்குடந்தைக் காரோணம் வரலாறு

(சோமநாதர் திருக்கோயில்)

இத்தலம் கும்பகோணம் புகைவண்டி நிலையத்திலிருந்து மேற்கே 1 கி. மீ. தூரத்தில் பொற்றாமரைக் குளத்தின் கீழ்க் கரையில் அமைந்துள்ளது. இது சோமநாதர் திருக்கோயில் என்றும் வழங்கப்படுகிறது.

பண்டையகாலத்து மிதந்துவந்த அமுத கும்பத்தை சிவ பெருமான் சிதைத்தபோது, கும்பத்தில் இருந்த சிக்கம் (உறி) இங்கு விழுந்தபோது ஒரு இலிங்க வடிவுற்றது. ஆதலின் இத்தலத்துப் பெருமானுக்கு **சிக்கேசர்** என்னும் பெயர் வழங்கலாயிற்று. இக் கோயிலுள்ள தேனார் மொழியம்பிகை, நவகன்னியர் மாமகந்தான் ஆடுதற்கு ஆரவாரத்துடன் வந்தபோது இறைவன் திருமேனியை ஆரோகணித்ததால் இத்தலம் காரோணம் என்று சிறப்பாக வழங்கப்படுகிறது.

ஒருகாலத்தில் சந்திரன், பிரகஸ்பதியின் சாபத்திற்கு உள்ளாகி, மிகவும் துன்புற்றபோது குடந்தையையடைந்து காரோணநாதருக்கு வலப்புறத்தில் ஒரு தீர்த்தத்தை உண்டுபண்ணி இறைவனிடம் தன் குறை தீர வேண்டினான். சிவபெருமானும் அவர் சாபத்தைப் போக்கி அருள்பாலித்தார். அதனால் இறைவனுக்கு சோமேசர் என்றும், அம்பிகைக்கு சோமநாயகி என்றும் பெயர் உண்டாயிற்று. சந்திரனால் உண்டாக்கப்பட்ட தீர்த்தம் சந்திரபுஷ்கரணி என்றும் அழைக்கப் பெற்றது. ஒரு சமயம் வியாழபகவான் (குரு) இத் தலத்தை யடைந்து வழிபட்டு தனது விரும்பிய சித்திகளைப் பெற்றான். அதுபற்றி, இந்த மூர்த்தி வியாழ சோமேசர் என்றும் அழைக்கப்படுகிறார். நாளடைவில், வியாழ சோமேசர் என்ற சொற்றொடர் ஏழை சோமேசர் என்றும் வழங்கலாயிற்று.

பிறிதொரு சமயம் பராந்தகன் என்ற சோழமன்னன் மகப்பேறு கருதி இத்தலத்தை வழிபட்டதாகவும் வரலாறு உண்டு.

இதன் தோற்றம், இதன் தொன்மைத் தன்மையைக் காட்டு கிறது. அம்பிகை திருப்பெயர் தேனார் மொழியம்பிகை,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இத்தலத்திற்கு திருஞானசம்பந்தர் தேவாரப் பதிகம் ஒன்று உண்டு. (முதல் திருமுறை)

குறிப்பு : மகாமகக்குளத்தின் வடகரையில் உள்ள காசிவிசுவநாதர் திருக்கோயில்தான் "குடந்தைக் காரோணம்" என்று கூறுவதும் உண்டு.

திருக்குடந்தைக் காரோணம்
(முக்கியக் குறிப்பு)

இருப்பிடம் : கும்பகோணநகரில், பொற்றாமரைக் குளத்தின் கீழ்க்கரையில் உள்ளது.

தலப்பெயர் : திருக்குடந்தைக் காரோணம்.

கோயில் : அருள்மிகு சோமநாதர் திருக்கோயில்.

இறைவன் : சோமேசர், சோமநாதர், சிக்கேசர்,வியாழசோமேசர்.

இறைவி : தேனார் மொழியம்பிகை, சோமநாயகி.

புண்ணியப்புனல் : சந்திரபுட்கரணி, மகாமகத் தீர்த்தம்.

சிற்பக்கலை : திருஞானசம்பந்தர் திருவுருவம்

வழிபட்டோர் : சந்திரன், திருமால், பராந்தகன் என்ற சோழ மன்னன். வியாழபகவான் (குரு)

நூல்கள் : திருஞானசம்பந்தர் அருளிய தேவாரத் திருப்பதிகம் (முதல் திருமுறை)

மாதொர் பாகன் வலஞ்சுழி யீசனைப்
பாதமேத்தப் பறையும் நம் பாவமே.

—அப்பர்

நீள நினைந்தடியேன் உனை
நித்தலும் கை தொழுவேன்

—சுந்தரர்

நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்
நினையா தொரு போதும் இருந்தறியேன்.

—திருநாவுக்கரசர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருக்குடந்தைக் காரோணம்

திருஞானசம்பந்த சுவாமிகள் அருளியது

(முதல் திருமுறை) பண்—தக்கேசி

திருச்சிற்றம்பலம்

வாரார் கொங்கை மாதோர்பாக மாகவார்சடை
நீரார் கங்கை திங்கள்சூடி நெற்றி யொற்றைக்கண்
கூரார் மழுவொன் றேந்தியந்தண் குழகன் குடமூக்கில்
காரார் கண்டத் தெண்தோள் எந்தை காரோணத்தாரே. 1

முடியார் மன்னர் மடமான் விழியார் மூவுலகும் ஏத்தும்
படியார் பவள வாயார் பலரும் பரவிப் பணிந்தேத்தக்
கொடியார் விடையார் மாடவீதிக் குடந்தைக்குழகாரும்
கடியார் சோலைக் கலவமயிலார் காரோணத்தாரே. 2

மலையார் மங்கை பங்கர் அங்கை அனலர் மடலாரும்
குலையார் தெங்கு குளிர்கொள் வாழை யழகார் குடமூக்கில்
முலையாரணிபொன் முளை வெண்நகையார் மூவாமதியினார்
கலையார் மொழியார் காதல்செய்யுங் காரோணத்தாரே. 3

போதார் புனல்சேர் கந்தம் உந்திப் பொலியஅழகாரும்
தாதார் பொழில்சூழ்ந் தெழிலார் புறவி லந்தண்குடமூக்கில்
மாதார் மங்கை பாகமாக மனைகள் பலிதேர்வார்
காதார் குழையர் காளகண்டர் காரோணத்தாரே. 4

பூவார் பொய்கை அலர்தாமரை செங்கழுநீர் புறவெல்லாம்
தேவார் சிந்தை அந்தணாளர் சீராலடிபோற்றக்
கூவார் குயில்கள் ஆலும்மயில்கள் இன்சொற் கிளிப்பிள்ளை
காவார் பொழில்சூழ்ந் தழகார் குடந்தைக் காரோணத்தாரே. 5

மூப்பூர் நலிய நெதியார் விதியாய் முன்னே அனல்வாளி
கோப்பார் பார்த்தன் நிலைகண்டருளுங் குழகர்குடமூக்கில்
தீர்ப்பாருடலில் அடுநோய் அவலம் வினைகள் நலியாமைக்
காப்பார் காலன் அடையாவண்ணங் காரோணத்தாரே, 6

ஊனார்தலை கையேந்தியுலகம் பலிதேர்ந்துழல் வாழ்க்கை
மானார்தோலார் புலியினுடையார் கரியின் உரிபோர்வை
தேனார் மொழியார் திளைத்தங்காடித் திகழுங் குடமூக்கில்
கானார் நட்டம் உடையார் செல்வக் காரோணத்தாரே. 7

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வரையார் திரள்தோள் மதவாளரக்கன் எடுப்ப மலைசேரும்
விரையார் பாதம் நுதியாலூன்ற நெரிந்துசிரம்பத்தும்
உரையார் கீதம்பாடக் கேட்டங் கொளிவாள் கொடுத்தாரும்
கரையார் பொன்னி சூழ் தண்குடந்தைக் காரோணத்தாரே. ௮

கரியமாலுஞ் செய்யபூமேல் அயனுங் கழறிப்போய்
அரியஅண்டந் தேடிப்புக்கும் அளக்க வொண்கிலார்
தெரிய அரிய தேவர் செல்வந் திகழுங் குடமூக்கில்
கரியகண்டர் காலகாலர் காரோணத்தாரே. 9

நாணார் அமணர் நல்லதறியார் நாளுங் குரத்திகள்
பேணார் தூய்மை மாசுகழியார் பேசேலவரோடும்
சேணார் மதிதோய் மாடம்மல்கு செல்வ நெடுவீதிக்
கோணா கரமொன் றுடையார் குடந்தைக் காரோணத்தாரே.

கருவார் பொழில்சூழ்ந் தழகார் செல்வக் காரோணத்தாரைத்
திருவார் செல்வம் மல்கு சண்பைத் திகழுஞ் சம்பந்தன்
உருவார் செஞ்சொல் மாயிவை பத் துரைப்பா ருலகத்துக்
கருவா ரிடும்பைப் பிறப்பதறுத்துக் கவலைகழிவாரே.

திருச்சிற்றம்பலம்

பொய்மை யாளரைப் பாடாதே யெந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்!

—சுந்தரர்

ஒன்றும் நீயல்லை அன்றி யொன்றில்லை
யாருன்னை அறியகிற்பாரே

—மணிவாசகர்

எண்ணாத எண்ணம் எல்லாம் எண்ணி ஏழை நெஞ்சம்
புண்ஆகச் செய்தது இனிப் போதும் பராபரமே

—தாயுமானார்

சித்தம் தெளிவீர்காள், அத்தன் ஆரூரை
பத்தி மலர் தூவ முத்தியாகுமே

—திருஞானசம்பந்தர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருக்குடந்தைத் திருப்பதிகங்கள்

பேராசிரியர் முனைவர் கு. சுந்தரமூர்த்தி M.A. Ph.d.,
(அனைத்துலக சைவ சித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம், தருமபுரம்)

சோழநாட்டில் காவிரிக்குத் தென்கரையில் உள்ள திருப்பதிகளில் கும்பகோணம் என்பது ஒன்றாகும். திருமுறைகளில் குடந்தை, குடமூக்கு என இத்திருப்பதி அழைக்கப்பெறுகிறது. மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றானும் சிறப்பு உடையது. ஞானசம்பந்தர், நாவரசர் ஆகிய இருவர்தம் பாடல்பெற்ற சிறப்புடையது.

இத்திருப் பதியில் மேற்கூறிய இருபெருமக்களாலும் பாடல் பெற்ற திருக்கோயில்கள் மூன்று உள்ளன. அவை திருக்குடமூக்கு, திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம், திருக்குடந்தைக் காரோணம் என்பனவாம்.

திருக்குடமூக்கு :

நீர்ப் பெருக்குற்ற காலத்து இறைவன் ஆணையால் எவ்வுயிர்களையும் ஒருசேர வைத்த குடம் ஒன்று இத்திருப்பதியில் வந்து தங்கியதன் வாயிலாக, இறைவன் எழுந்தருளி அருள்செய்த இடமாதலின் திருக்குடமூக்கு எனப் பெயர்பெற்றது. திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் அருளிய பதிகங்கள் இத்திருக்கோவிலுக்கு உள்ளன:

திருஞானசம்பந்தர் திருப்பதிகம் :

"குழகனாகிய இறைவன் குடமூக்கு இடமா இருந்தான், அவன் எம் இறைவனாவான்'' எனும் கருத்து நிறைவுடன் ஒவ்வொரு பாடலும் நிறைவு பெறுகின்றது. இத்திருப்பதி காவிரியாற்றின் அருகிலுள்ளது என 1, 2, 3, 6 ஆகிய பாடல்கள் குறிப்பிடுகின்றன. இப்பதிகச் சிறப்பை மூவகையில் காணலாம்.

1. காவிரிச் சிறப்பு
2. இடச் சிறப்பு
3. பத்திமைச் சிறப்பு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

1. காவிரிச் சிறப்பு :

பாம்பைப் போலும் தண்டினையுடைய காந்தள் மணம் கமழும் காவிரி என முதல் பாடல் சிறப்பிக்கின்றது. பாம்பின் வடிவு காந்தள் தண்டிற்கும், அதன் படம் காந்தள் மலரிற்கும் உவமையாக அமைந்துள்ளன. அங்கு ஓதப்படும் மறை ஒலியோடு காவிரியின் நீரொலியும் இயைந்து ஒலிக்கின்றன என இரண்டாவது பாடல் சிறப்பிக்கின்றது. அடியவர்களின் 'போற்றி' ஒலியும் ஆற்றின் நீரொலியும் அல்லது பிற பயனற்ற ஒலிகள் எவையும் இன்று எனக் காட்டும் அழகு எண்ணற்குரியது. 'பழங்காவிரி' என மூன்றாவது பாடல் அதன் தொன்மைச் சிறப்பைக் குறித்து நிற்கிறது. 'மலைத் தலைய கடற்காவிரி' எனச் சங்க காலம் முதல் சிறப்பித்து வரும் பழமை அழகை இத்தொடர் நினைவுகூர வைக்கின்றது. 'மூங்கிலி னின்று உதிரும் உயர்ந்த முத்துக்கள் கமழ்கின்ற காவிரி' என ஆறாவது பாடல் சிறப்பிக்கின்றது. இது இத்திருப்பதியின் செல்வ வளத்தைக் காட்டுகின்றது. இவ்வாறு பழமையும் இயற்கைக் கிழமையும் சேர நிற்கும் காவிரிச் சிறப்பை இத்திருப்பாடல்களின் வழி காண இயலுகின்றது.

2. இடச் சிறப்பு :

ஒரு நாட்டின் வளத்திற்கு நீர்வளம் மிக்கிருத்தலினும் உயரிய நலம் யாதுளது? எனினும் அந்நீர் இயைந்த நிலத்தழகையும் கண்டு மகிழ்வோம். நீர்வளம் மிக்க சோலைச் சிறப்பைச் சிறப்பாக முதல் பாடலிலும் ஆறாவது பாடலிலும் காணமுடிகின்றது. வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரி நீர் பாயும் காவாக விளங்கு கின்றன அச்சோலைகள். ஆதலின் மராமரங்களின் மலர்கள், முல்லை மலர்கள், மல்லிகை மலர்கள், குரா மலர்கள் ஆகிய மலர்க ளெல்லாம் பூத்துக் குலுங்குகின்றன. அப்போதுகளின் வழித் தேன் சொரிந்தும் நிற்கின்றனவாம். இது முதற்பாடல் காட்டும் சோலை வளமாகும். இம்மலர் மணம் ஒருபுறமிருக்க, மாமரங்களும், பலா மரங்களும் தத்தம் கனிகளைச் சிந்தி உடல் வளம் மிகும் உணவைத் தந்து நிற்கின்றனவாம். அம்மரங்கள், தாமும் தழைய நின்று நம்மையும் தழைய வைக்கும் வளத்தை ஆறாவது பாடல் அழகுறக் காட்டி நிற்கின்றது. இனி இவ்வளங்களோடு இங்கிருக்கும் உயிரி னங்கள் பலவும் இன்புற்று வாழ்ந்திருக்கும் மாண்பை மூன்றாவது பாடல் விளக்குகின்றது. மயில் தன் பெடையுடன் ஆட, வண்டு தன் பெடையுடனும், குயில் தன் பெடையுடனும் பாடுகின்றன வாம். அருகிருக்கும் அன்னங்கள் இவ்வாடலையும், பாடலையும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கண்டு மகிழ்கின்றனவாம். இவ்வாடலும், பாடலும் உடல் வளமும், உள்ள நலமும் ஒருங்குடையார்க்கன்றோ வரும்? இப்பறவையினங் களே இவ்வாறு களிநடம் புரிந்து களிப்புற்றிருக்குமாயின் இங்கிருக்கும் மக்கள் நலத்தைச் சொல்லவும் வேண்டுமோ? என உய்த்துணருமாறு செய்திருக்கிறார் ஞானசம்பந்தர்.

3. **பத்திமைச் சிறப்பு :**

மறையொலியும், நீரொலியும் ஒருபுறம் அமைய, அடியவர்கள் பூவும், புகையும் கொண்டு ஏத்தும் ஒலி ஒரு புறமும் கூத்தொலி ஒருபுறமும் சிறக்க இறைவன் இயைந்து அருள் செய்கின்றான் என இரண்டாவது பாடல் இயம்புகின்றது. குடமூக்கில் உள்ள இவ் வடியவர்கள் அன்றி எத்திசையோரும் அங்கு போந்து ஏத்த இருந்தான் என நான்காவது பாடல் நவில்கின்றது. இதனால் பெருமானின் ஈர்த்தாட் கொள்ளும் கருணை புலனாகின்றது

ஞானசம்பந்தரின் பதிகங்களில் காணும் அமைப்பின்படி எட்டாவது பாடலில் இராவணனின் இழிசெயலும், ஒன்பதாவது பாடலில் மாலயன் காணா மாண்பும், பத்தாவது பாடலில் சமண புத்தர்க்குச் சார்பாய தேவர்களும் வணங்கும் தெய்வம் நம் தெய்வம் என்பதும் அருளிச் செய்யப்படுகின்றன.

பதிகப் பயன் :

இறைவன் திருவடியைச் சேர்தற்குரிய இத்தமிழ்ப் பாடல்கள் பத்தையும், இசையுணர்வும் பொருளுணர்வும் இயைந்த பத்திமை யுணர்வுடன் பாட, விண்ணுலகமும் அதற்கு மேலான வீட்டுல கமும் கிட்டும் என அருளப்படுகின்றது.

திருநாவுக்கரசர் திருப்பதிகம் :

நாவரசரின் திருக்குறுந்தொகைத் திருப்பதிகம் இதற்கு அமைந் துள்ளது. ஒருபுறம் இறைநலமும் பிறிதொருபுறம் இத்தகைய இறைவனை ஏத்துமின் என அருளும் பாங்கும் இத்திருப்பதிகத்தில் அமைந்துள்ளன.

இறைநலம் :

புண்ணியன், அடியார்களுக்கு அருளவல்லான், ஊழிக்காலத்து வெந்தமைந்த திருநீற்றை மெய்யின்கண் பூசியவன், கோவணன், காளியின் ஆற்றல் அடங்கக் கூத்தாடியவன், சிறப்புடைய சேதா வினை ஊர்தியாக உடையவன், அக்கரையோடு அரவார்த்தவன், பார்த்தன் மேல் கணை தொட்ட குறவன், திரிபுரத்தை ஒரு மாத்திரையளவில் எரித்தவன், மால், அயன் மற்றையோர் ஆகிய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எவர்க்கும் குரவன் எனப் பலவாறாக இறைவன் போற்றப் படுகிறான்.

ஏத்துமின் என அருளும் பாங்கு :

பூமியீர்! இறைவனின் பொருள்சேர் புகழைச் சிந்தையுள் வைம்மின்! ஓதாநாவன் திறத்தை உரைத்திரேல் ஏதானும், இனி தாகும். உள்ளத்துறவு பூண்டீர்காள்! நீவிர் நும்பிறவி நீங்கப் பிதற்றுமின்! பண்டை வல்வினை பற்றற வேண்டிடில் பெருமானின் தொண்டராகித் தொழுது பணிமின்! சிவனுக்குப் பக்தராய் நாளும் பயிற்றுமின்! என்பன போன்ற அறவுரைகள் அறைகூவி அழைக் கின்றன.

திருக்குடந்தைக் கீழ்க் கோட்டம் :

இறைவன் ஆணையால் உயிர்கள் அடைக்கப்பெற்ற கும்பத்தில் இருந்து விழுந்த வில்வம் சிவலிங்கத் திருமேனி கொண்டு அருளும் இடமிது என்பர். இத்திருப்பதியின்கண், பதிகம் பெற்ற திருக் கோவில்களுள் இது கிழக்கே இருப்பதால் கீழ்க் கோட்டம் என்று அழைக்கப்படுவதாயிற்று. இது பொழுது நாகேசுவர சுவாமி கோவில் என இது அழைக்கப் பெறுகிறது.

நாவரசர் திருத்தாண்டகம் கொண்டு போற்றியுள்ளார். கல் மலிந்த கயிலைமலை வாணர்போலும், மலையரையன் மடப்பாவை மணாளன் போலும், ஆறலைத்த சடைமுடியும், அம்பொன் தோளும் அடியவர்க்குக் காட்டி அருள் புரிவார் போலும் என்பன வாய பொருள்சேர் புகழ்நலம் இத்திருப்பதிகத்துப் போற்றி யுரைக்கப்படுகின்றன. கோச்செங்கட் சோழருக்கும், சண்டிகேசு வருக்கும் அருள் வழங்கிய பாங்கை 8, 9ஆம் பாடல்கள் எடுத் தியம்புகின்றன. 10ஆவது பாடலில் இத்திருப் பதிக்கே உரிய மகாமகச் சிறப்பு மாண்புறக் காட்டப்படுகிறது. குரு சிம்மராசியில் பொருந்த மாசித் திங்களில் மகமும் நிறைமதியும் சேருகின்ற நிலையில், இவர்கள் கும்பராசியில் இருக்கும் சூரியனையும், சூரியன் இவர்களையும் பார்க்கும் நாள் மகாமகப் புண்ணியநாள் என்பர். குரு கும்பராசிக்கு வருதல் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஆதலால் இம்மகாமகப் புண்ணிய காலமும் பன்னிரண்டு ஆண்டு களுக்கு ஒருமுறை வருகிறது. கங்கை, யமுனை, சரசுவதி, நர்மதை, கோதாவரி, காவிரி, சரயு, சிந்து, மகாநதி ஆகிய ஒன்பான் நதிகளும் ஒன்பது கன்னியராக மகாமக நாளில் இங்கு வந்து இக்குளத்தில் நீராடித் தம் பாவங்களைப் போக்கிக் கொள்வர் என்பர். இதற்கு அரணாக இத்திருத்தாண்டகத்துள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தாவி முதற் காவிரி நல் யமுனை கங்கை
சரசுவதி பொற்றாமரை புட்கரணி தெண்ணீர்க்
கோவியொடு குமரி வரு தீர்த்தஞ் சூழ்ந்த
குடந்தைக் கீழ்க் கோட்டத்தெங் கூத்தனாரே.

எனவரும் பத்தாவது பாடற்பகுதி அமைந்துள்ளது.

'பூமருவும் கங்கை முதல் புனிதமாம் பெருந்தீர்த்தம்
மாமகந் தானாடுதற்கு வந்து வழிபடும் கோவில்'

எனச் சேக்கிழார் இதனை வழிமொழிந் தருளுவர்.

திருக்குடந்தைக் காரோணம் :

ஒருடம்பில் ஓராற்றல் மேற்போந்து ஆட்சி செய்யுமாயின் அதனைக் காய ஆரோகணம் என்பர். காயம்-உடல். ஆரோகணம்-மேல் இவர்ந்து ஆட்சி செய்தல். இத்தொடர் காலப்போக்கில் காரோணம் என அழைக்கப் பெறுவதாயிற்று. இவ்வாறாய நிகழ்ச்சி இரு திருக்கோயில்களில் நிகழ்ந்துள்ளன. அவை :

1. சோமநாதர் திருக்கோவில்
2. காசி விசுவநாதர் திருக்கோவில்

நவகன்னியர் மகாமகத்தில் நீராடுவதற்கு வந்தபோது இறைவன் திருமேனியை ஆரோகணித்ததால் சோமநாதர் திருக்கோவில் குடந்தைக் காரோணம் என அழைக்கப் பெறுவதாயிற்று என்பர். இராமர் இராவணனைக் கொல்ல உருத்திராம்சம் பெற வேண்டி அகத்தியரைக் கேட்டார் என்றும், அவர் குடந்தையில் சில நாள் தங்கி, காசிவிசுவநாதரை வழிபடின் எண்ணியது கைகூடும் என மொழிந்தார் என்றும், அவர் ஆணையின் வண்ணம் இராமர் குடந்தைக்கு வந்து காசி விசுவநாதரை வழிபட அவர் உடம்பில் உருத்திரர் வரப்பெற்று உருத்திராம்சம் பெற்றனர் என்றும் கூறுவர். இந்நிலையில் இவ்விரு திருக்கோயில்களுள், திருக்குடந்தைக் காரோணம் எனப் பெயர் பெற்றுப் பாடல் பெற்ற திருத்தலம் எதுவென அறிதற்கு இயலாததாய் உள்ளது. ஆயினும் சேக்கிழார் வழிநின்று ஞானசம்பந்தரின் தலயாத்திரையைக் காணின், காசிவிசுவநாதர் கோவிலே குடந்தைக் காரோணம் எனக் கருதலாம். திருஞானசம்பந்தர் புராணம் பாடல் 407, 408 காண்க. மேலும் எண்ணுக.

ஞானசம்பந்தர் :

இவர் திருப்பதிகம் குடந்தைக் காரோணத்திற்கு உள்ளது. இக்குடமுக்கு மாடவீதியை உடையது என்றும், செல்வம் திகழ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நிற்பது என்றும் ஞானசம்பந்தர் அருளுகின்றார். 'தேவார் சிந்தை அந்தணாளர் சீரார் அடிபோற்ற' என்றும், 'கலையார் மொழியார் காதல் செய்யும் காரோணம்' என்றும் குறிக்கப்படுமாற்றான் இங்குள்ள ஆடவரும், பெண்டிரும் பெருமானிடத்து அன்பு செய்யும் பெற்றிமை உடையராய் இருந்தமை விளங்குகின்றது. வினைவயத்தால் உடல்உறும் நோய்களும் உயிர் உறும் அவலமும் தீர்ப்பார் என்றும், காலன் அடையாவண்ணம் காப்பார் என்றும் ஆறாவது பாடல் கூறுகின்றது. திருக்கடைக் காப்பில்

'சம்பந்தன்
உருவார் செஞ்சொன் மாலையிவை பத்துரைப் பாருலகத்துக்
கருவாரிடும்பைப் பிறப்பறுத்துக் கவலை கழிவாரே''

எனவும் கூறப்படுகிறது. இவற்றால் காரோணத்துப் பெருமான் உயிர்கட்கருளும் கருணைத்திறன் விளங்குகின்றது.

ஞானசம்பந்தர் அருளுவது போல எத்திசையாரும் ஏத்த நிற்கும் இம்மகாமகத் திருநாளில் இங்குப் போதும் அன்பர்கள் அனைவரும் தீது நீங்கத் திருக்குளம் ஆடியும், இங்குள்ள திருக் கோவில்களில் எழுந்தருளியிருக்கும் பெருமானைத் திருமுறை கொண்டு போற்றியும் மகிழ்வார்களாக! தொடர்ந்தும், அடர்ந்தும் சைவ சித்தாந்தப் பெருமன்றம் செய்து வரும் திருத் தொண்டுகள் மேன்மேலும் சிறப்பதாக! திருவருளும், குருவருளும் எஞ்ஞான்றும் முன்னின்று அருளுமாக!

ஏழைத் தொழும்பனேன் எத்தனையோ காலமெல்லாம்
பாழுக் கிறைத்தேன் பரம்பரனைப் பணியாதே

—மாணிக்கவாசகர்

கொல்லா விரதம் குவலயம் எல்லாம் ஓங்க
எல்லார்க்கும் சொல்லுவது என் இச்சை பராபரமே!

—தாயுமான சுவாமி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொதுமக்களுக்குச் சித்தாந்த உண்மைகள்

சைவப் பெரியார்
ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள், B A, L.T.,

சைவ சித்தாந்த மகாசமாஜம் இவ்வாண்டு நடத்தும் மாநாடுகளில், அறிஞர் பலர், சைவம் எப்படி மக்களின் அன்றாட வாழ்க்கையிற் கலந்துள்ளது—கலந்திருத்தற்குரியது—என்பது பற்றி அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது வரவேற்கத் தக்கதொரு தனிச் சிறப்பாகும். சொற்பொழிவுப் பட்டியல்களின் இறுதியில், பொது மக்களுக்குச் சித்தாந்த உண்மைகள் என்னும் தலைப்பு அமைக்கப்பட்டுள்ளது. இதிலும் விஷயப் பொருத்தம் உள்ளது.

சித்தாந்தம்

சித்தாந்தம் என்னும் சொல்லுக்கு முடிந்த முடிபு என்பது பொருள். எதை அல்லது எவைகளைப் பற்றிய முடிபு என்று கேட்டால், உலகு-உயிர்-கடவுள் என்னும் முப்பொருள்களைப் பற்றிய ஆராய்ச்சிகளிலும், அநுபூதியிலும் கண்ட முடிபுகள் என்று கூறலாம். இந்த முப்பொருள்களைப் பல சமய நூல்களும் தத்துவ சாத்திரங்களும் ஆராய்ந்து வெவ்வேறு முடிவுகளுக்கு வந்துள்ளன. ஒவ்வொரு வகை முடிவும் ஒவ்வொரு சித்தாந்தம் எனப்படும். சைவ சித்தாந்தமானது பிற மத சித்தாந்தங்களை எல்லாம் நியாய முறையில் ஆராய்ந்து, முப்பொருளைப் பற்றித் தானும் ஒரு முடிவிற்கு வந்துள்ளது. இச் சைவ சித்தாந்தத்தைச் சிறப்பு வகையில் சித்தாந்தம் என்றே குறிப்பது சைவ மரபாகும். இந்த நுட்பமான ஆராய்ச்சிகளும் முடிபுகளும் எல்லா மக்களுக்கும் தெளிவாகத் தெரியக் கூடியனவல்ல. போதிய அளவு நுண்ணறிவும் நூலறிவும் படைத்தவர்கட்குத்தான் ஓரளவு விளக்கமாகத் தெரியலாம். அநுபூதி பெற்றவர்கட்குத்தான் முழு உண்மை அநுபவத்தில் விளங்கும். போதுமான அறிவுக் கூர்மையும் கல்வி கேள்வி வளமும் பெற வாய்ப்பில்லாத—ஆனால் நல்ல மனமுள்ள—மக்களைப் ''பொதுமக்கள்'' என்னும் சொல் குறிக்கும்,

மக்களாட்சி முறை நிலவும் இக்காலத்தில் பொதுமக்களின் கல்வி யறிவையும், ஆராய்ச்சித் திறனையும் பிற நல்ல பண்புகளையும் கூடிய அளவு வளர்க்க அறிவுத் தொண்டாற்றுவது அறிஞர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கடமையாகும். அதனை மகா சமாஜம் தன்னாலியன்ற அளவு செய்ய முன்வந்துள்ளது. எனக்குத்தந்துள்ள பணியை யானும் மிகச் சுருக்கமான முறையில் செய்ய முயலுகின்றேன்.

சைவமும் சித்தாந்தமும்

'சைவம்' என்பது ''சிவம்'' என்னும் சொல்லிலிருந்து தோன்றியது. சிவம் என்னும் சொல் நன்மை, மங்கலம், செம்மை என்று பொருள்படும். சைவம் என்பது சிவத்துடன் சம்பந்தம் என்று பொருள் தரும். அந்தச் சம்பந்தத்தை அறிந்து—உணர்ந்து அச்சிவத்தோடு சேர்ந்து, அதனால் மக்கள் மேல்நிலைக்கு உயர்வதற்காக ஆண்டவன் திருவுளம் இருந்தபடி தோன்றிய சமயம் 'சைவ சமயம்', அல்லது 'சைவம்' எனப்படும். அச்சமயம் ஒப்புக் கொள்ளும் முடிபே சைவர்கட்குச் சித்தாந்தம் ஆகும்.

மக்கள் அறிய வேண்டுவன

மக்கள் ஆராய்தற்கு உரிய பொருள்கள் மூன்று. அவை, கடவுள், உயிர்கள், உலகம் என்பனவாகும். மக்களாகிய நாம் இம் மண்ணுலகை நேர் அநுபவத்தில் ஓரளவு காண்கின்றோம்; மிக்க தொலைவிலுள்ள சூரியன், சந்திரன், சில நட்சத்திரங்கள் இவற்றை யும் சிறிதளவு காண்கின்றோம்; நாம் வாழும் இவ்வுலகில் அறிவுள்ள பொருள்கள், அறிவில்லாத பொருள்கள் என்னும் இருவகைப் பொருள்கள் இருப்பதை அறிகின்றோம். உயிர்கள் அறிவுள்ளவை. உலகம் அறிவில்லாதது. உலகிலுள்ள பொருள்களை உயிர்கள் ஓரளவு இயக்குவதைப் பார்க்கிறோம். ஆயினும், உயிர்களின் அறிவு மிகச் சுருக்கமானதேயாகும்; அந்தப் பொருள்களைத் தனித் தனியே சுட்டி யறியும் சிற்றறிவே யாகும். அப்படிச் சிறிது அறிவதும் கூட, முற்றறிவை—பூரண அறிவை—இயல்பாகப் படைத்துள்ள பரம்பொருள் ஒன்று அறிவிக்கத்தான் உயிர்கள் அறிகின்றன என்பதும் பெரியதோர் உண்மை. அறிவுடைப் பொருள்களைச் சித்து என்றும், அறிவிலாப் பொருள்களைச் சடம் என்றும் பெரியோர் கூறுவர். இவற்றையெல்லாம் இயக்கும் மேலான பொருள் கடவுள். கடவுளைப் பதி என்றும், உயிர்களைப் பசு என்றும், உலகத்தைப் பாசம் என்றும், சித்தாந்த சாத்திரங்கள் கூறும். எல்லா ஆராய்ச்சிகளும் இந்த மூன்றுக்குள் அடங்கும். இவை பற்றிய அறிவை வளர்த்தல், மக்கள் ஆன்ம நல முன்னேற்றத் திற்கு அவசியம்.

தனிப்பெரும் முதல்வன்

நாம் காணும் மண்ணுலகில் பலவகை உடம்புகளில்—ஓரறி வுள்ள பிராணி முதல் ஆறறவு படைத்த மக்கள் வரை—எண்ணில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

லாத உயிர்கள் வாழ்கின்றன. இருப்பது இவ்வொரு உலகம் மட்டு மன்று. இது கடற்கரை மணலில் ஒரு சிறு மணல் போன்றதுதான். எண்ணிலடங்காத பற்பல உலகங்கள், அண்டங்கள் உள்ளன என்று வான நூல் உணர்த்துகின்றது. அங்கெல்லாம் பல்வேறு உயிர்கள் வாழ்கின்றன என்று சமய நூல்கள் கூறுகின்றன. இந்த உலகங்கள் எல்லாம், பெரிய சட்ட திட்டங்கட்கு உட்பட்டு இயங்குகின்றன என்று விஞ்ஞானம் திட்டமாகக் கூறுகின்றது. இந்தச் சட்ட திட்டங்கள் யாவும், பேரறிவும் பேராற்றலும் பெருங்கருணையும் படைத்த ஒருதனிப் பெரும் முதல்வனால் அமைக்கப்பட்டுள்ளன என்பதே மூதறிஞர் நமக்கு உணர்த்தியுள்ளனர். ''அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமாய்'' எனத் தொடங்கும் ''பரசிவ வணக்கம்'' என்னும் தாயுமானார் அரும்பெரும் பாடலில், ''அண்ட கோடிகள் எலாம் தங்கும்படிக்கு|இச்சைவைத்து'' என்னும் பகுதி இங்கே உணரத்தக்கது.

. கடவுள் (பதி)

எல்லாம் வல்ல இப் பரசிவப் பொருள், உலகங்களைத் தனது சங்கற்பத்தினாலேயே படைத்துத் தள்ளிவிட்டுத் தான் ஒதுங்கிவிட வில்லை. உலகத்தைப் படைத்தது எல்லாம், உயிர்களை மேல் நிலைக்கு உயர்த்துதற்காகவே. ஆகையால் அது உலகங்கட்குள்ளும் உயிர்கட்குள்ளும் பிரியாமல் நின்று, அவற்றை இயக்கி வருகின்றது. மேற்குறித்த பாடலில், ''உயிர்க்கு உயிராய்த் தழைத்ததெது?'' எனும் அமுதவாசகமும் வந்துள்ளது. ''அவனன்றி ஓரணுவும் அசையாது எனும் பெரிய ஆப்தர் மொழி ஒன்று கண்டாய்'' என்று அவரே நமக்கு அறிவுறுத்துகின்றார். 'கடவுள்' என்னும்பெயரே, பொருள் நிறைந்ததொன்று. அதனைக் கட+உள் எனப் பிரித்தால், பரம்பொருள் எல்லாவற்றையும் கடந்து உள்ளது என்னும் உண்மை புலனாகிறது. கடவு+உள் என்று பிரித்தால், எல்லாவற்றின் உள்ளி ருந்தும் கடவுவது. செலுத்துவது என்னும் உண்மை புலனாகிறது. தானாக இயங்க மாட்டாத சடப்பிரபஞ்சத்தை ஒரு முறைப்படி ஏதோ ஒரு சக்தி இயக்குவதையும், அதனால் உயிர்கள் படிப்படி யாய்த் தடைகளினின்றும் விடுபட்டுப் பேரானந்தப் பெருநிலை அடைவதையும் உணர்கின்றோம். இதுவே பரம்பொருள் ஒன்று உண்டென்னும் உண்மையை நாட்டப் போதிய சான்றாகும்' இப்படியுள்ள பரம்பொருள் ஒன்றேதான்: ''ஒருவனே தேவனும்', என்றார் திருமூலர். அப்பொருள், உருவம், அருவம், குணம், குறி இவைகளை யெல்லாம் கடந்துள்ளது; நிர்மலமானது· நித்தியமானது, சலனமற்றது, அகண்டிதமாய் என்றும் எங்கும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வியாபித்திருப்பது; அணுவுக்கு அணுவாயும், மகத்துக்கு மகத்தாயுமுள்ளது. ஆனந்த உருவாய், பெருங்கருணைத் தடங் கடலாய், ஆன்மாக்கள் தமது வாக்கு, மன, முயற்சியாலே செல்லு தற்கு அரியதாய், ஆனால் அவை யாவும் முடிவிற் சென்று சேரும் கதியாய் உள்ள நுண்பொருளாயுள்ளது. அப்பரம் பொருளை, நம் குணங்களையும், அவஸ்தைகளையும், ஆசா பாசங்களையும், பிறப்பு இறப்புகளையும் உடைய ஒரு ஆன்மா போலக் கொள்வது பெருந்தவறான-பாவமான-காரியமாகும். அவ்விறைவன், "இன்ன தன்மையன் என்றறி யொண்ணா எம்மான்" என்று சுந்தரர் தேவாரம் உணர்த்துகிறது. "மூவரும் முப்பத்து மூவரும் மற்றைத் தேவரும் காணாச் சிவபெருமான்" என்று திருவாசகம் முழங்குகின்றது. இதனால் பதிப்பொருளின் இருப்பினையும் இலக்கணத்தையும் ஒருவாறு நினைப்பூட்டிக் கொள்ளலாம்.

உயிர்கள் (பசு)

ஆன்மாக்களாகிய நமக்குப் பசுக்கள் என்றும் பெயருண்டு. பாசத்தால் கட்டுண்டிருக்கிறபடியால் நமக்கு இப்பெயர் கிடைத் துள்ளது. ஆன்மாவின் சொரூபம் அறிவு. அது சத்துப்பொருள். ஆனால் பதியைப்போல் சுத்தசித்தன்று. ஆன்மாக்கள் எண்ணில் லாதவை; என்றும் உள்ளவை; எவராலும் படைக்காதவை; சிவத் திற்கும் பாசத்திற்கும் வேறானவை. எல்லா ஆன்மாக்களும் பொதுவான அடிப்படை இலக்கணத்தை உடையனவாயினும், ஒவ்வொன்றும் ஏதோ ஒரு நுண்ணிய முறையில் தனித்தனிப் பண்பும் உடையவை. அநாதியாகவே ஆணவம் என்னும் இருள் மலத்தில் அழுந்தி விருப்பம், அறிவு, தொழில் எதுவுமின்றி, சடம் போல அழுந்திக் கிடந்தவை: பரம்பொருளின் பெருங்கருணையால் உடம்புகளும் அவை உலவுதற்கு வேண்டிய உலகமும் போகப் பொருள்களும் தரப்பெற்றவை; இவற்றின் கூட்டுறவால் தமது அறிவு, இச்சை, செயல்கள் வளரப் பெற்றவை; இதனால் புண்ணியமும் பாவமும் புரிந்து, பிறப்பு இறப்பு அநுபவங்களையும் பெறுபவை; கல், புல், பூண்டு, புழு, பூச்சி, பறவை, விலங்கு முதலிய உடம்புகளிலெல்லாம் புகுத்தப்பெற்று முன்னேற்றம் அடைபவை; இவைகள் முடிவில், பெறுதற்கரிய மானிடப்பிறவி அளிக்கப் பெறுகின்றன; விலங்குகட்கும், விலங்கின் தரத்தினை இன்னும் தாண்டாத மாக்களுக்கும் வாய்த்துள்ள ஐயறிவினோடு மனவுணர்வு என்னும் ஆறாவது அறிவையும் பெறுகின்றன. "நான் யார்?" "வந்தவாறு எங்ஙனே?" "போமாறு ஏதோ?" "மரணத்தின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பின்னும் எனக்குத் தொடர்ந்து வாழ்க்கையிருந்தால் யான் இப்போதே செய்யவேண்டியவை என்ன?'' என்பன போன்ற நல்ல கேள்விகளைக் கேட்கத் தலைப்படுகின்றன; கேள்விகட்கு விடைகளையும் அறிந்து மேல்நிலை யடைகின்றன.

ஆன்மாக்கட்கெல்லாம் இரண்டு சிறப்பு இயல்புகள் உள்ளன. (1) பற்றுக்கோடின்றி நில்லாமை. பாசத்தையாவது அல்லது பதியையாவது பற்றியே ஆன்மா நிற்கும். (2) சார்ந்ததன் வண்ணமாதல். எதைச் சார்ந்து நிற்கின்றதோ அதனோடு கலந்து, அதன் தன்மையைத் தான் பெற்று இலங்கும். ''யாதொன்று பற்றின் அதன் இயல்பாய் நின்று'' ஆண்டவனருளால், முடிவில் ''பந்தம் அறும் பளிங்கனைய சித்து'' சிவன். அதன் ''பக்குவம் கண்டு அறிவிக்கும் பான்மை'' யுடையவன் சிவன். இவ்வான்மாக்களின் வகை, இவைகள் வாழும் உலகங்கள், அடையும் நிலைகள், பெறும் போகங்கள், மேற்செல்லும் படிமுறைகள் இவை எல்லாம் சித்தாந்த சாத்திரங்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இந்த அளவில் பசுக்களின் இருப்பையும் இலக்கணத்தையும் சிறிது கண்டோம்.

பாசம்

இனி, பாசத்தைப்பற்றி ஒரு சிறிது பார்ப்போம் : இது ஆணவம், மாயை, கன்மம் என்னும் மூன்று பிரிவினை யுடையது. இவற்றில் ஆணவந்தான் மூலமலம். இது சகஜ மலம் என்றும் சொல்லப்படும். இது ஒன்றாயிருந்துகொண்டே பல சக்திகளுடன் தன் வேலையைச் செய்யும்; ஆன்மா அறியாதபடி அதன் அறிவு முழுமையும் மறைக்கும். செருக்கு, மோகம், பேராசை, லோபம் முதலிய தீயகுணங்களால் இது ஆன்மாக்களைப்பற்றி அலைக்கும். இதன் ஆற்றலை இறைவன் தன்சக்தியின் மூலமாக ஒடுக்கி அடக்கி உயிர்கட்கு அருள்புரிவான். இருள் பிற பொருளை மறைத்தாலும் தன்னைக் காட்டும். ஆணவமோ தன்னையும் காட்டாது; பிற பொருளையும் காட்டாது. ஆகையால், இது இருளினும் கொடிய பேரிருளாகும்.

மாயை என்பதும் பாசத்தின் ஒரு பகுதியாகிய சடப்பொருள். இதுவும் உள்பொருளே. இது மிக நுட்பமான அருவ நிலையையும், பருமையான உருவ நிலையையும் உடையது; உயிரறிவை மறைத்து நிற்கும் ஆணவ இருளைச் சிறிது குறைக்கும் ஏகதேச ஒளி போன்றது. ஆணவம் மறைக்கும். மாயை மயக்கும். மாயையிலிருந்துதான் 36 தத்துவங்கள் இறைவன் சக்தியால் தோற்றுவிக்கப் படுகின்றன. இந்த மாயை 'சுத்தமாயை', 'அசுத்தமாயை' என

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இரண்டாகவும், 'சுத்தமாயை' 'அசுத்த மாயை' 'பிரகிருதி மாயை' என மூன்றாகவும் பகுத்துச் சாத்திரங்கள் விளக்கிக் கூறும். மக்களாகிய நமக்கெல்லாம் பிரகிருதி மாயை என்னும் பகுதியிலிருந்து தனு கரணம், புவனம், போகம் என்பவை முக்கியமாய்க் கிடைக்கின்றன. மாயையின் துணைகொண்டே அதனையும் ஆணவ மலத்தையும் தாண்டவேண்டும் என்பது இறைவன் வகுத்துள்ள உபாயம்.

கன்மம் என்பதும் பாசத்தின் ஒரு பகுதி. நாம் பெறும் பிறவிகளின் இயல்பை இது திடப்படுத்தி நானாவிதமான இன்ப துன்பங்களை விதிமுறைப்படி ஊட்டி வைக்கும். தேவர்களும் மற்ற சீவர்களும் இதற்குக் கட்டுப்பட்டவர்களே. நாம் நமது மனத்தாலும் வாக்காலும் காயத்தாலும் செய்யும் செயல்கள் யாவும் அவ்வவற்றின் தன்மைக்கு ஏற்றபடி நமக்கு இப்பிறப்பிலும் வரும் பிறவிகளிலும் இன்பத்தையும் துன்பத்தையும் தரும். "அடாது செய்பவர் படாது படுவர்". "புண்ணியம் மேல் நோக்குவிக்கும், பாவம் கீழ்த் தள்ளும்" புண்ணியம் பசு புண்ணியம், பதி புண்ணியம் என இரு வகைப்படும். பசு புண்ணியம் என்பது உயிர்கட்கு இதம் செய்வதாகும். பதி புண்ணியம் என்பது இறைவன்பால் நன்றியுடனும் பண்புடனும் செய்யும் பூசைகளும், வந்தனை வழிபாடுகளும், அடியார் வழிபாடு, நோன்பு போன்ற பிற தொண்டுகளுமாகும். ஒவ்வொரு கன்மமும் தன்தன் பயனைத் தந்தே தீரும். ஒரு கர்மத்தின் பலனை மற்றொரு கர்ம பலனைக்கொண்டு கழித்துவிட முடியாது என்பதைப் பக்தர்கள் ஊன்றிக் கவனிக்க வேண்டும்.

மனிதன் தனக்கு இறைவன் தர விரும்பும் பெருநிலையைப் பெறுதற்கு உரிமையுடையவன். நமக்கு உண்மையான அப்பனும் அம்மையும், 'அம்மையப்பர்' என்னும் திருநாமம் படைத்துள்ள உமாமகேசுவரரே யாவர். அவர் நாம் கேளாமல் அநாதியாகச் செய்துவரும் உபகாரத்தை மனிதன் சிறிது எண்ணுவானாகில், நன்றியுணர்வு — அன்பு— தூய்மை — இவையில்லாத புறப்பூசை, பெரும்பயன் தராது. தொடக்கம் எப்படியிருந்தாலும் விரைவில் நன்றியுணர்வால் வரும் அன்பும், அது தரும் ஞானானுபூதியும், நமக்கு நாளடைவில் கிடைத்தற்கு நாம் இடைவிடாது முயலுதல் வேண்டும்.

சமய ஒழுக்கம் தேவை

இதற்கெல்லாம் பொது ஒழுக்கத்தை நாள்தோறும் கருத்துடன் வளர்த்துவர வேண்டும். ஆத்திசூடி முதல் திருக்குறள் ஈறாக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உள்ள அரிய நீதி நூல்கள் இப் பொது அறத்தை விளக்கியுள்ளன, இப்பொது ஒழுக்கமாகிய அடிப்படைமீதுதான் சிறப்பொழுக்க மாகிய சமய ஒழுக்க மாளிகையை எழுப்பவேண்டும். "ஒழுக்கம், அன்பு, அருள் ஆசாரம்" எனவரும் சிவஞான சித்தியார் பாடலில், 16 வகை அறங்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. திருமூலதேவர், இயமம்—நியமம் இவையென்று விரித்துரைத் தருளுகின்றார். இவற்றை நாம் வளர்த்து வருதல் ஆன்ம லாப சித்திக்கு மிகவும் இன்றியமையாதது.

மானிடப் பிறவியின் இழிவைப் பெரியோர்கள் சிற்சில சமயங் களில் எடுத்து இடித்துரைத்ததுண்டு; உடம்பினால் வரும் புலனின்பமே வாழ்க்கையின் பயன் என்னும் இழிந்த உணர்வுடைய லௌகிகர்களுக்கு நிலையாமைகளை உணர்த்தி, அவர்களை உயர்ந்த ஆனந்தத்தை நாடத் தூண்டுவதற்காக, அப்படி வற்புறுத்தியுள்ளார்கள். இதுவும் தேவையே யாகும். அவர்களே மனிதப் பிறவியின் மாண்பையும் நாவாரப் புகழ்ந்துள்ளார்கள். "வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின்" என்பது அவர்கள் அறிவுரைகளுள் ஒன்று. "ஒரு நாமம் ஓருருவம் ஒன்று மில்"லாத இறைவன், உயிர்களை ஆட்கொள்ளுதற்காகப் பல்வேறு திருமேனி தாங்கி வருகின்றான். அவன் கொள்ளும் திருமேனி திருவைந் தெழுத்தின் வடிவாயுள்ளது. நடராஜர் திருவுருவத்தில் பஞ்சாக்கரங்கள் அமைந்துள்ள பான்மையைச் சித்தாந்த சாத்திரங்கள் இனிது விளக்கியுள்ளன.

அற்ப உயிர்களாகிய எம்போல்வாருக்கும் இறைவன் அப் பஞ்சாக்கரத்தின் சாடையிலே உடம்பு அமைத்துத் தந்துள்ள கருணைப் பெருமையை எப்படிப் பாராட்டுவது? "நவ்விரண்டு காலதாய் நவின்ற மவ்வு வயிறதாய், சிவ்விரண்டு தோளதாய்ச் சிறந்த வவ்வு வாயதாய், யவ்விரண்டு கண்ணதாய்" ஐந்தெழுத்து மானிடயாக்கையில் அமைந்துள்ள தென்று இவ்வாக்கில் சித்தர் அறிவுறுத்தியுள்ளதை நாம் ஒவ்வொருவரும் உணரவேண்டும். பஞ்சாக்கர முறையில் அமைத்துத்தரப்பட்டுள்ள இந்த யாக்கையின் உதவி கொண்டு, பஞ்சாக்கரப் பொருளாயுள்ள பரமன் திருவடி ஞானம் பெற்று அவனோடு இரண்டறக் கலந்து பேரானந்தப் பெருவாழ்வினை நாம் எய்த வேண்டுமல்லவா? அதற்கான சாதனங் களை நாடொறும் சிரத்தையுடன் பயிலவேண்டும் அல்லவா?

பொது ஒழுக்கம் தனி மனிதன் வாழ்க்கையிலும், குடும்ப வாழ்க்கையிலும், சமுதாய வாழ்க்கையிலும் பலமாக வேரூன்றி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வளர்ந்தாலல்லது, உலகத்தில் தீமையும் துன்பமுந்தான் பெருகும். இப்போது ஒழுக்கம் நிலைபெற்று ஓங்குவதற்கு, "ஒன்றென்றிரு, தெய்வம் உண்டென்றிரு" என்ற பட்டினத்தடிகளார் உபதேச உண்மையை நன்றாக உணர்ந்து, அவ்வுணர்ச்சியின் வழியே இயங்கி, வாழ்க்கையின் எல்லாத் துறைகளையும் புனிதப்படுத்திக் கொள்ளல் வேண்டும். தெய்வக் கொள்கை இல்லாவிடத்து நல்லொழுக்கமும் சிவகருணையும் நிலைபெறா என்பது ஆன்றோர்கள் அறிந்து அறிவித்துள்ள உண்மையாகும். எனவே, இதனை ஊன்றிக் கவனிக்க வாய்ப்பில்லாதிருந்த சகோதாரர்களும், "தெய்வமென்பதோர் சித்த முண்டாதற்கு" வேண்டும். நல்ல கல்வி, கேள்வி, சிந்தனை, சன்மார்க்கர் தொடர்பு இவைகளை வளர்த்துக் கொண்டால் விரைவில் பெருநன்மை எய்துவர். தக்ஷிணாமூர்த்தியின் சின் முத்திரை, மனிதப் பிறப்பின் குறிக்கோளை எவ்வளவு அற்புத மாகக் குறிக்கின்றது! சொல்லாமற் சொல்லுகின்றது?

பொதுவொழுக்கத்தோடு சைவ ஒழுக்கத்தை ளைர்த்து வருவதற்குச் சைவர்கள்— இருபாலாரும்—சிவதீக்கை பெற்றுக் கொள்ளுதல் முதல் அவசியம். சுத்த உணவின் முக்கியத்தைத் தமிழகத்தில் மட்டுமன்றிப் பிற நாடுகளிலும் பேரறிஞர்கள் காரணங்காட்டி விளக்கியுள்ளனர். பழக்கங்காரணமாகவோ, பிறர் கட்டாயத்தினாலோ இக்குறைபாடுடையவர்கள், வாரத்தில் குறைந்தது இத்தனை நாட்கள் அசைவம்உண்பதில்லை, விரத நாட்கள் முதலிய புனித நாட்களில் உண்பதில்லை என்று ஒரு வரம்பை ஏற்படுத்திக் கொள்ளலாம். பின்பு நல்ல அறிவையுடைய மதிப்பிற்குரிய ஆசாரியரிடம் தத்தம் மரபின் முறைப்படி தீக்கை பெற்றுக்கொண்டு, நாள்தோறும் பஞ்சாக்கர (சடாக்ஷர) செபம் செய்யத் தொடங்கவேண்டும். பஞ்சாக்கர ஜெபத்தின் மேன்மைகளை வடமொழி வேதத்திலும், தமிழ் வேதங்களாகிய தேவார திருவாசகங்களிலும் சித்தாந்த நூல்களிலும் விரிவாகக் காணலாம். இந்த ஜெபங்களும், இவற்றையொட்டிப் பழகும் தியானங்களும் ஆன்ம சுத்தியை வளர்க்கும். "நமச் சிவாயவே ஞானமும் கல்வியும், நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே" என்ற தமிழ் மறைத் திருவாக்கு ஆழ்ந்த பொருளை உடையது. "கொல்வாரேனும் குணம் பல நன்மைகள், இல்லா ரேனும் இயம்புவராயிடில், எல்லாத் தீங்கினும் நீங்குவர் என்பரால், நல்லார் நாமம் நமச்சிவாயவே" என்பது சம்பந்த பரமாசிரியர் திருவாக்கு; சீலத்திற் குறைந்துபோமே என்று வருந்திச் சிவதீட்சை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெற அஞ்சுகின்ற சகோதர சகோதரிகட்கு ஊக்கமும் ஆக்கமும் அளிக்கும், ''ஆலமே அமுதமாக உண்டு'' வானவரைக்காத்த நம் அப்பன், தன்னை நாடும் தன் குழந்தைகளின் மாசினைத் துடைத்து வரவேற்பான். ஆதலால் 'சீலமில்லையே' என்று, சிவபத்தி பண்ணவும் சிவ தீட்சை பெறவும் தயங்கவேண்டுவதில்லை. சிவமும் சிவபத்தியும் பெற உண்மையான அவாவிருத்தல் போதும்.

நான்கு நெறிகள்

இப்படிச் சிவ தீட்சை பெற்றுக்கொண்டு, முதலில் சரியான மார்க்கத்தில் நடக்கவேண்டும். இது தாச மார்க்கம் என்றும் கூறப் படும். இது, இறைவனை, எஜமானனாகவும் தன்னை அடிமை யாகவும் கொண்டு, திருக்கோயில்களில் முக்கரணத்தாலும் பல பணிகள் புரிதலும், மெய்யடியார்கட்கும், சிவ வேடங்கட்கும் மதிப்புத் தருதலும் ஆகும். இதில் நடக்கும் பூசை புறப்பூசை.

அடுத்தபடியில் இருப்பது கிரியாமார்க்கம். இது புத்திர மார்க்கம் எனப்படும். இதில் ஆண்டவனைத் தந்தையாகவும், தன்னை மைந்தனாகவும் பாவித்துப் புறப்பூசையோடு அகப்பூசை யும் செய்தல்.

மூன்றாம் படியில் இருப்பது யோகமார்க்கம். இது சகமார்க்கம் அல்லது தோழமைநெறி என்றும் கூறப்படும். இதில் ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி எனச் சாதனம் பலவகைப்படும். இது ஆசனப் பூசையாகும்.

முடிந்த படியாகிய நான்காம் படியில் இருப்பது ஞானமார்க்கம். இது சன்மார்க்கம் எனப்படும். இதில், கற்கவேண்டிய சமய நூல் களையெல்லாம் கசடறக் கற்று, முப்பொருள்களின் இயல்பையும் தொடர்பையும் உணர்ந்து, சிவத்தோடு அத்துவிதமாகக் கலந்து நிற்கும் அநுபூதி விளையும். இவர்கள் எங்கும் சிவத்தையே காண்பர். ''பரத்தையே பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார்''. இவர்கள் ஞானபூசை செய்வர். இதில் ஞான நூல்களை ஓதுதல், ஓதுவித்தல், நற்பொருளை அநுபூதிமான்களைக் கொண்டு கேட் பித்தல், தான் கேட்டல், இவற்றைச் சிந்தித்தல் என்னும் பகுதிகள் உள்ளன. இவற்றைச் சமயத் திருமடங்கள் நெடுங்காலமாகச் செய்துவந்தன. இம்மகாசமாஜமும் இத்துறையில் அவ்வப்போது சிறு சிறு நன்முயற்சி செய்து வந்துள்ளது. பெரிய அளவில் இப்பூசை நிகழுமேல் பெருநலம் விளையும். சிவஞானிகளாகிய சீவன் முத்தர்கள் பெருங்கருணையும் உடையவர்கள். தன்முனைப்பு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிறிதுமின்றி இறைவன் திருவருட் சிறப்பின்படி பிறவுயிர்கட்குத் தொண்டு செய்வர். ''கள்ளத்தலைவர் துயர்கருதித் தங்கருணை வெள்ளத்தலைவர்'' என்ற திருவருட்பயன் கடைசிக் குறட்பாவை இங்கே கருதலாம்.

சைவத்திருவேடங்களாகிய திருநீறும் கண்டிகையும் சிறந்த பொருள்களாகச் சைவர் யாரும் போற்றத்தக்கவை. நீதியறிவும் பசு மலத்தை நீக்கும் ஒரு நற்குறிகாட்டி நிற்பது திருவெண்ணீறு என்று உணர்த்தியருளுகின்றார் சிதம்பர சுவாமிகள். ஆணவாதி மும்மலங் களையும் சிவஞான நெருப்பாற் சுட்டெரித்து, புனித வெண் ணிலையை ஆன்மா அடைவதே மானிடவாழ்க்கையின் முடிந்த பெரும்பயன் என்பதை இது நினைவூட்டுகிறது (மூன்று விரல்களால் பூசுவது மும்மல நாசம் குறிப்பது). ''பூசும் நீறுபோல் உள்ளும் புனிதர்கள்'' என்ற சேக்கிழார் திருவாக்கும் இங்குக் கருதத்தக்கது.

கோவில்—வழிபாடு—விழா முதலியன

உருத்திராக்கமானது உருத்திரர் அக்ஷத்தில் (கண்ணில்= கண்ணீர்த் துளிகளில்) இருந்து பிறந்தது. தேவர்கள் அசுரர் களாலடைந்த துன்பத்தைத் தாங்க முடியாது, சிவபெருமானிடம் சென்று முறையிட்ட காலத்து, அப்பெருமான் இரக்கத்தால் திருவுளம் நைந்துதான் கண்ணீர் பெருகிற்று. அத்துளிகளே உருத் திராக்ஷ மரங்களாக முளைக்கச் சங்கற்பித்தருளினான். அப்படியே ஆயிற்று. உருத்திராக்கமணிகள் பிறவுயிர்களின் துன்பத்தைக் கண்டபோது நாம் இரங்கி இயன்ற துணைபுரிந்து துன்பந் துடைத்தல் வேண்டும் என்பதைக் குறிக்கும். சிவாலயங்களும், அவற்றின் அமைப்புக்களும், அங்குள்ள மூர்த்தங்களும் அருமையான உட்பொருள்களைக் காட்டுவனவாகும். அங்ஙனமே சிவாகம விதிப்படி செய்யும் பூசைகளும், பிரமோற்சவங்களும் உட்பொருள் களைக் கொண்டனவேயாகும். இவ்வுண்மையை ஞானத் தந்தை யாகிய அப்பர் பெருமான்,

''குறிகளும், அடையாள மும்,கோயிலும்,
நெறிகளும், அவர் நின்றதோர் நேர்மையும்,
அறிய, ஆயிரம் ஆரணம் ஓதிலும்,
பொறியிலீர்! மனம் என்கொல் புகாததே!''

என்னும் திருக்குறுந் தொகையால் நமக்கு இடித்துரைக்கின்றார்.

நல்ல முறையில் நித்திய நைமித்திகங்கள் நடக்கும் ஆலயங் களில், மந்திர சக்தியாலும், அடியவர் செய்யும் வந்தனை வழி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாட்டாலும் அன்பர்களுக்கு ஆன்ம சுத்தி பெருக்கவல்ல சுத்தச் சூழ்நிலை ஏற்படும். புனித உள்ளத்தில் எழும் எண்ண அலைகள்—உணர்ச்சி அலைகள்—பிறர் அறிவையும் உணர்வையும் புனிதப் படுத்தும். ஆகவே சிவாலயங்களைச் சிவனென்வே பாவிக்க வேண்டும் என்று ஆன்றோர் பணித்தனர். இவற்றை எல்லாம் புனிதங்கெடாமல் பாதுகாத்து வருவது இந்து மக்கள் அனைவர்தம் பெரிய கடமைகளுள் ஒன்றாகும்.

சைவத்தின் சமரசம்

சைவ சமயமானது தொன்மை வாய்ந்த பெருமைகள் பற்பல உடையது. இங்கு விரித்துரைக்க வசதியில்லை. அப்பெருமைகளுள் ஒன்று, அது பிற சமயங்களை அன்புடன் நோக்கித் தன் அங்கமாகச் சேர்த்துப் போற்றும் பான்மையாகும். ''சைவம் முதலாம் அளவில் சமயமும் வகுத்து மேல் சமயங் கடந்த மோன சமரசம் வகுத்த நீ'' என்று இறைவனைத் தாயுமானார் குறிக்கின்றார். ''விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயஞ் செய்தே எரிவினாற் சொன்னா ரேனும் எம்பிராற் கேற்றதாகும்'' என்றார் திருநாவுக்கரசர். இவை போன்ற சைவ தோத்திர சாத்திரப் பிரமாணங்கள் இன்னும் பல உள. ''ஓது சமயங்கள் பொருள் உணரும் நூல்கள்'' எனத் தொடங்கும் சித்தியார் திருப்பாடலும், தாயுமானாரின் 'ஆகார புவனம் சிதம்பர ரகசியம்' என்னும் தம் பாடற் பகுதியாலும், சைவத்தின் பரந்த நோக்கமும் சித்தாந்தச் சிறப்பும் அருமையாக விளக்கப்பட்டுள்ளமை அனைவரும் நினைவு கூர்ந்து இன்புறத் தகுந்த பகுதிகளாம்.

சமயாசாரியரும் சந்தானாசாரியரும்

எல்லாச் சமயங்களும் நீதியினால் ஓரிடத்தே காண நிற்கும் இச் சைவத்தை 1300 ஆண்டுகட்கு முன்பு, பிறமதத்தார்கள் தாக்கி வாதிட்டுப் பழித்து அழித்தபோது, நம் சமயாசாரியர்கள் அவதரித்து, அவர்கள் தெய்வீக வாழ்க்கையாலும், ஆண்டவன் நிகழ்வித்த அற்புதங்களாலும், தல யாத்திரைகளாலும், அன்பர்கள் திருக்கூட்டத் திரட்டினாலும், அற்புதத் தெய்வப் பாடல்களினாலும் எதிர்த்து நின்று சைவசமயத்தைப் பாதுகாத்துப் புத்துயிர் அளித்தனர். சந்தானாசாரியர்களும், புறமத சித்தாந்தங்களின் கோட்பாடுகளை எடுத்துக் கூறி, நியாய வாயிலாக மறுத்துச் சைவ சித்தாந்த உண்மைகளைச் சாத்திர முறையில் நிலைநாட்டினார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொதுமக்கள் கடமை

சைவ சித்தாந்தம், அறிவளவில், பேச்சளவில் நின்றுவிடுவதில் பெரும்பயன் இல்லை. அன்றாட வாழ்க்கையில் சைவ சித்தாந்த உண்மைகள் புகுந்து, அதனைப் புனிதப் படுத்திச், சிவத்தின் மங்கள குணங்களின் முத்திரையோடு விளங்குகின்றனவா என்பதுதான், சைவர்கள் கவலையோடு நாள்தோறும் தற்சோதனையால் கேட்டுக்கொள்ள வேண்டும் கேள்வி. ஒத்த மனமுடைய அன்பர்களுடன் தம் அநுபவங்களையும் மேல் நெறித் தேவைகளையும் தெரிவித்து அளவளாவி, அனைவரும் மேற்படிகளில் ஏறிச் சிவபுர யாத்திரையைச் செம்மையாகச் செய்யவேண்டும்; அடைந்துய்ய வேண்டும்.

சைவப் பொதுமக்கள் தமது அன்றாட வாழ்க்கையில் கவனிக்க வேண்டிய முக்கிய விஷயங்கள் சிலவற்றைச் சுட்டி, இப்பணியை நிறைவு செய்ய முற்படுகிறேன். (1) மேற்கூறியபடி சிவதீட்சை பெற்று நித்திய வழிபாடு செய்யவேண்டும் (2) குடும்பம் ஒன்று கூடி வாரத்திற் கொருமுறை வீட்டிற் பூசை அறையில் வழிபட வேண்டும். (3) தாம் வாழும் பேட்டையிலுள்ள புனித சிவாலயத்தில் சைவர் யாவரும் தவறாது வாரம் ஒரு முறை பயபக்தியுடன் ஒன்று சேர்ந்து, ஆறு அங்கங்களுடன் கூடிய வார வழிபாட்டைக் கால எல்லை மாறாது நடத்தி வரவேண்டும். (4) அடியார் திருக்கூட்டத்துடன் தலயாத்திரை செய்யவேண்டும். (5) உள்ளூர்ச் சமய சபை, மாவட்டச் சைவசபை, மாநிலப் பெருஞ் சபையாகிய சைவ சித்தாந்த மகாசமாஜம் இவற்றிலெல்லாம் உறுப்பினராய்ச் சேரவேண்டும். (6) ஒவ்வொரு குடும்பமும் நாள்தோறும் ஒருமுறை பிடியரிசி போடவேண்டும். (7) வாரத்திற் கொருமுறை சமயக் காணிக்கையாகச் சில புதுக் காசுகளையேனும் உண்டியிற் சேர்த்து வைக்கவேண்டும். குறிப்பிட்டதோர் முறையில் இவ்விரு பொருள்களையும் தக்கார் நடத்தும் சைவ சபையில் சேர்த்துச் சமயப் பிரசாரத்துக்கும் சிவகாருணியத் தொண்டிற்கும் இவற்றைப் பயன்படுத்த வேண்டும். (8) சைவ சமயாசாரியர்கள், பிற நாயன்மார்கள், பெருஞ் சிவஞானிகள் இவர்கள் சரித்திரங்களையும், இவர்கள் திருப்பாவைகளின் திரட்டுகளையும் இந்திய மொழிகள் எல்லாவற்றிலும் ஆங்கிலத்திலும் கிடைக்கும்படி செய்யவேண்டும். (9) சைவப் பிரசாரம் எல்லாக் கோயில்களிலும் சேரிகளிலும் குப்பங்களிலும் தக்கவர்களால் நன்முறையில் நடைபெறுவதற்கான எல்லாம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செய்யவேண்டும். (10) கல்வி நிலையங்கள் எல்லாவற்றிலும் இந்து மாணவ மாணவியர்க்கெல்லாம் நல்லொழுக்கத்தையும் இந்து மத முறையில் தெய்வ பத்தியையும் அடியார்களின் பெருமைகளில் பற்றையும் மன்னுயிர்த் தொண்டில் ஆர்வத்தையும் வளர்த்தற்குப் பாடதிட்டத்தில் இடம் வகுத்தாக வேண்டும் என்று மேலிடங்களில் வற்புறுத்தவேண்டும். (11) தேர்தல்களில் வாக்களிக்கும்போது, மக்கள் சத்தியத்தினின்றும் சன்மார்க்க ஒழுக்கத்தினின்றும் சிறிதும் வழுவலாகாது—வழுவினாற் பெரும்பாவம் விளையும் என்னும் உண்மையை இன்சொற்களால் அன்புரிமையுடன் யாண்டும் நினைப்பூட்ட வேண்டும். (12) சைவர்கள் 54 ஆண்டுகள் சைவப் பணி பல புரிந்துள்ள இச்சைவ சித்தாந்த மகா சமாஜத்துக்குப் பல ஆயிரக் கணக்கில் அங்கத்தவர்களாகச் சேர்ந்து, இக்காலத்தின் தேவைக்கேற்பப் பெரிய அளவில் பல நாடுகளில் சமரச சைவ நன்னெறியை மக்களுக்கு எடுத்துரைக்கப் பெருமுயற்சி தொடங்கவேண்டும்.

"வந்தித்து நின்னை மறவாக் கடனாகச்
சிந்தைசெய நின்னதருள் செய்யாய் பராபரமே!"

"எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும்நின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராமரமே".

குறிப்பு : இக்கட்டுரை, சைவசித்தாந்த மகாசமாசத்தின் 54ஆம் ஆண்டு மலரில் வெளிவந்தது.

கற்றவர் புகழும் கும்பகோணத்தைக் கலந்து போற்றும்
பெற்றியரைங் **குரோச யாத்திரை** பேணல் வேண்டும்
உற்ற வத்தலமோரைந்துள் ஒவ்வொன்றுளொரு நாண்மேவிற்
பெற்ற புண்ணியம் பயக்கும் என்மனார் புலமை சான்றோர்.

—திருக்குடந்தைப் புராணம்
(மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை)

பரிசித்தோர் பவப்பற்ற றுங் கங்கைநீர்
உரிசித்தோருக் குயர்பத மொன்றுமே
வரிசைப்பார் புகழ் **மகாமகக் கங்கையைத்**
தெரிசித் தோர்க்குச் செனனம தில்லையே

—திருக்குடந்தைப்புராணம்
(மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சித்தாந்த சைவத்தின் முதற்பொருளும் அணையும் நெறியும்

சைவ சித்தாந்த வித்தகர்
க. வச்சிரவேல் முதலியார் பி. ஏ., எல். டி.

சமய நெறிகள் அனைத்தும் மக்களுக்கு ஒழுக்க நெறியைப் போதிப்பனவே. அந்நெறி ஒருவர் பிறரொடு பகையின்றி இயைந்து அமைதியாக வாழ வாயிலாக உள்ளது;மேலும், ஒருவர் உள்ளத்தில் எழும் பலதலைப்பட்ட உணர்வுகள் ஒழுங்குபட வளர்ந்து, செம்மையாகத் தொழிற்பட்டுத் தமக்கும் பிறர்க்கும் அமைதி, இன்பம், நன்மை என்பவற்றை உண்டாக்கவும் உதவுகின்றது.

இத்தகைய நெறியை எடுத்துக்கூறும் சமயங்களுட் பல, மக்கள் உள்ளம் ஒழுக்க நெறியைப் பற்றுதற்பொருட்டு, அந்நெறியின் தலைவனாக ஒரு தெய்வத்தை அல்லது ஆசிரியனை உடன்பட்டுக் கொள்ளும். அத்தெய்வம் ஒழுக்க நெறியை நியமிப்பதாகவும், பயன்தருவதாகவும் கற்பிக்கப் பெறும். சித்தாந்த சைவம் இப்பொது இலக்கணத்திற்கு விலக்கு அன்று. ஆயினும், இது தெய்வத்தைக் கொள்ளும் முறைக்கும் பிற சமயங்கள் கொள்ளும் முறைக்கும் வேறுபாடு உள்ளது.

பிற சமயங்களுட் கொள்ளப்படும் தெய்வங்கள் குடியாட்சி முறையிற் கொள்ளப்படும் சட்டத்துக்குட்பட்ட தலைவர் (Constitutional Head of a Democratic Republic) போல, இன்றியமையாமை காரணமாக, இனியது, நல்லது எனப் புனைந்து கொள்ளப்படும் கற்பனைப் பொருளாக முடிகின்றன. சித்தாந்த சைவத்துள் அவ்வாறு இல்லை. இதன்கண். கடவுள், புறப்பொருள்களையே கண்டு அறிந்து வரும் கீழ்நிலையில் கேட்டும் ஆராய்ந்தும் உய்த்துணர் பொருளாக இருப்பினும், மெய்யுணர்வு உடையார்க்கு இவ்வுடம்புள்ள போதே தலைப்பட்டு உணரப்படும் அனுபவப் பொருளாவது. சித்தாந்த சைவத்தில் கடவுளைத் தலைப்பட்டுணரும் அனுபவமே வாழ்க்கையின் முடிந்த குறிக்கோள். பிற சமயங்களுள் சமய நெறிக்கண் கொள்ளப்படும் தெய்வமும் வேறே, தத்துவ ஆராய்ச்சியிற் கொள்ளப்படும் முதற்பொருளும் வேறே (God of Religion and the Absolute of Philosophy are different) ஆயின், சித்தாந்தத்துள் இரண்டும் வேறு வேறு அல்ல; அவை ஒரே பொருளைப் பற்றிய இருவகைக் கருத்துணர்வு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சித்தாந்த சைவ நெறியின்படி, எல்லா உயிர்களும் சைவமே. அஃதாவது, சிவசம்பந்தம் உடையவையே. அவை இச்சம்பந்தத்தை உணராமைக்குக் காரணம் அவற்றை இயல்பாகப் பற்றியுள்ள அக மாசு. உயிர்கள் மாசு அகன்று முதற்பொருளைத் தலைப் பட்டுணரும் அனுபவம் பெறுதற்குச் சாதனமாகவே பிறவி உளதாயிற்று; இவ்வுலக வாழ்வும், ஒழுக்க நெறியும், சமய நெறியும் அதன் பொருட்டே முதல்வனால் அமைக்கப்பட்டவை.

இறைவன் உயிர்களின் வாழ்முதல்; அவற்றின் உணர்வின் முதல். ஐம்பொறிகளும் உயிரால் உள்நின்று செலுத்தப்பட்டுப் பொருள்களை அறிந்து வருதல் போல, உயிர்களும், உயிர்க்கு உயிராகிய முதல்வனால் உண்ணின்று உணர்த்தப்பட்டே பொருள் களை அறிந்து அநுபவித்து வருகின்றன. ஆயினும், ஐம்பொறிகள் தமக்கு முதலாகிய உயிரை அறியாதது போல, உயிர்களும் தமக்கு முதலாகிய இறைவனை அறியாது, தாமே செய்வதாகவும், நுகர் வதாகவும், பிறர் செய்வதாகவும் நுகர்வதாகவும் உணர்ந்து வருகின்றன. இதனால் உளதாகும் 'யான்' 'எனது' என்னும் செருக்கினால்தான் பிறவிக்குக் காரணமாகிய நல்வினை தீவினை உளவாகின்றன. 'யான்' 'எனது' என்பவை அற்ற இடமே இறைவன் திருவடி விளங்கும் இடம்.

பிறவிக்கடலில் உள்ள உயிர்களை இறைவன் திருவடிக்கண் சேர்க்கும் புணையே அவன் அருளாணையால் உலகில் நிகழும் ஒழுக்கநெறி. ஒழுக்கநெறி அறம் எனப்படும். அறத்திற்குச் சார்பாவது அன்பு. அன்பால் அறமும் அறத்தால் அன்பும் வளரும்; அவ்விரண்டானும் இன்பம் பெறலாகும். அன்பு உயிரின் பண்பு; அதனை அறத்தான் வளர்த்துக் கொள்ளவே உயிர்க்கு உடம்போடு கூடிய தொடர்பு இறைவனால் உளதாயிற்று.

முதற்கண் தொடர்புடையார் மாட்டு நிகழும் அன்பு, வளர்ந்து முறுகும் நிலைக்கண், தொடர்பு பற்றாது எல்லா உயிர்கள் மாட்டும் செல்லும் அருளாக மாறும். இவ்வாறு அருளும் அறமும் நிறைந்த உள்ளம் மாசற்று விளங்கும். அவ்விளங்கு நிலைக்கண் தோன்றுவதே மெய்யுணர்வு. அதனால் செம்பொருளைத் தலைப் பட்டு நின்று ஒழுகி உலகப் பற்றைத் தீரவிட்டுப் பேரா இன்பத் தமரும் நிலையே வீடுபேறாம்.

ஆகலின்,
எவ்வுயிரும் நீங்கா துறையும் இறைசிவனென்று
எவ்வுயிர்க்கும் அன்பா யிரு.

குறிப்பு : இக்கட்டுரை சைவ சித்தாந்த மகா சமாசத்தின் பொன் விழா மலரில் வெளிவந்தது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சைவ சமயம் தமிழ்நெறியே

மகாவித்துவான் சி. அருணைவடிவேலு முதலியார்
தமிழாசிரியர், பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளி, காஞ்சிபுரம்

பரதகண்டத்தில் மிகப் பழைய காலத்தே தோன்றி நெடுநாட்களுக்கு முன்பே மறைந்த சமயங்கள் சில; இடைக்காலத்தே தோன்றி இடைக்காலத்தே மறைந்த சமயங்கள் சில; சைவ சமயம் ஒன்றே தோற்றம் அறியப்படாது தொன்றுதொட்டு இன்று காறும் நின்று நிலவிவரும் சமயமாகும். இது சைவ சமயத்தின் மரபுரை மட்டுமன்று; வரலாற்று நெறியினர் தாமும் உடம்பட்டது.

சைவ சமயம் ஒழிந்த ஏனைச் சமயங்கள் வரலாற்று நெறியினரால் கால வரையறை கூறப்பட்டும், தத்தம் வழி நிற்பவரால் தோற்றம் இன்மை பேசப்பட்டும் நிற்கும். எடுத்துக் காட்டாக, பௌத்த சமயத்தை, "கி. மு. 6-ம் நூற்றாண்டில் நேபாள நாட்டில் 'கபிலவஸ்து என்னும் நகரத்தின் அரசனாகிய 'சுத்தோதனன்' அவனது மனைவி 'மாயாதேவி' என்பவர்க்கு அருமைப் புதல்வராய்த் தோன்றிய 'சித்தார்த்தர்' என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது" என்பர் வரலாற்று நூலார். ஆயினும் அதனைத் தோற்றம் இன்றி என்றும் உள்ள ஒரு நெறியாகவே அச்சமயத்தினர் கொள்வர். அவர் கூறுமாறு:

"இறைவன் பெருங்கருணையாளன் ஆகலின், அவன் உயிர்கள் படும் துன்பத்தினைக் கண்டு இரங்கி, புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகி மற்றும் பலவாகிச் செல்லாநின்ற தாவர சங்கமங்களாகிய எல்லாப் பிறப்பிலும் எக்காலத்திலும் பிறந்து அவற்றிற்குத் துன்ப நீக்கம் உண்டாகும் வழியை உணர்த்தியருளுவன். அம்முறையில் அவன் மானுடப் பிறப்பில் வருங்கால் புத்தன் என்று அழைக்கப் படுவன்; அதனால், உலகில் தோன்றி மறைந்த புத்தர்கள் பலர்; இனித் தோன்றும் புத்தர்களும் பலர்" என்பது.

'இங்ஙனமாகலின் சித்தார்த்தரும் மேற்கூறிய புத்தருள் ஒருவரேயன்றி, அவர் தாமே ஆதிபுத்தரும் அல்லர்; புத்தர் என்று சொல்லப்படுவார், சித்தார்த்தர் ஒருவர் தாமும் அல்லர்' என்பதும், 'ஆதி புத்தர் இன்னார் என்பதும், அவரது தோற்றம் முதலியனவும் நம்மனோரால் அறியவாராது' என்பதும் அவரது கருத்து.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இங்ஙனமே ஆருகத (ஜைன) சமயத்தினை வரலாற்று நூலார், (சித்தார்த்தருக்குச் சிறிது முன்னோ பின்னோ) வர்த்தமான மகாவீரர் காலத்தில் அவரால் தோற்றுவிக்கப்பட்டதெனக் கூறுவர். ஆருகதர் அவ்வாறின்றி, "மேலை வெளியில் உள்ள பொன்னெயில் வட்டத்திருக்கும் அருகக் கடவுள் சொல்ல, அச்சொற்களை அங்குள்ள சித்தர் கேட்டு நிலவுலகிற்குத் தரவந்த நெறியே ஆருகத சமயம்" எனவும் "அச்சமயத்தின் வழிநின்று வீடு பெற்றோர் 'தீர்த்தங்கரர்கள்' எனப்படுவர்" எனவும் "அத்தகைய தீர்த்தங்கரர்களுள் வர்த்தமான மகாவீரரும் ஒருவர்" எனவும் கூறுவர்.

பிறசமயத்தினரும் இங்ஙனமே யாதானும் ஓராற்றால், தங்கள் சமயம் காலவரையறையைக் கடந்தது, என்றும் உள்ள சமயம் எனவே கூறிக்கொள்வர். அங்ஙனம் அவர்கள் தம் அறிவு கொண்டு தங்கள் சமயம் காலவரையறையைக் கடந்து என்றும் உள்ள சமயம் என்பதை எத்துணைப் பொருத்தமாகக் கூறினும் அவர்தம் கூற்றினை வரலாற்று நூலார் கொள்ளாது, தாம் கூறும் காலவரை யறையைக் கூறியே போதற்குக் காரணம், அச்சமயங்கள் அவர் கூறும் கால எல்லைகட்கு முன்பு இருந்தன என்றற்கு யாதோர் அறிகுறியும் காணப்படாமையேயாம். இந்நிலை சைவ சமயத் திற்கு இல்லை.

சைவ சமயத்தினர் தங்கள் சமயத்தின் வரலாற்றினைக் கூறுமாறு இது: "உலகத்தைப் படைத்த இறைவன், அப்படைப்புக் காலத்தே உயிர்கள் உண்மை உணர்ந்து உய்தற் பொருட்டு 'வேதம்' என்னும் பொது நூலையும், 'சிவாகமம்' என்னும் சிறப்பு நூலையும் அருளிச் செய்தான்; அவற்றுள் வேதத்தின் நுண்பொருளைச் சிவாகமத்தின் வழித் தெளித்துக் காட்டிவரும் நெறியே சைவ சமயம்."

இதனால், வேத சிவாகமங்கள் காலவரையறைக்கு உட்படாதன எனக் காட்டி, அது வாயிலாகச் சைவ சமயத்தினது தோற்றம் காலவரையறைக்கு உட்படாதது எனக் காட்டப் படுதலை உணரலாம்.

இவற்றுள் வேதசிவாகமங்கட்கு வரலாற்று நூலார் கால வரை யறை கூறுவர். ஆயினும், அவற்றின் வழியது எனப்படும் சைவ சமயத்தின் தோற்றத்திற்கு அவர் காலவரையறை கூறமாட்டார்; இதுவே, மேற்காட்டிய முறையில் சைவ சமயத்திற்கு உள்ள ஒரு தனிச்சிறப்பு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''வேதங்கள் ஆரியர் இந்திய நாட்டிற்கு வந்தபொழுது சிந்து நதிக்கரையில் அவரால் செய்யப்பட்டன'' என்பதும், ''ஆகமங்கள் ஆரியர் வந்த பின்னர்த் தமிழர் தம் கொள்கைகளை விளக்குதற் பொருட்டு வடமொழியில் எழுதினர்'' என்பதும்; ஆரியர் வருதற்கு முன்பே இந்திய நாட்டில் சிவ வழிபாடு செழிப்புற்றிருந்தது'' என்ப தும் வரலாற்று நூலார் கூறும் கூற்றுக்கள். ஆரியர் வருவதற்கு முன்பே, அஃதாவது வரலாற்று நெறியின்படி வேத சிவாகமங்களுக்கு முன்பே சிவ வழிபாடு பரதகண்டத்தில் செழித்தோங்கி இருந்த தென்று வரலாற்று நூலார் கூறுதற்குக் காரணம், சிந்து வெளிப் பகுதியில் 'மொகஞ்சதாரோ.' 'ஹாரப்பா' என்னும் இடங்களில் புதையுண்டு கிடந்து, அண்மையில் அகழ்ந்து காணப்பட்ட நகரங் களிற் காணப்படும் சில வலிய சான்றுகளேயாம். அவற்றிற்கு முன்பே இருக்கு வேதம் முதலியவற்றிற் காணப்படும் சில குறிப்புக் கள் பற்றி வரலாற்று நூலார் இக்கருத்தை ஒருவாறு வெளியிட்டு வந்தனர் எனினும், இவை கிடைக்கப்பெற்ற பின்பு இக்கருத்து அவர்கட்கு வலியுற்றதாய் விட்டது.

'சிவ வழிபாடு ஆரியர் வருவதற்கு முன்பே பரத கண்டத்தில் செழிப்புற்றிருந்தது', என வரலாற்று நூலார் கூறுகின்றனரேயன்றி, அஃது எப்பொழுது தோன்றிற்று என்பதைக் கூறமாட்டாதார் ஆகின்றனர். ஆகவே, சிவவழிபாட்டு நெறியாகிய சைவசமயம் தனக்கு முதனூல்களால்களாக இஞ்ஞான்று சொல்லிக் கொள்ளும் வேத சிவாகமங்கட்குக் கால வரையறை ஓராற்றாற் கூறப்படினும், அவற்றின் வழித்தாயது எனப்படும் சைவ சமயத்திற்குக் கால வரையறை ஓராற்றானும் கூறப்படாமை தெளிவு.

இனிச் சிந்துவெளியில் ஆரியர் வருகைக்கு முன்பே சீரிய வாழ்க்கையை உடையவராய்த் திகழ்ந்த மக்கள் தமிழ் மக்களே என்பதும் வரலாற்று நூலார் கூறுவதொன்றாகலின் அவர்களது நெறியாகிய சிவவழிபாட்டு நெறியும் தமிழர் நெறியே என்பது சொல்லாமலே அமையும்.

இங்ஙனமாகவும், இக்காலத்திற் சிலர், முன்னோர் சென்ற வழியே தாமும் செல்லுதலாகிய மரபு நிலையையும் பற்றாது, வரலாற்று நெறியிலேயும் முற்றிலும் செல்லாது 'ஆரியர், தமிழர்' என்னும் வேற்றுமையை உண்டாக்கும் அளவிற்கே பயன் படுத்திக் கொண்டு, ''சிவவழிபாடு—ஏன்? சமயம் என்பதே ஆரியராற்றான் தமிழரிடையே புகுத்தப்பட்டன'' எனக் கரைவர். அக் கரைவினால் சில இளைய தமிழ் உள்ளங்கள் கரைந்து சமயப் பற்றை விடுத்து ஓடுவவாகின்றன. அவைகளை அவற்றிற்கு விருப்பமான வரலாற்று

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நெறியானே தடுத்து நிறுத்தி, அகலமும் ஆழமும் உடையனவாய்ப் பயன்படச் செய்தல் அறிஞர் கடனாகும்.

வரலாற்று முறைகொண்டு, இந்திய மக்களை 'ஆரியர்' என்றும்' 'தமிழர்' என்றும் பிரித்துக் காணும் வழி சிவ வழிபாட்டு நெறி தமிழர் நெறியே யாதலை மேலே காட்டினாம்.

இனி, இஞ்ஞான்று பரத கண்டத்திடைக் காணப்படும் சமய நூல்களும், கடவுள் வழிபாட்டு முறைகளும், சமயச் சடங்குகளும், பிறவும் எல்லாம் ஆரிய மொழியாகவே காணப்படுதல் பற்றியும், ஆரியத்தினையே தமது மொழியெனக் கொண்டு ஏனைய இந்திய மொழிகளைப் புறக்கணிப்பாகக் கருதுவோர் இந்திய மக்களில் ஓர் உயர்ந்த இனத்தவராகவும் சமயத் தலைவராகவும் காணப்பட்டு வருதல் கொண்டும், 'ஆரியராவார் வேற்றுநாட்டினின்றும் போந்தவரே' என்னும் அளவிற்கே வரலாற்று நூலினைத் தெரிந்து, ஏனைய பகுதிகளில் அதன் கண் தெளிவில்லாதவராய், "சமயம் என்பதே ஆரியராற்றான் தமிழரிடைப் புகுத்தப்பட்டது" எனக் கூறுவார் கூற்றுப்பற்றி ஒருசில சொற்கள் சொல்லவேண்டுவது இன்றியமையாததாகின்றது.

'ஆரியர் இந்திய நாட்டிற்கு வந்தபொழுது அவர்கள் பண்பாடில்லாதவராகவே இருந்தனர்' எனவும், 'அக்காலத்தில் இந்திய நாட்டில் வாழ்ந்தவர் தமிழ் மக்களே' எனவும், 'அவர்கள் அப்பொழுது சீரிய வாழ்க்கை உடையவராகவே இருந்தனர்' எனவும் வரவாற்று நூலார் கூறுவன, 'சமயம் எனபது ஆரியருடையதே என்பார்க்கும் உடன்பாடானவையே. அங்ஙனமாக, இருசார் மக்களும் கலக்கும் காலத்தில், இந்நாட்டில் சீரிய பண்பாட்டுடன் வாழ்ந்த பெரும்பான்மையான மக்களால், வேற்று நாட்டினின்றும் பண்பாடின்றி வந்த சிறுபான்மையான மக்கள் மாற்றம் எய்தினர் என்றலே பொருந்துவதின்றி, வேற்று நாட்டினின்றும் பண்பாடின்றி வந்த சிறுபான்மையரான மக்களால், இந்நாட்டில் சீரிய பண்பாட்டுடன் வாழ்ந்த பெரும்பான்மையரான மக்கள் மாற்றம் எய்தினர் என்றல் எங்ஙனம் பொருந்தும்? பொருந்தாமையால், வேற்று நாட்டினின்றும் போந்த ஆரிய மக்கள், இந்நாட்டில் வாழ்ந்திருந்த தமிழ் மக்களது சீரிய வாழ்க்கையைக் கண்டு, அந்நிலையினைத் தாங்களும் அடையப் பெரிதும் முயன்று, தமிழ் மக்களிடையே அன்றாட வாழ்க்கையிலும், சிறப்பு நிகழ்ச்சிகளிலும் இயல்பாகக் காணப்படும் ஒழுக்க முறைகளையும் பிறவற்றையும் தங்கள் மொழியில் ஒழுங்குபட்ட நூல்களாக்கிக்கொண்டு, அவற்றைத் தம் இனத்தவர்க்கு ஓதுவித்தும், பயிற்றுவித்தும் வந்தனர் எனக்கொள்ளுதலே பொருந்துவதாம்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இங்ஙனமாகவே, ஆரிய மொழியில் பல மாறுதல்கள் உண்டாகி நூல்களும் பல்குவவாயின. ஆரியர் இந்தியாவின் பல பகுதிகளிலும் சென்று தங்கினமையாலும், தமிழ் மக்களது அன்றாட வாழ்க்கை முதலியவற்றிற்கு அவரது மொழியில் நூல்கள் ஏற்பட்டமையாலும் ஒழுக்க நெறி, வழிபாட்டு முறை முதலியவற்றிற்கு நாளடைவில் ஆரிய மொழியே மொழியாயிற்று. அதனாலே, நாளடைவில் ஆரிய மக்கள் உயர்ந்தோராகவும், சமயத் தலைவராகவும் கொள்ளப் பட்டனர். இது அவர் தம் உழைப்பின் பயனெனக் கொள்ளல் வேண்டும். இதனாலே 'சமயம்' என்பது ஆரியர் வருகைக்குப் பின்பே தமிழரிடைத் தோன்றிற்று என்றல் கூடாமையறிக.

அன்றியும் சமயச் சார்பான நூல்களும் பிறவும் ஆரிய மொழி யினவாகவே காணப்பட்ட போதிலும், சமயக் கொள்கையினை இனிது விளக்கும் சொற்கள் பல, தமிழ்ச் சொற்களாகவே தமிழில் அன்றும் இன்றும் இருந்து வருகின்றன. அவை; கடவுள், இறைவன், இயவுள், புத்தேள், அணங்கு, கூற்றம், சூர், பேய், கழுது, கூளி, பாரிடம், கொற்றவை, அறம், மறம், ஊழ் முதலாகப் பல. இவை, களால் குறிக்கப்படும் பொருள்கள் பலவும் தமிழர் கொள்கை ஆகுமானால், தமிழ் மக்களைச் சமயக்கொள்கை இவ்லாதவர் என்றல் எங்ஙனம் இயலும்!

மேலும், வரலாற்று முறை பற்றி இந்திய மக்களை ஆரியர், தமிழர் எனப் பிரிப்பவர் 'ஆகமங்கள் தமிழ் மக்களாற் செய்யப் பட்டன' என வரலாற்று நூலார் கூறுதலை மறந்துவிடுதல் கூடாது. இன்னும் 'உபநிடதங்களுட் சிலவும் அத்தகையன' என்பது அவர் கருத்தென்பதையும் உணர்தல் வேண்டும். ஆகவே, சில பல கருத்துக்கள் சொல்லால் வடமொழியாகக் காணப்படுதல் கொண்டும், வடநூல்களில் காணப்படுதல் கொண்டுமே அவைகளை ஆரியருடையன என்று கூறி விடுதல் கூடாததாம். எந்த ஒரு மாறு பட்ட கொள்கைக்குங்கூட அக்கொள்கையினர் அக்காலத்தில் வட மொழியில் நூல் செய்திருத்தல் இங்கு நினைக்கத்தக்கது.

அங்ஙனமாயினும் இஞ்ஞான்று ஆரியர் ஒழுக்கங்களும், தமிழர் ஒழுக்கங்களும் கலந்துள்ளன என்றே கூறவேண்டி யிருத்தலால், தமிழர் நெறியை இன்னதெனத் துணிதல் எவ்வாறெனின், தமிழ் மக்கள் அனைவர்க்கும் ஒப்ப உடன்பாடாக உள்ள பல தமிழ் நூல் களில் காணப்படும் நெறியே தமிழர் நெறியெனக் கொள்ளல் வேண்டும். ஏனெனிற், கூறுதும் ;

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இரண்டு இனத்தவர் ஒருங்கு கலந்து வாழும் நிலை ஏற்பட்ட பொழுது, அவ்வவ்வினத்தில் உள்ள பெருமக்கள் தத்தம் நெறியினைப் பாதுகாத்தற்கு ஆவன செய்வர். அங்ஙனம் செய்யப் பட்டவையே பழந் தமிழ் நூல்கள் எனப்படும் சங்கத்துச் சான்றோர் செய்யுட்கள். சங்கச் செய்யுட்கள் எனப்படும் பாட்டும், தொகையும் திருக்குறளும் தமிழ் மக்கள் அனைவர்க்கும் உடன்பாடாய பழந் தமிழ் நூல்களாம். ஆகவே, அவற்றுள் யாண்டும் ஒருபடித்தாய்ப் பேசப்பட்டுவரும் நெறியே தமிழர் நெறியாமென்க. அவற்றது நெறியையும் தமிழ் நெறி அன்றெனக் கழித்து வேறொரு நெறியினைத் தமிழர் நெறியாக எவரேனும் கூறப்புகுவராயின், அதற்குச் சான்று ஏதும் இன்மையின், அஃது அரங்கின்றி வட்டாடியதனோடு ஒப்பதேயாகும்.

இதனால். தமிழ் நெறியினை ஆராயப்புகுவார் அதன் காலத்தைத் தனித் தமிழ்க் காலம், வேதாகம காலம், சங்க காலம் என மூவகைப் படுத்தி ஆராயலாம். அவற்றுன், 'தனித் தமிழ்க் காலத்துத் தமிழர் நெறி சிவ வழிபாட்டு நெறியே' என்பது முன்பே காட்டப்பட்டது. வேதாகம காலத்திலும் சிவவழிபாடே முதன்மையாகக் கொள்ளப்பட்ட தென்பதற்குத் தக்கனது வரலாறே போதிய சான்றாகும். இன்னும் வேதங்களால் குறிப்பிடப்படும் முழுமுதற் கடவுள் சிவபெருமானே என்பதனை இனிது விளக்கும் ஆராய்ச்சி நூல்களாக அன்று முதல் இன்று வரையும் தோன்றி வளர்ந்தவை பல, அவற்றின் கருத்துக்களை எல்லாம் இங்கு எடுத்துக்கூறப் புகின் மிக விரியும்.

இனிப் பழந்தமிழ் நூல்களை நோக்குமிடத்து அவைகளினும் சிவபிரானுக்கே முதன்மை பேசப்படுகின்றமை தெரியலாம். பத்துப் பாட்டுள் ஒன்றாகிய 'மதுரைக்காஞ்சி' என்னும் நூலில், மக்கள் ஆடவரும் பெண்டிருமாகத் தம் குழந்தைகளுடன் சிவபிரானைத் தலைவனாகக் கொண்டு கடவுளர் வழிபாட்டினைச் செய்யச் சென்றமை கூறப்படுகின்றது. (அடி 453-69) புறநானூற்றில் ஒரு பாடல் (56) கடவுளர்களை எடுத்தோதுமிடத்துச் சிவபிரானை முதற்கண் வைத்துக் கூறுகின்றது. மற்றொரு பாடல் (166) அப் பெருமானை "முது முதல்வன்" எனக் குறிப்பிடுகின்றது. இன்னொருபாடல் (6) பாண்டிய மன்னனை நோக்கி, "முக்கட் செல்வரது கோயிலை வலஞ்செய்யுமிடத்து மட்டுமே உன்குடை பணிவதாகுக" என்று கூறி அவனை வாழ்த்துகின்றது. கூறப்படும் தமிழ் மரபு நோக்கியே இளங்கோவடிகளும், சீத்தலைச் சாத்தனா

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ரும் தங்கள் காப்பியங்களில் சிவபிரானை, ''பெரியோன்'' எனவும், ''இறையோன்'' எனவும் குறிப்பிடுவதும், தேவர் கோட்டங்களில் நாள்தோறும் விடியல் வழிபாடு செய்யுங்காலத்தும், ஆண்டு தோறும் சிறப்பாக விழா வெடுக்குங் காலத்தும் சிவபிரான் கோயிலை முதலாகக்கொண்டே செய்யப்பட்டன எனக் கூறுதலும் செய்வாராயினர். இங்ஙனம் பழந்தமிழ் இலக்கியங்களில் பலதிறத் தாற் பெறப்பட்டுக் கிடக்கும் சிவபிரானது முதன்மையை இன்னும் விரிக்கிற் பெருகும்.

இனித் திருக்குறள் பொதுமறையாகலின், அது சிவபிரானை உருவு, பெயர் முதலியவற்றாற் சுட்டிக்கூறாது, அப்பெருயானது இயல்பினையே இறைவன் இயல்பாகப் பெறவைக்கின்றது. அதற்குக் காட்டாகச் சில வருமாறு :

''பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவனடி சேரா தார்'' எனவும். ''பற்றுக பற்றற்றான் பற்றினை; அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு'' எனவும் கூறியவற்றால், பிறவி நீங்கு தற்கும், பிறவிக்குக் காரணமான பற்று நீங்குதற்கும் இறைவனடி யைச் சேர்தலும், பற்றற்றான் பற்றினைப் பற்றுதலும் இன்றியமை யாதன எனக் குறிப்பிட்டமையின், இயல்பாகவே பிறவி இன்மை யும், இயல்பாகவே பற்றின்மையும் உடையானே இறைவன் என்பது பெறப்பட்டது; ''இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின்'' என்பதனுள் உலகிற்கு முதல்வனை ''உலகியற்றியான்'' எனக் குறிப்பிடு தலானும், ''முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு - இறையென்று வைக்கப்படும்'' என்பதனுள் ''காப்பாற்றும்'' எனக் கூறிய குறிப்பினாலும், ''ஊழி பெயரினும் தாம் பெயரார் சான்றாண்மைக்கு - ஆழி எனப்படுவார்'' என்பதனுள், முதல்வன் ஆணையால் தோன்றி நிற்கும் உலகிற்கு, அவன் ஆணையானே 'ஊழி பெயர்தல்' என்னும் இறுதிக்காலம் உளதாவதாம் என்ப தனை உட்கொண்டு கூறினமையானும், உலகத்தைப் படைத்தல், காத்தல் அழித்தல் என்னும் முத்தொழில்களை உடையவனே இறைவன் என்பது பெறப்பட்டது. ''பற்றற்ற கண்ணே பிறப்பறுக் கும் மற்று - நிலையாமை காணப்படும்'' என்பதனால், பற்றுள்ள வழிப் பிறவியறாமையும் பற்றில் வழிப் பிறவி உறாமையும் எதிர் மறையாற் பெறப்பட்டன. படவே, உயிர்கள் நலங்கருதியானும் பிற எவ்வாற்றானும் பிறவி உறாதவனே பற்றற்றான் எனப்படும் இறைவன் என்பது பெறப் பட்டது. ''மற்றும் தொடர்ப்பாடு எவன்கொல் பிறப்பறுக்கலுற்றார்க்கு உடம்பும் மிகை'' என்ற

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தனால், பற்றறுத்துப் பிறவிப் பெருங் கடலை நீந்த வேண்டித் தன்னை அடைந்தார்க்கு உடம்பென்னும் சிறைக் கூடம் எவ்வாற்றானும் இல்லையாம்படி தகர்த்து, அவர், முன்னர் உடம்பு கொண்டு காலத்தானும், இடத்தானும், முன்னிலைப் பொருளானும் வரம்புபட்டு நின்று நுகர்ந்த இன்பம் போலாது, எவ்வாற்றானும் வரம்பின்றி உளதாகும். உள்ளின்பமாய், அவர்களால் திளைக்கப்பட்டு நிற்கும் இன்பப் பொருளாகின்றவனே இறைவன் என்பது பெறப் பட்டது. இவ்வியல்புகள் அனைத்தும் ஒருங்கே பொருந்தியவனாகச் சிவபிரான் ஒருவன் அல்லது பிறரொருவரும் யாண்டும் கூறப்படாமை தெளிவு,

இங்ஙனமாகவே தனித் தமிழ்க் காலம் முதலாக இன்றுகாறும் காணப்பட்டுவரும் பரதகண்டத்துச் சமய நிலைகளை நோக்குங்கால் சைவ சமயம் தமிழ் நெறியேயாதல் தெற்றென விளங்கலால் சைவ சமயத்தினையே தழைக்கக் கொண்டுள்ள தமிழ் மக்கள் வரலாற்றுணர்ச்சியால் தோன்றும் ஆரியர், தமிழர் என்னும் வேறுபாடு பற்றி அதன்கண் ஐயுறுதல் வேண்டா எனக் கூறி அமைவாம். இன்னும் விரிப்பிற் பெருகுமென்க.

குறிப்பு : இக்கட்டுரை சைவ சித்தாந்த மகாசமாசத்தின் பொன் விழா மலரில் வெளிவந்தது.

ஞாலமுய்ய நாமுய்ய சைவநன்னெறியின் சீலமுய்ய அருட்பணிகள் பலவற்றைச் செய்துவரும் சமாஜம்.

திருவண்ணாமலை ஆதீனம்
சின்னப்பட்டம் தேசிகர் (30-12-50)

மறைத்திரு ஞானியாரடிகளின் அருள் உள்ளத்தில் அரும்பி அன்பர்கள் உள்ளத்தில் மலர்ந்து தொண்டர் தம் தொண்டின் திறத்தால் பல்லாண்டுகளாகத் தென்தமிழ் நாட்டில் தெய்வ மணத்தை வழங்கி வருகின்ற சைவ சித்தாந்த மகாசமாஜம்

குன்றக்குடி ஆதீனகர்த்தர்
47ஆம் சைவர் மாநாடு (24-4-53)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தமிழ் ஆகமம்

(பேராசிரியர். வித்துவான், க. வெள்ளை வாரணனார்)

சிவாகமங்களின் ஞானபாதத்தில் உளவாகும் மலைவு தீர்த்தற் பொருட்டு இறைவர் அருளத்தாம் கேட்டு தெளிந்த நுண் பொருள் களை நந்தி பெருமான் சனற்குமாரர் முதலிய முனிவர்களுக்கு உபதேசித்தருளினார். அவர்பால் உபதேசம் பெற்றவர் திருமூலர். நந்தி பெருமான்பால் தாம் உணர்ந்த சிவாகமப் பொருளைத் திரு மந்திரங்களாக்கி அவற்றை ஒன்பது தந்திரங்களாக வகுத்துத் தமிழ் மூவாயிரமாக அருளிச் செய்வாராயினார். திருமூலர் அருளிய இத்திருமந்திரம், பதி, பசு, பாசம் என்னும் முப்பொருளுண்மை யினையும், சரியை, கிரியை யோகம், ஞானம் என்னும் நால்வகை நன்னெறிகளையும் அறிவுறுத்தும் நிலையில் அமைந்துளது. இவ்வுண்மை,

> ''உள்ளுணர்வான ஞானமுதலிய ஒரு நான்குண்மை
> தெள்ளுதீந் தமிழாற் கூறுந் திருமூலர்''

எனவும்,

> ''நலஞ்சிறந்த ஞானயோகம் கிரியா சரியையெலாம்
> மலர்ந்த மோழித் திருமூல தேவர்''

எனவும், இந்நூலாசிரியரைக் குறித்தும்,

> ''ஞான முதல் நான்குமலர் நற்றிரு மந்திரமாலை''

என இந்நூலைக் குறித்தும், சேக்கிழாரடிகள் சிறப்பித்துப் போற்று தலால் இனிது விளங்கும்.

''ஞானமுதல் நான்கு மலர் நற்றிரு மந்திரமாலை'' என்றமை யால், ஞான நன்னெறியினை விளக்கும் முறையில், ஞானத்திற் சரியை, ஞானத்திற் கிரியை, ஞானத்தில் யோகம், ஞானத்தில் ஞானம், ஆகிய நால்வகை நன்னெறிகளையும், திருமூலத் தேவர் இம்மந்திரப் பனுவலில், அருளிச் செய்துள்ளார் என்பது நன்கு புலனாகும்.

சிவாகம உண்மைகளை உலக மக்களுக்கு அறிவுறுத்த வந்த திருமூலர், தாம் கூறும் மந்திரப் பொருளை மக்கள் அனைவரும், விரும்பிக் கேட்பதிலும், கேட்டு அவ்வழியில், ஒழுகிப் பயன் பெறுவதிலும், மனவெழுச்சியும், உறுதிப்பாடும் உடையராதற்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொருட்டுத் தாம் இந்நூல் வாயிலாக உணர்த்த எடுத்துக் கொண்ட வேத சிவாகமப் பொருள்களின் சிறப்பும், ஆகமப் பொருள் தமக்குக் கிடைத்த வழிமுறையும், தாம் கேட்டுணர்ந்த ஆகமப் பொருளைத் திருமந்திரமாலையாகத் தமிழிற் சொல்ல நேர்ந்த காரணமும் என இந்நூலைப் பயில்வோர் இன்றியமையாது முதற்கண் அறிந்து கொள்ளுதற்குரிய செய்திகளை அறிவுறுத்தும் முறையில் அமைந்தது திருமந்திரத்தின் முதற்கண் உள்ள பாயிரப் பகுதியாகும்.

வேதம், ஆகமம் ஆகிய இருவகை நூல்களும் இறைவனால் அருளிச் செய்யப்பட்ட அருள் நூல்களாகும். இவற்றுள் உலகில் ஒழுக்கநெறியினை விரித்துரைப்பதாகிய வேதம் **பொது நூல்** எனப்படும். மெய்ந் நெறியாகிய சிவநெறியினை அறிவுறுத்துவ தாகிய சிவாகமம் **சிறப்பு நூல்** எனப்படும். இங்கு வேதம் என்றது வேதசிரம் எனவும் வேதாந்தம் எனவும் போற்றப்படும் ஞான பாதங்களாகிய உபநிடதங்களை என்பர் பெரியோர்.

பிறவியாகிய துன்பத்தினின்றும் நீங்கி வீடு பெறுதலே அறிவுடைய மக்களின் கடமையும் செயலுமாகும். அந்நிலை சிவனையடைந்தாலன்றிக் கை கூடாது. சிவன் ஒருவனே எல்லார்க்கும் தலைவன். சிவனோடொக்கும் தெய்வம் தேடினும் இல்லை. அவன் மூவர்க்கும் முதல்வன். தாயினும் நல்லவன். தேவர் முதலிய யாவரும் அவனைத் தொழுவதல்லது அவனால் தொழப்படுவார் ஒருவருமிலர். இடியும் முழக்கமும், ஈசன் உருவம். அயன், அரி, அரன் ஆகிய மூவரும் ஆராய்ந்து நோக்குங்கால், இறைவனது அருளாகிய தொடர்ச்சியால் ஒருவரேயாவர். சிவனருளல்லது வேறு தெய்வமில்லை. சிவபெருமான் உயிர்கள் மேல், வைத்த பெருங் கருணையால், மன்னுயிர்கள்- பாசப் பிணிப் பினின்றும் நீங்கி, வீடுபேறடைதற் பொருட்டு வேத சிவாகமங்களை அருளிச் செய்துள்ளார். அவற்றின் வழியொழுகிப் பிறவிப் பெருங் கடல் நீந்தி வீடுபெறுதற்கு வேண்டிய நற்செயல்களே அறிவுடைய நன்மக்களால் மேற்கொள்ளத் தக்கன. "சிவபெருமான் ஆகமப் பொருளை நந்தி பெருமானுக்கு உபதேசித்தருளினார். அவர் கயிலையில் சனற்குமாரர் முதலிய நால்வர்க்கும், பதஞ்சலி வியாக்கிரர் ஆகிய முனிவர்களுக்கும் அவ்வழியே எனக்கும் உபதேசித்தருளினார்; ஆகமப் பொருளைத் தமிழில் சொல்லும் பொருட்டே என்னை இம்மூலனுடம் பிலிருக்குமாறு இறைவர் பணித்தருளினார். அவருடைய அருளால் யான் மூலனுடம்பிற்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புகுந்து திருவாவடுதுறையிற் பல்லாண்டுகள் சிவயோகத்தமர்ந் திருந்தேன். அரனடி நாள்தோறும் சிந்தை செய்து ஆகமம் செப்பலுற்றேன். இறைவன் ஆடியருளும் திருக்கூத்தின் சிறப்பினை அறிவுறுத்தும் மறைநூலாகிய இதனைச் செப்புதற் பொருட்டே யான் இங்குவந்தேன். நான் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறுவ தாகுக. யான் கூறிய ஞானம் மிக்க இம்மந்திரங்களை உளம் பொருந்திக் கேட்டுணர்வோர் இறைவனுடைய திருவடிகளில் தலைப்பெய்தி இன்புறுவர்'' என இப்பாயிரப் பகுதியில் திருமூலர் அறிவுறுத்தியருள்கின்றார்.

இந்நூலிலுள்ள ஒன்பது தந்திரங்களுள் முதல் நான்கும், சிவஞானத்தைப் பெறுதற்கு விரும்பியவர் தம்மை உள்ளும் புறமும் தகுதியுடையவராக்கிக் கொள்ளுதற்குரிய சாதனங்களையும், நடுவணதாகிய ஐந்தாம் தந்திரம் சைவத்தின் முடிந்த முடிபாகிய சைவசித்தாந்த உண்மைகளையும், 6 முதல் 9 வரையுள்ள நான்கு தந்திரங்களும் ஞானம் பெறும் நிலையில் உணர்ந்து பெறத்தக்கன வாயுள்ள நற்பயன்களையும் பற்றி விரித்துக் கூறும் முறையில் அமைந்துள்ளன,

---

குறிப்பு : இக்கட்டுரை - ''பன்னிருதிருமுறை வரலாறு-இரண்டாம் பகுதியினின்றும் எடுக்கப்பட்டது.

(நன்றி - அண்ணாமலைப் பல்கலைக் கழகம்)

தென்தமிழ்நாட்டுச் சமய வரலாற்றில் இந்நூற்றாண்டில் நமது சமாஜம் செய்துள்ள தொண்டுகள் தனிப் பெருஞ் சிறப்பிடம் பெறுதற்குரியனவாகும். தமிழகத்தின் இணையற்ற ஒரு மாபெருஞ் சமயப் பொது நிறுவனம் நமது சமாஜமேயாகும். இதன் சீரும் சிறப்பும் தமிழும் சிவமும் வழங்கிவரும் அயல்நாடுகளிலும் பரவியுள்ளன வெனின், வேறு புதிது கூறுவது யாதுளது?

புலவர் ந.ரா. முருகவேள்
பி. ஓ. எல்.
(சைவ இளைஞர் மாநாட்டுத் 30-12-56
தலைமையுரை)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சைவ சமயம்

புலவர் ந. ரா. முருகவேள், M.O.L.,

1. தொன்று தொட்டே தமிழ்நாட்டில்
தோன்றி, மிகவும் சிறப்பினதாய்
நின்று நிலவி வழங்கிவரும்
நிகரில் பழைய பெருஞ்சமயம்!
இன்றை உலகில் அறிவியலார்
இன்னும் காண்டற் கியலாத
ஒன்றை யல்ல உண்மைபல
உணர்த்தி நிற்கும் அருஞ்சமயம்!

2. சிந்து வெளியின் நாகரிகம்
சிறக்க விளக்கும் செழுஞ்சமயம்!
இந்த உலகிற் பிறசமயம்
எதற்கும் இல்லாப் பலநலங்கள்
சிந்தை மகிழக் கண்டுணர்ந்து
சிறந்த சான்றோர் புகழ்சமயம்!
அந்த மிலாநற் பெருநோக்கால்
அனைத்தும் தழுவும் அருட்சமயம்!

3. உலகம் முழுதும் ஒருகாலத்
துலவிப் பரந்து வளர்ந்தோங்கி,
அலகில் பெருமைத் தமிழ்மொழியோ
டறிவிற் சிறந்த தமிழர்களின்
கலைகள் குணங்கள் நாகரிகம்,
கருதும் மாட்சி முதலவெலாம்
நிலவச் செய்த பெருஞ்சீர்த்தி
நிலையின் மிக்க நீள்சமயம்!

4. சங்க காலத் தமிழ்நெறிதான்
தளர்ந்து பெரிதும் தடுமாறி
மங்கு நிலைமை எய்தியக்கால்,
மாண்போ டதனை வளர்த்தளிக்கத்
துங்க நால்வர் பெருமக்கள்
தோன்றி, நாட்டிற் புத்துணர்ச்சி
பொங்கி வழியத் தொண்டாற்றிப்
போற்றிக் காத்த பொருட்சமயம்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

5. சிவம்தான் தூய தமிழ்ச்சொல்லே;
செம்மை என்னும் சொல்லடியா
உவந்து தோன்றி வழங்குவதாம்;
உண்மை இதனைத் தெளிந்துணர்க!
நயந்து சைவ நன்னெறியை
நல்ல தமிழர் நெறிஎன்றே
வியந்து மகிழ்க! எனஅறிஞர்
விளக்கித் தேற்றும் மெய்ச்சமயம்!

6. இறையே உயிரே உலகென்ற
இலங்கும் மூன்று பெரும்பொருளும்
முறையே அளவை நெறிநின்று,
முன்னும் பின்னும் முரணாமே
நெறியே ஆய்ந்து தடைவிடையால்
நிறுத்தும் மறுத்தும் மெய்ந்நிறீஇக்
குறையே எவரும் உணர்வுடையார்
கூறற் கொல்லாப் பொதுச்சமயம்!

7. சைவ சமயம் மிகச்சிறந்த
தமிழர் சமயம்! பழஞ்சமயம்!
மெய்யிற் செறிந்த விழுச்சமயம்!
விரிந்த நோக்கின் வியன்சமயம்!
பொய்யில் கேள்விச் சான்றோர்கள்
போற்றிப் புகழ்ந்த பெருஞ்சமயம்!
வையம் முழுதும் இதுபரவி,
மக்கள் நலமே மிகவாழ்க!

குறிப்பு : இக்கவிதை, சைவசித்தாந்த மகாசமாசத்தின் பொன் விழா மலரில் வெளிவந்தது.

முற்காலத்தில் அரசர்களும் சைவ மடங்களும் செய்து வந்த சைவப்பணியை எமது சைவ சித்தாந்த சமாஜம் இக் காலத்திற்கு ஏற்ற முறையில் செய்துவருகின்ற தென்று கூறின் அதுமிகையாகாது.

சைவர் மாநாட்டுத் தலைமையுரை
சர். கந்தையாவைத்தியநாதன்
(25-12-54)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சித்தாந்தம்

வித்துவான் அம்பை இரா. சங்கரனார்

நாம் மிகவும் உச்சிமேல் வைத்துப்போற்றும் சித்தாந்தம் என்னும் சொல் எப்பொழுது வழக்குக்கு வந்தது? அது இலக்கியத் துள் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது? அது எவ்வெப் பொருள் களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது? என்பது பற்றி ஆய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

சித்தம் என்றால் சித்திக்கப்பட்டது. நிச்சயம் என்று பொருள் படும். அந்தம்—முடிவு. ஆகவே (1) நிச்சயமான முடிவு அல்லது முடிந்த முடிபு என்பதே சித்தாந்தத்தின் முதற்பொருளாகும். இப் பொருளில் முதன்முதலில் எடுத்தாண்ட நூல் திருமந்திரமேயாகும். ''சிவன் தன் விரதமே சித்தாந்தக் கேள்வி'' (திருமந்திரம் 557) என்னும் அடியில் சித்தாந்தக் கேள்வி என்பது முடிந்த முடிபாகிய முப்பொருளுண்மையைப் பற்றிக் குறிப்பிடுகிறது. மற்றும் பல்லிடங் களிலும் இப்பொருளில் அந்நூலில் பல மேற்கோள்களைப் பரக்கக் காணலாம். இதனை ஒட்டியே பிற்கால ஆசிரியர்கள் பலரும் இப் பொருளில் தத்தம் நூல்களில் இச்சொல்லை ஆண்டுள்ளனர்.

''உபநிடதத்தின் துறைபோய்த் தெளிவாஞ் சித்தாந்தங் கருதி யுணருமா முனிவர்'' என ஞானவரோதயராலியற்றப்பெற்ற உபதேச காண்டம் 777இல் இப்பொருளில் மேற்கொள்ளப் பெற்றதைக் காண்க.

''மறையின் வைத்த சித்தாந்த வருத்தமதாலே'' என திருக் காளத்திப் புராணம் 29ஆம் சருக்கம் 37ஆம் பாடலில் இப் பொருளைப் பார்க்கலாம்.

சுத்த சித்தாந்தம் வல்ல சூத மாமுனிவர் என நீடூர்த்தல புராணம் ஆதித்தன். 36ஆம் பாடலிலும் இவ்வாட்சியினைத் தெளியலாம். மேலும் பல புராண இதிகாச சாத்திர நூல்களிலும் பலவிடங்களில் இப்பொருளில் ஆட்சிகள் பரவலாகக் காணப்பெறு கின்றன.

சமயக் கொள்கை அடிப்படையில் ஆட்சிக்கு வந்த இச்சொல் பின்னர் சைவத்தின் பல்வேறு வகைகளுள் ஒன்றாகிய (2) சைவ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சித்தாந்தம் என்னும் ஒரு பிரிவுக்குரிய பொருளாயும் பல்லாசிரியர் களாலும் எடுத்தாளப்பட்டது. சித்தாந்தம் என்றாலே சைவ சித்தாந்தம் என்னும் பொருளில் பொதுவாக மக்கள் கருதுமளவுக்கு இது பயிலப்பட்டு வருகிறது. "விளம்புறு சித்தாந்த ஒளி வீசும் காலம்" என்று யாண்டும் சித்தாந்த சைவமே பிரகாசித்துக் கொண் டிருக்கிறது என்னும் பொருளில் திருவிடை மருதூர்க் கலம்பகத்தில் சித்தாந்தம் என்ற சொல்லைச் சித்தாந்த சைவத்துக்கு ஆசிரியர் எடுத்தாண்டிருக்கும் சிறப்பினைக் காணலாம். மெய்கண்ட சாத்திர நூல்களுள் இப்பொருளே இச்சொல்லுக்குப் பெரும்பாலும் காணப்பெறும்.

வேதத்தைச் சைவசித்தாந்திகள் பொதுவாக ஒப்புக்கொளினும் அதில் சைவசித்தாந்தக் கொள்கைக்கு ஏற்பனவற்றை மட்டும் தான் ஒப்புக் கொள்வார்கள். அதனாலேயே வேதம் பொதுநூல் ஆகமம் சிறப்புநூல் என சைவசித்தாந்திகள் கருதுவர். 'வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்க' என்னும் சேக்கிழார் பெருமான் திருவாக்கும் ஈண்டு நுனித்தறிதற்குரியது. இக்காரணம் கருதியே சித்தாந்தம் என்னும் சொல் (3) பிற்காலத்துச் சிவாக மத்துக்கும் பொருள்பட ஏதுவாயிற்று.

"சுத்தம் விளங்கிய சித்தாந்தம்" எனவும் (திருமந்திரம் 1422) சிவாகமங்கள் சித்தாந்தமாகும் எனச் சிவஞான சித்தியாரும் (சு: 8, 15) சிங்கம் நடந்த வழிச் சித்தாந்தம் என முதுமொழி மேல் வைப்பு (57) நூலும் கூறுவனவற்றிலிருந்து இவ்வுண்மை தெற்றென விளங்கும்.

நூல்களை எல்லாம் படிப்பதின் பயன் "அறம்பொருள் இன்பம் வீடு அடைதல் நூற்பயனே" என்பதாம். அம்மைக்கு வீடு, நன்கு அடையத்தக்க பொருளாயினும் இம்மைக்கு அடையத் தக்கது சித்தசாந்தியேயாகும். அதனாற்றான் திருமந்திரம் (4) சித்தசாந்தி என்னும் பொருளிலும் சித்தாந்தம் என்ற சொல்லை ஆண்டிருக்கிறது.

சித்தாந்தத்து வேட்கைவிடும் (திருமந்திரம் 1702) என்பதில் இப்பொருள் கொள்ளுமாற்றினைக் காண்க.

அப்பால் இம்மைக்குப் பயன் அமைதி ஏற்படுத்துவது போன்று மறுமைக்கு இன்பம் கிடைக்கவும் சித்தாந்தம் வழிவகுக்கிறது. அதனையே சிவானுபூதி என்கிறோம். அதாவது தளையினீங்கிச்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவத்தை அனுபவிக்கும் நிலை ஏற்படுகிறது. (5) இச்சிவானு பூதிக்கும் திருமூலர் சித்தாந்தம் என்ற சொல்லையே மேற்கொண்டு கூறியுள்ளார். "தத்துவத்தால் நீங்கிச், சுத்தம் அசுத்தம் தொடரா வகை நினைந்து, அத்தன் பரன்பால் அடைதல் சித்தாந்தமே" (திருமந்திரம் 2373) என்னும் பாடலில் இப்பொருண்மை பொதிந் துள்ளதைக் காணலாம்.

இவ்வாறு சித்தாந்தம் என்னும் சிறப்புப் பொருளாய சமயக் கொள்கையை முதலில் நிலைநாட்ட வந்ததாயினும் பிற்காலத்து இது (6) கொள்கை என்னும் அளவில் பொதுப் பொருளாயும் மக்க ளிடையே பயிலப்பட்டுவருகிறது.

"ஈ. வெ. ரா. பெரியார் சித்தாந்தம் தற்போது ஒன்றும் புதிதன்று. முற்காலத்து உலோகாயதர் என்பவரும் அச்சித்தாந் தத்தையே கொண்டிருந்தனர்" என்று இச்சொல் கொள்கை என்னும் பொருளில் அமையுமாறு பலரும் வழங்கலாயினர். "சித்தாந்தம் யாவும் செய்யும் முறைப்படியே" எனப் பிற்கால நூலாய சித்திரபுத்திர நாயனார் கதையிலும் (பக்கம் 47) இப் பொருளில் ஆட்சி வந்துள்ளதைக் காணலாம்.

பொதுவாகச் சித்தாந்தம் என்ற சொல் பாமரர்கள் நடுவில் கொள்கை என்ற பொருளில் வழங்கப்பட்டதாயினும் கற்றோர் நடுவே இது சமயச் சார்பு பெற்றே வழங்கப்பெறுகிறது. முதலில் சைவத்துக்குரிய தனிப்பெருஞ் சொல்லாய் விளங்கினும் பிற்காலத் துப் பிறசமயத்தவரும் தங்கள் சமயக் கொள்கைகளுக்கும் இச் சித்தாந்தம் என்னும் சொல்லையே வழங்க முற்பட்டனர். நம்முடன் நெருங்கிய சம்பந்தமுள்ளவர்கள் வைணவர்கள். அவர்கள் நூல் களில் பல்வேறு பொருள்களில் இச்சொல்லை ஆண்டிருத்தலைக் காணலாம். (7) வைணவ சித்தாந்தமாய விசிட்டாத்துவிதம் சித்தாந்தம் என்னும் சொல்லால் குறிக்கப்பட்டிருக்கிறது.

"பூதூர் எதிபதி சித்தாந்த முத்தி" (திருவேங். வண்டுவிடுதூது கண்ணி 41) என்னும் தொடரில் சித்தாந்த முத்தி என்பதில் சித்தாந்தம் என்ற சொல் விசிட்டாத்துவிதம் என்ற அவர்கள் கொள்கையையே குறிக்கிறது. இவ்வாறே பலரும் தத்தம் மதக் கொள்கைகளைக் குறிப்பிடும்போது ஜைன சித்தாந்தம், பௌத்த சித்தாந்தம் என்று கூறும் வழக்க முண்டு.

இவைகளுக்கும் அப்பாற்பட்டு வின்ஸ்லோ அகராதியில் (8) வான சாத்திரம் பற்றிக் கூறும் நூல் ஒன்று எனச் சித்தாந்தத் துக்குப் பொருள் காணப்பெறுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இறுதியாக சித்தாந்தம் என்ற மேலான சொல் (9) பிடிவாதம் என்ற பொருளிலும் வழங்கப் பெறுகிறது. இது மக்களிடையே அவ்வாறு வழுவாகப் பயிலப்பட்டு வந்துள்ளது. இந்தச் சித்தாந்த மாகாது என்றால் இத்தகைய பிடிவாதம் கூடாது எனப்பொருள் படும். உபாத்தியாயர் என்னும் அருமை வடசொல் உவாத்தியார், வாத்தியார் என்றாகி ஆசிரியர் என்னும் பொருளேற்று வந்தது. பிற்காலத்து வாத்தியாரே என்று கேட்கும்போதே வெறுப்பூட்டத் தக்க நிலையில் பாமரர் வாய்ப்பட்டுத் தகாதவன் என்று பொருள் கொள்ளும் நிலையில் இழிநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. அதனைப் போன்றே இச்சித்தாந்தம் என்னும் சொல்லின் கதியும் பிற்காலத்து ஏற்பட்டுவிட்டது. நாம் சொற்பிறப்பு வரலாறு பற்றி ஆய்ந்து நல்லன கொண்டு அல்லன களைந்து சொற்குற்றம் ஏற்படாமலும், சொற்களை இழிநிலைக்குத் தள்ளாமலும் விழிப்பாயிருந்து காத்து நம்முன்னோர் மேற்கொண்ட பொருள்களைப் பாதுகாத்து அவர்கள் வழிநடப்போமாக.

குறிப்பு : இக்கட்டுரை 1989 நவம்பர் சித்தாந்தத்தில் வெளி வந்தது.

தொன்மையும் பெருமையும் திண்மையும் நன்மையும் உடைய நமது சைவ சமயம் தளர்ந்த போதெல்லாம் தோன்றி நிறுத்திய சமயாசிரியர்களைப் போலவே நம் தவப் பயன் எனத்தோன்றிய தவத்திரு ஞானியார் அடிகள் திரு மறைமலை யடிகள் முதலிய பெரியோர்களது நன்முயற்சியால் ஐம்பத்திரண்டு ஆண்டுகளுக்கு முன் சைவ சித்தாந்த மகாசமாஜம் என்னும் இவ்வமைப்பு நாம் செய்த புண்ணியத்தின் பயன் எனத் தோன்றியது.

ஸ்ரீமத் சிவஞானபாலய சுவாமிகள் 29-12-58

53ஆம் ஆண்டுவிழா ஆசிமொழி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சைவசித்தாந்தப் பெருமன்றத்தின் தனிப்பெரும் பண்புகள்

திரு. கொ. நீ. சிங்காரவேலு, எம்.ஏ., சமாஜச் செயலாளர்

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் தனிப் பண்புகளை ஆராயு முன் சைவத்தின் தனிப் பண்புகளை ஓரளவு அறிந்து கொள்ள வேண்டும்.

மனிதனுக்கு இரண்டு பண்புகள் உண்டு. ஒன்று உணர்ச்சி, மற்றொன்று அறிவு. உலக நடைக்கே இரண்டு பண்புகளும் தேவை. அறிவில்லாத உணர்ச்சி பாகனில்லாத மதயானையைப் போன்றது. உணர்ச்சியில்லாத அறிவைத் திருவள்ளுவர் பின்வருங் குறளில் கண்டித்துள்ளார்:

> "அரம்போலுங் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
> மக்கட்பண் பில்லா தவர்."

2. சமயங்கள் பல்வேறு வகைப்பட்டன. சில சமயங்கள் உணர்ச்சி வயப்பட்டன. வடக்கேயுள்ள சில வைணவ மதங்கள் வெறும் பக்திப் பரவசத்தை அடிப்படையாகக் கொண்டன. சில வைணவ பஜனைகளும் தீவிர உணர்ச்சியை ஊட்டுவனவாக இருக் கின்றன. உணர்ச்சி எவ்வளவுக்கெவ்வளவு தீவிரமாகவும் நுட்ப மற்றதாகவும் இருக்கின்றதோ அவ்வளவுக்கவ்வளவு விரைவில் அது மறைந்துவிடும். அதனால் நிரந்தரமான பயன் ஏற்படாது. வாழ்க்கைக்கும் அந்த நிலைக்கும் சம்பந்தமில்லாமல் நின்றுவிடும். வேதாந்த மதம் இதற்கு நேர்மாறானது, அது வெறும் உணர்ச்சி யற்ற அறிவுக்கே முதன்மை தருகிறது. அதனாற்றான் பயனற்ற தத்துவ விசாரணை "வறட்டு வேதாந்தம்' என்று சொல்லப் படுகிறது.

3. சைவ சமயம் இவ்விரண்டு கோடிகளுக்கும் இடைப்பட்ட நிலையில் உள்ளது. சைவத்திற்குத் திருமுறைகளும் சாத்திரங் களும் இரண்டு கண்களாயிருக்கின்றன. திருமுறைகள் உணர்ச்சி யோடு இறைவன் புகழைப் பாடுகின்றன, சாத்திரங்கள் முப் பொருள்களின் தன்மைகளையும் தொடர்பையும் அறிவு கொண்டு ஆராய முற்படுகின்றன. ஆனால் இவ்விரண்டு முறைகளும் தனித்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தனியே கோடிட்டுப் பிரிக்கக் கூடியவைகள் அல்ல. திருமுறைகளில் ஒன்றாகிய திருமூலர் 'திருமந்திரம்' சாத்திரக் கருத்துக்களைச் சாத்திர முறையிலேயே கூறுகின்றது. சாத்திர நூல்களிலும் சில தோத்திரப்பாக்கள் உள்ளன. மற்றும், தேவார திருவாசகங்களில் சாத்திரக் கருத்துக்கள் ஆங்காங்கு இலைமறை காய்களாகவும், வெளிப்படையாகவும் உள்ளன.

4. தேவார திருவாசகங்களாகிய முதல் எட்டுத் திருமுறை களிலேயே உணர்ச்சி ஒரு தன்மைத்தாக இல்லை. திருவாசகத்தில் நுட்பமான உணர்ச்சி உச்சத்தை அடைந்துள்ளது. மணிவாசகர், பல இடங்களில் இறைவனை யடையத் துடிதுடித்துக் கொண் டிருக்கும் ஆன்மாவிற்கு உடம்பே தடையாக இருப்பதைச் சித்தரிக் திருக்கிறார்; 'எனைச் செத்திடப் பணியாய்' அறுக்கிலேன் உடல் துணிபட' 'பொறுக்கிலேன் உடல்' என்பது போன்ற வாசகங்கள் பல காணலாம். திருஞானசம்பந்தர் தேவாரத்தில் வேறு முறை யைப் பார்க்கிறோம். அவர் பாடல்களில் உணர்ச்சியின் வேகம் இல்லை. இதை மிகைப்படுத்தி ஒரு ஆங்கிலேயர்', There is not very much of heart—religion in them' (இவர் பாடல்களில் அதிக உணர்ச்சிச் சமயம் இல்லை) என்று கூறுகிறார். சம்பந்தர் இயற்கைக் காட்சிகளைச் சுவைத்துப் பாடுகிறார். இவ்வுலகத் திலேயே அமைதி காண்கிறார். அவர் உள்ளக்கிடையைப் பின்வரும் செய்யுள் பிரதிபலிக்கிறது:

"மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கியாதுமோர் குறைவிலை
கண்ணில்நல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை யிருந்ததே"

சைவத்தின் உயிர் நாடியை மேற்குறித்த தேவாரச் செய்யுள் சுருங்கக் கூறுகிறது. இச்செய்யுள் 'God is in his Heaven, all is well with the world' என்ற ஆங்கிலக் கவிஞர் பிரௌனிங் வரி களை நமக்கு ஞாபகப்படுத்துகின்றது.

5. தேவாரம் ஓதும் முறையிலேயே சைவத்தின் பண்பைப் பார்க்கிறோம். தேவாரப் பண்கள் அடக்கமான, நுட்பமான, பரபரப்பற்ற, அறிவோடு கூடிய, உணர்ச்சியை ஊட்டுகிறது. சிறிய தாளங்களின் விளிம்புகள் மெல்லக் கொஞ்சுகின்றன. வீணை தடவப்படுகின்றது. நம் உள்ளங்களும் மெல்லத் தடவப் பட்டு நிரந்தரமாகப் பண்படுத்தப்படுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

6. சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் பண்புகள் மேற்குறித்த சைவத்தின் தனிப் பண்பை அடிப்படையாகக் கொண்டவை. சமாஜம் திரு. மறைமலையடிகளாரால், ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் திருமடத்தில் தோற்றுவிக்கப் பெற்றது. முன்னையவர் தீவிரவாதி. தனித் தமிழ் இயக்கத்தைத் துவக்கிய வித்தகர். பின்னையவர் சாந்தமூர்த்தி; சமரசஞானி. யாவரையும் தழுவிச் செல்லும் இதயம் படைத்தவர். ஒருவர் அறிவுச்சுடர்; மற்றையவர் அன்புக்கடல் என்று பொதுவாகக் கூறலாம். இருவரும் தமிழ், வடமொழி ஆகிய இரு மொழிகளிலும் நிகரற்ற புலமை பெற்றவர்கள். முன்னையவர் ஆங்கிலக் கடலின் ஆழத்தையுங் கண்டவர். இவ்விருவர்களும் சமாஜத்திற்கு இரு கண்களாக அமைந்தார்கள்.

7. திரு ஞானியார் சுவாமிகளை இராமகிருஷ்ணருக்கு ஒப்பிட்டால், திரு. மறைமலையடிகளை விவேகாநந்தருக்கு ஒப்பிடலாம். திருமறைமலை அடிகளார் முற்போக்குச் சக்திக்கு அறிகுறி. திருஞானியார் சுவாமிகள் பழமை பாராட்டும் பண்பிற்கு அறிகுறி. இவ்விரண்டு பண்புகளும் சமாஜத்தில் உண்டு. சமாஜம் 'முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம் பொருளாய், பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியதாக இருக்கிறது.

8. சமாஜத்திற்குள்ள மற்றொரு முக்கிய சிறப்பு, தத்துவத் திற்கு முக்கியத்துவம் கொடுப்பது. சைவ சித்தாந்த மகா சமாஜம் என்ற பெயரே இச்சிறப்பை வெளிப்படுத்துகிறது. சமாஜத்தின் முதுகெலும்பு சாத்திரங்களென்றும், தசை, நரம்பு, முதலியன தோத்திரங்களென்றும் பொதுவாகக் கூறலாம். முன்னரே கூறியபடி, சாத்திரங்கள் அறிவுப் பண்பையும் தோத்திரங்கள் அன்புப் பண்பையும் குறிக்கின்றன. இவ்விரண்டை யும் இரண்டு கண்களாகப் போற்றுகின்றது சமாஜம்.

9. சைவ சித்தாந்த மகா சமாஜம் கற்றோரேத்தும் பேரவை யாக இருந்து வந்திருக்கிறது. சைவத்தின் உயிர் நாடியாக உள்ள பண்புகளையே சமாஜம் போற்றி வளர்த்து வந்திருக்கிறது. எச் சமயத்திலும், உள்ளீடான, முக்கிய பாகங்கள் உண்டு. பிற்சேர்க்கை யான, உயிரற்ற சடங்கியற் பாகங்களும் உண்டு. முன்னையவை என்றும் மாறாதவை. பின்னையவை காலச் சூழ்நிலைகளுக்கேற்ப மாறக்கூடியவை. சமாஜம் வெளித் தோற்றங்களுக்கும் வீண்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆரவாரங்களுக்கும் மதிப்புக் கொடுப்பதில்லை. உலகம் சுருங்கி, பல கருத்துக்கள் பல திசைகளிலிருந்து புயற்காற்றென வீசிக் கொண்டிருக்கும் இக்காலத்தில், சைவத்தின் உயிர் நாடியான பாகங்களைப் போற்றி வளர்ப்பதால்தான் சைவமும் சமாஜமும் வளரும்.

10. மேலும் சமாஜம், பொதுமக்கள் ஸ்தாபனம். ஜனநாயக முறையில் இயங்கும் சங்கம். இதற்கு நிரந்தரத் தலைவர்கள் கிடையாது. அறிவினாலும், தொண்டினாலும், எவரும் தலைவ ராக வரலாம். சமாஜம், சைவத்தின் உயர்ந்த கொள்கைகளைப் பிரதிபலிக்கும் நிறுவனம். மேல் விரித்துரைத்தவாறு சமாஜத்திற் கெனத் தனிப்பண்புகள் உண்டு. அப்பண்புகளைக் கைவிடாமல் சமாஜம் சைவத்தைப் பேணும் எல்லாத் தலைவர்களையும், எல்லா ஸ்தாபனங்களையும் தழுவிச் செயலாற்றும். இவ்வாற்றால் சிறந்த சைவ சித்தாந்த மகா சமாஜத்தைப் போற்றி வளர்ப்பது சைவப் பெருமக்களின் கடமையாகும்.

வாழ்க சைவம்! வளர்க சமாஜம்!!

குறிப்பு : இக்கட்டுரை சைவ சித்தாந்த மகா சமாசத்தின் வைர விழா மலரில் வெளிவந்தது.

நமது சைவ சித்தாந்த மகாசமாஜம் சென்ற ஐம்பத்து மூன்று ஆண்டுகளாக நம் தமிழகத்தே நிலவிச் செந்தமிழ் வளர்ச்சிக்கும் அதன் பயனாகவுள்ள திருநெறி எனப்படும் சிவநெறி விளக்கத்திற்கும் அரும்பெரும் பணிகள் பல ஆற்றி வந்துள்ளது.

53ஆம் ஆண்டுவிழாத் தலைமையுரை (27-12-58)

க. வச்சிரவேல் முதலியார்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சைவ சித்தாந்தப் பெருமன்ற வரலாறு, கொள்கைகள், தொண்டுகள்

ந. ஒளியரசு

தோற்றுவாய்

சைவ சித்தாந்தப் பெருமன்றம் என்ற இவ்வமைப்பு முன்பெல்லாம் சைவ சித்தாந்த மகாசமாசம் என்ற பெயரில் வழங்கி வந்தது. இந்த நிறுவனம் 7-7-1905 அன்று திருப்பாதிரிப்புலியூர் தவத்திரு ஞானியார் சுவாமிகள் முன்னிலையில் தவத்திரு மறைமலை அடிகளால் தொடங்கப் பெற்றது.

வளர்த்த சான்றோர்கள்

இப்பெருமன்றத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டும், மாநாடுகளில் தலைமை ஏற்றும் ஏனைய வழிகளிலும் இந்த நிறுவனத்தைப் பேணிக்காத்து வளர்த்த சான்றோர்கள் வருமாறு:

ஜே. எம். நல்லசாமிப் பிள்ளை
தமிழ்த் தென்றல் திரு. வி. க.
ஈழம் அமைச்சர் சர். பொன்னம்பலம் இராமநாதன்
பூவை. கல்யாண சுந்தர யதீந்திரர்
தமிழக முன்னாள் அமைச்சர் சர். டி. என். சிவஞானம் பிள்ளை
கா. சுப்பிரமணியப்பிள்ளை
நாவலர். ந. மு. வேங்கடசாமி நாட்டார்
பண்டிதமணி மு. கதிரேசஞ் செட்டியார்
சிவக்கவிமணி சி. கே. சுப்பிரமணிய முதலியார்
கோவைக்கிழார். சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார்
சைவப்பாதிரியார் ச. சச்சிதானந்தம் பிள்ளை
நாவலர் சோமசுந்தர பாரதியார்
திவான்பகதூர். கி. தெய்வ சிகாமணி முதலியார்
யாழ்நூலாசிரியர் விபுலாந்த அடிகள்
தமிழவேள். த. வே. உமா மகேசுரம் பிள்ளை
ம. பாலசுப்பிரமணிய முதலியார்
திருமுறைக் காவலர். அ. சோமசுந்தரஞ் செட்டியார்
மலேசியா. கா. இராமநாதஞ் செட்டியார்
திருமுருக. கிருபானந்த வாரியார்
திரு. மு. அருணாசலம்
திரு. தி. கி. நாராயணசாமி நாயுடு
திரு. புலவரேறு ந.ரா. முருகவேள்
திரு. பெ. திருஞானசம்பந்தம்
முதலியோர் பலர்;

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கோட்பாடுகள்

இவ்வமைப்பின் முக்கியமான கோட்பாடுகளாவன :

(அ) நல்லொழுக்க வாழ்க்கைக்குக் கடவுள் உண்டென்னும் கொள்கை இன்றியமையாதது.

(ஆ) சைவ சமயம் அறிவு ஆராய்ச்சிக்குப் பொருத்தமானதாயும். அன்புநெறியினையே அடிப்படையாகக் கொண்டதாயும் இருத்தலின் அஃது எக்காலத்துக்கும், எச்சமூக நிலைக்கும் இசைந்ததாய் இருக்கிறது.

(இ) பதி, பசு, பாசம் (இறை, உயிர், தளை) என்னும் முப்பொருள் உண்மையையும், அப்பதி சிவமே என்பதையும் கடைப்பிடித்தல் சைவ சமயத்தின் இன்றியமையாத கோட்பாடாகும்.

(ஈ) சைவ உணவு கொள்ளுதல், சிவசின்னங்கள் அணிதல் என்பவற்றோடு, சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு மார்க்கங்களில், அக்கோட்பாடுகளுக்கு இசைய ஒழுகுதல் சைவ சமயத்தின் வளர்ச்சிக்கு இன்றியமையாத கடமைகளாகும்.

(உ) சைவ சமயத்திற்குப் பிரமாண நூல்களாவன:—பன்னிரு திருமுறைகளும், பதினான்கு மெய்கண்ட சாத்திரங்களும் அவைகளின் கருத்திற்கு மாறுபடாத வேத சிவாகமப்பகுதிகளும் ஆகும்.

(ஊ) சைவ சமயிகள், சைவ சமயக் கோட்பாடுகளை மறுக்காத எவ்வித ஆராய்ச்சியும் செய்தல் சைவ சமய விரோதமாகாது.

குறிக்கோள்கள்

இவ்வமைப்பின் தலையாய நோக்கமாவது, சைவ சித்தாந்த சமயத்தையும், அதன் தோத்திர நூல்களையும், அதன் பிழிவான தத்துவ சாத்திர முடிவுகளையும் பரவச் செய்தலாகும்.

பணிகள்

(1) ஆண்டுக்கு ஒருமுறை இந்தியாவில் எப்பகுதியிலேனும், தமிழ் வழங்கும் இலங்கை, பர்மா, மலேசியா நாடுகளிலும் மாநாடுகள் நடத்துதல்.

(2) இப்பெருமன்றத்தின் கிளைகளை அமைக்க உதவி அதன் வழி சைவ சமயத்தை வளர்த்தல்.

(3) சைவ சமய தோத்திர, சாத்திர நூல்களையும், அதைச் சார்ந்த நூல்களையும் அச்சிட்டு அடக்க விலையில் வழங்குதல்.

(4) இலவசத் தேவார இசைப் பயிற்சி வகுப்புகள் நடத்துதல்.

(5) தேவாரப் பயிற்சியில் சிறந்து விளங்கும் மாணவ மாணவிகளுக்கு ஊக்கப் பரிசுகள் வழங்குதல்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாநாடுகள்

ஆண்டுக்கு ஒருமுறை சைவர் மாநாடு, சைவ இளைஞர் மாநாடு, சைவ மங்கையர் மாநாடுகளை நடத்தி வருகிறது. இது வரை தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களிலும், வாரணாசியிலும் (காசி) இலங்கை முதலிய இடங்களிலும் இத்தகைய மாநாடுகள் நடத்தப் பெற்றன.

சித்தாந்தம் திங்கள் இதழ்

தமிழில் 'சித்தாந்தம்' எனும் திங்கள் இதழ் நடத்தி வருகிறது. கடந்த 63 ஆண்டுகளாகத் தொடர்ந்து வெளிவரும் இவ்விதழில், சாத்திரம், தோத்திரம், பாடல்தலம், திருக்குறள், சிறுவர் பகுதி எனும் பல்வேறு பகுதிகளில், அறிஞர் பெருமக்களின் கட்டுரைகள் வெளியிடப்படுகின்றன.

சைவ சித்தாந்தா (ஆங்கிலம்)

ஆங்கிலத்தில் 'சைவ சித்தாந்தா' என்னும் முத்திங்கள் இதழ் சென்ற 25 ஆண்டுகளாக நடத்தப்பட்டு அதில் சைவ சாத்திரம், தோத்திரம் பற்றிய அறிஞர்களின் அரிய கட்டுரைகள் வெளியிடப் படுகின்றன.

அறக்கட்டளைகள்

இம்மன்றத்தில் இதுவரை 62 அறக்கட்டளைகளை பெரு மன்றத் தலைவர் திரு. கி. இல, பழநிசுவாமி, துணைத் தலைவர் திரு. சொ. நீ. சிங்காரவேலு உள்ளிட்ட சைவ அன்பர்கள் பலர் நிறுவியுள்ளார்கள். இக்கட்டளைகளில் உள்ள வைப்பு நிதிகளின் மூலம் கிடைக்கும் வட்டித் தொகைகளைக் கொண்டு, சமயாச் சாரியர், சந்தானாச்சாரியார், நாயன்மார்கள், சேக்கிழார் சுவாமிகள், அருணகிரிநாதர், குமரகுருபரர், தாயுமானவர், பட்டினத்தார், வள்ளலார், பாம்பன் சுவாமிகள் முதலிய அருளாளர்களின் விழாக்கள் ஆண்டு தோறும் நடத்தப்படுகின்றன.

ஆர். வி. கந்தையா அறக்கட்டளை

மலேசியா அன்பர் ஆர். வி. கந்தையாப் பிள்ளை அவர்கள் ரூ. 1,00,000 (ஒரு இலட்சம்) மூலதனம் வைத்துள்ளார். அவ்வைப்பு நிதியிலிருந்து சைவ சித்தாந்த நூல்களை அச்சிட்டு மலிவு விலையில் வழங்கி வருவது ஒரு சிறப்பு அம்சமாகும்.

தொடர் சொற்பொழிவுகள்

சிவநேயச் செல்வர் திரு. ஆ. இராசரத்தின முதலியார், கயிலைப் புனிதர் டாக்டர் அ. மாணிக்கம் ஆகியோர்கள் நல்லாதரவில் திங்கள் தோறும் ஒருநாள் "சிவத்தலப் பெருமை" என்ற தலைப்பில் அனைத்துப் பாடல் பெற்ற சிவாலயங்கள் பற்றி டாக்டர் கு. சுந்தரமூர்த்தி சுமார் மூன்று ஆண்டுகள் தொடர் சொற்பொழிவு செய்ததில் அன்பர்கள் பலர் கலந்து கொண்டு, கேட்டு இன்புற்றுப் பயன் பெற்றனர்.

(ஆ) தற்போது கயிலைப் புனிதர் டாக்டர். அ. மாணிக்கம், செனாய்நகர் திரு. வி. சம்பந்தம் பி.இ., ஆகியோரின் நல்லாதரவில் திங்கள் தோறும் இரண்டு நாட்கள், முறையே "திருவிளையாடல்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புராணம்''; ''திருவாசகம்'' பற்றி டாக்டர் கு. சுந்தரமூர்த்தி தொடர் சொற்பொழிவு நடத்தி வருகிறார். அன்பர்கள் பலர் இதில் கலந்து கொண்டு பயன் பெற்று வருகின்றனர்.

இலவசத் தேவார வகுப்பு

பெருமன்ற அலுவலகத்தில் தக்க ஆசிரியரைக் கொண்டு இலவசத் தேவார இசைப்பயிற்சி வகுப்பு நடைபெற்று வருகிறது. மேலும் சில பள்ளிகளிலும், பூவிருந்தவல்லி பார்வையற்ற அரசினர் மகளிர் விடுதியிலும் தக்க ஆசிரியர்களைக் கொண்டு இலவசத் தேவார இசைப்பயிற்சி வகுப்பும், பெரிய புராண வகுப்பும் வாரந் தோறும் நடத்தப்படுகின்றன.

நாயன்மார் வழிபாடு

அன்பர்கள் சிலரின் நல்லாதரவில் பெருமன்ற அலுவலகத்தில் திங்கள் தோறும் ஆங்கில மாதக் கடைசி சனிக்கிழமை மாலையில் நாயன்மார் வழிபாடு நடைபெற்று வருகிறது. திருமுறை இசை, நாயன்மார் வரலாறு கூறுதல், கூட்டுவழிபாடு, அன்னம்பாலிப்பு என இந்நிகழ்ச்சி சிறப்பாக நடை பெறுகின்றது.

நால்வர் விழா, சேக்கிழார் விழா

ஆண்டுதோறும் ஆடித்திங்களில், நால்வர் விழா, சேக்கிழார் விழா, திருமுறைக்காவலர். அ. சோமசுந்தரம் செட்டியார் நினைவு விழா, தேவார வகுப்பு ஆண்டு விழா ஆகியவை மூன்று நாட்கள் சிறப்பாக நடத்தப்படுகின்றன. இவ்விழாக்களின் அங்கமாகத் திருமுறை இசையரங்கு, கருத்தரங்கு, ஓதுவார்கள் குழுவுடன் திருமுறை ஊர்வலம், அன்னம்பாலிப்பு, இசைப்பயிற்சி மாணவர் களுக்கு ஊக்கப்பரிசு வழங்குதல் முதலியன நிகழ்கின்றன.

முற்றோதல்

விரும்பும் அன்பர்கள் இல்லத்தில் திருமுறைகள் முற்றோதல் அவ்வப்போது நடந்து வருகின்றது. இவ்வாறு 1 முதல் 12 திருமுறைகளும் தொடர்ந்து ஓதப்பெற்று தற்போது இரண்டாவது கட்டமாக 10ஆம் திருமுறைவரை முற்றோதல் செய்யப் பட்டுள்ளது.

அன்னதானம்

இங்கிலாந்திலுள்ள சைவ அன்பர் ஒருவர் நிறுவியுள்ள அறக் கட்டளையின் சார்பிலும், மன்ற அன்பர் ஒருவரின் ஆதரவிலும், ஒவ்வோர் ஆண்டும் மயிலையில் நடைபெறும் அறுபத்துமூவர் விழாவில் பொது மக்களுக்கு உணவுப் பொட்டலங்கள் வழங்கப்படு கின்றன.

சிவராத்திரி விழா

வெள்ளக்கோயில் அன்பர் கு. அருணாசலம் நிறுவியுள்ள அறக் கட்டளையின் சார்பில் ஆண்டுதோறும் மயிலை அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலில் சிவராத்திரி விழா, திருமுறை இசை, சொற்பொழிவு, அன்பர்களின் நான்கு கால சிவபூசை, அன்பர் களுக்குப் பிரசாதம் வழங்குதல் முதலின நடைபெறுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காட்சி விளக்கம்

மாநாடு நடைபெறும் இடங்களில் ஒரு சைவ சமயப் பொருட் காட்சி அமைத்து சமய விளக்கம் செய்யப்படுகின்றது.

தலப்பயணம்

மாநாடு நடைபெற்ற பின்னர் தனிப்பேருந்துகளில் அன்பர் களைப் பாடல் பெற்ற சிவத்தலங்களுக்கு அழைத்துச் சென்று முறையாக வழிபாடு செய்ய ஏற்பாடு செய்யப்படுகின்றது.

சிவதீக்கை

மாநாட்டு நிகழ்ச்சியின் ஓர் அங்கமாக விரும்பும் அன்பர் களுக்குத் தக்க ஆசிரியரைக் கொண்டு சிவதீக்கை செய்து வைக்கப் படுகின்றது.

பணியாளர்கள்

இப்பெருமன்றத்தின் தலைவர், செயலாளர் உள்ளிட்ட நிர்வாகக் குழுவினர் ஒவ்வொரு ஆண்டும் பொதுக்குழுவினரால் தேர்ந்தெடுக்கப்பட்டு சங்கப்பதிவாளருக்குத் தெரிவிக்கப்படுகிறது.

வரவு செலவு கணக்கு

இப்பெருமன்ற வரவு செலவுக் கணக்குகள் ஆண்டு தோறும் தணிக்கையாளரால், தணிக்கை செய்யப்பட்டு, பொதுக்குழுவில் ஒப்புதல் பெறப்பட்டுச் சித்தாந்தம் இதழில் வெளியிடப்படு கின்றது.

கட்டிட வாரியம்

ருக்மணிகுக்கர், திருமுறைக்காவலர் திரு. அ. சோமசுந்தரம் செட்டியார் நிறுவியுள்ள அறக்கட்டளையின் வருவாய் இம்மன்றத் தின் பணிகளுக்குப் பெரிதும் துணை செய்கிறது. இதன் வருவாய் இந்த நிறுவனத்தின் அலுவலகக் கட்டிடத்திற்கு வாடகை கொடுப்பதற்கும், சைவ நூல்கள் வெளியிடுவதற்கும், இலவசத் தேவார வகுப்புகள் நடத்துவதற்கும் செலவு செய்யப்படுகின்றது.

உறுப்பினர் கட்டணம்

ஆண்டுச் சந்தா ரூ 25/-
ஆயுள் சந்தா ரூ 250/-

குறிப்பு : உறுப்பினர்களுக்கு “சித்தாந்தம்” எனும் திங்கள் இதழ் இலவசமாக வழங்கப்படுகின்றது.

“சைவ சித்தாந்த ஆங்கில முத்திங்கள் இதழ்

ஆண்டுச் சந்தா ரூ 15/-
ஆயுள் சந்தா ரூ 150-/

வேண்டுகோள்

இப்பெருமன்றம் தோன்றி 85 ஆண்டுகளாயினும் இதற்கெனச் சென்னையில் ஒரு கட்டிடம் இதுவரை ஏற்படாதது பெருங்குறை யாகும். சைவ அன்பர்கள் அனைவரும் இப்பெருமன்றத்தில் உறுப் பினர்களாகவும் நிதிமிகுந்தவர்களும். புரவலர்களும், இவ்வமைப்பு சிறப்புறத் திகழ சென்னையில் ஒரு கட்டிடம் அதற்கென அமையப் பேராதரவு நல்கவும் அதன் மூலம் மேன்மை கொள் சைவநீதி தழைக்க ஆக்கமும் ஊக்கமும் அளித்து உதவிட வேண்டுகிறோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காட்சி விளக்கம்

மாநாடு நடைபெறும் இடங்களில் ஒரு சைவ சமயப் பொருட் காட்சி அமைத்து சமய விளக்கம் செய்யப்படுகின்றது.

தலப்பயணம்

மாநாடு நடைபெற்ற பின்னர் தனிப்பேருந்துகளில் அன்பர்களைப் பாடல் பெற்ற சிவத்தலங்களுக்கு அழைத்துச் சென்று முறையாக வழிபாடு செய்ய ஏற்பாடு செய்யப்படுகின்றது.

சிவதீக்கை

மாநாட்டு நிகழ்ச்சியின் ஓர் அங்கமாக விரும்பும் அன்பர்களுக்குத் தக்க ஆசிரியரைக் கொண்டு சிவதீக்கை செய்து வைக்கப் படுகின்றது.

பணியாளர்கள்

இப்பெருமன்றத்தின் தலைவர், செயலாளர் உள்ளிட்ட நிர்வாகக் குழுவினர் ஒவ்வொரு ஆண்டும் பொதுக்குழுவினரால் தேர்ந்தெடுக்கப்பட்டு சங்கப்பதிவாளருக்குத் தெரிவிக்கப்படுகிறது.

வரவு செலவு கணக்கு

இப்பெருமன்ற வரவு செலவுக் கணக்குகள் ஆண்டு தோறும் தணிக்கையாளரால், தணிக்கை செய்யப்பட்டு, பொதுக்குழுவில் ஒப்புதல் பெறப்பட்டுச் சித்தாந்தம் இதழில் வெளியிடப்படுகின்றது.

கட்டிட வாரியம்

ருக்மணிகுக்கர், திருமுறைக்காவலர் திரு. அ. சோமசுந்தரம் செட்டியார் நிறுவியுள்ள அறக்கட்டளையின் வருவாய் இம்மன்றத்தின் பணிகளுக்குப் பெரிதும் துணை செய்கிறது. இதன் வருவாய் இந்த நிறுவனத்தின் அலுவலகக் கட்டிடத்திற்கு வாடகை கொடுப்பதற்கும், சைவ நூல்கள் வெளியிடுவதற்கும், இலவசத் தேவார வகுப்புகள் நடத்துவதற்கும் செலவு செய்யப்படுகின்றது.

உறுப்பினர் கட்டணம்

ஆண்டுச் சந்தா ரூ 25/-
ஆயுள் சந்தா ரூ 250/-

குறிப்பு : உறுப்பினர்களுக்கு "சித்தாந்தம்" எனும் திங்கள் இதழ் இலவசமாக வழங்கப்படுகின்றது.

"சைவ சித்தாந்த ஆங்கில முத்திங்கள் இதழ்

ஆண்டுச் சந்தா ரூ 15/-
ஆயுள் சந்தா ரூ 150-/

வேண்டுகோள்

இப்பெருமன்றம் தோன்றி 85 ஆண்டுகளாயினும் இதற்கெனச் சென்னையில் ஒரு கட்டிடம் இதுவரை ஏற்படாதது பெருங்குறையாகும். சைவ அன்பர்கள் அனைவரும் இப்பெருமன்றத்தில் உறுப்பினர்களாகவும் நிதிமிகுந்தவர்களும். புரவலர்களும், இவ்வமைப்பு சிறப்புறத் திகழ சென்னையில் ஒரு கட்டிடம் அதற்கென அமையப் பேராதரவு நல்கவும் அதன் மூலம் மேன்மை கொள் சைவநீதி தழைக்க ஆக்கமும் ஊக்கமும் அளித்து உதவிட வேண்டுகிறோம்.

In Public domain. Digitiz

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இப்பெருமன்ற வெளியீடுகள்

(அடக்க விலைப் பதிப்புகள்)

		ரூ.	பை
1.	கூட்டு வழிபாட்டுப் பாமாலை	1	00
2.	பஞ்சபுராணத் திரட்டு	0	70
3.	முப்பொருள் இயல்பு	2	00
4.	சிவாலய வழிபாட்டுப் பாடல் திரட்டு	1	00
5.	முருகன் முந்நூல்	1	50
6.	சமாஜ பவழ விழா மலர்	2	50
7.	சிவஞானபோதம் தமிழ் முதல் நூலே	0	50
8.	பெருவிண்ணப்பம்	0	25
9.	கங்கையைச் சடைமேல் வைத்த திருமுறைத் திரட்டு	0	75
10.	சந்தானாச்சாரியார் வரலாறு	0	75
11.	திருமுறைப்பாராயணப் பதிகத்திரட்டு	0	75
12.	திரு.வி.க.வின் சிவஞான பாடிய அணிந்துரை	0	50
13.	போற்றித் திருவகவல்	1	00
14.	அம்பை தோத்திரத் திரட்டு	1	25
15.	முதல் திருமுறை	10	00
16.	முத்து விழா மலர்	10	00
17.	உண்மை விளக்கம் (ஆங்கிலம்)	5	00
18.	திருப்புகழில் சைவசித்தாந்தம்	1	00
19.	சிவபெருமான் திரு மும்மணிக்கோவை உரையுடன்	5	00
20.	திருமுறைத் திருமணம் செய்முறை விளக்கத்துடன்	6	00
21.	சிவஞான போதச் சிற்றுரை விளக்கம்	60	00
22.	மழைவேண்டல் பதிகம்	1	25
23.	கால காலர் திருமுறை	1	75
24.	11ஆம் திருமுறை	20	00
25	நால்வர் அம்மானை	1	00
26.	திருப்பாசூர் பதிகங்கள் (உரையுடன்)	1	00
27.	நமச்சிவாயத் திருப்பதிகங்கள்	1	00
28.	சிவஞானபோதம்—JMN ஆங்கில மொழி பெயர்ப்பு	1	00
29.	திருவலஞ்சுழி மும்மணிக்கோவை உரையுடன்	4	00
30.	சைவ சமய விளக்கம்	1	00
31.	சைவ சமயக் கையேடு	15	00
32.	சுந்தரர் தேவாரம்	20	00
33.	சிவபூசை (சுருக்கமுறை)	1	00
34.	திருவொற்றியூர் திருக்கோயில்கள்	3	00

நூல்களை அஞ்சல்வழி பெற விரும்புவோர் நூல் விலையுடன் அஞ்சல் செலவும் சேர்த்து மணி ஆர்டரில் அனுப்பினால் நூல்கள் அனுப்பி வைக்கப்படும் வி.பி.பி. வழி அனுப்ப இயலாது.